1200. 1190. Nov. 1930 பிரமோதூத௵ கார்த்தி







# ஆனந்த போதி

# ANANDA BODHINI.

Vol. 16. பொருளடக்கம். No. 5.


பக்கம்.

1. கடவுள் வணக்கம் ... 321
2. அரும்பொருள் விளக்கம் ... 322
3. சங்கங்கள் ... 323
4. கல்விச் செய்திகள் ... 326
5. மதுரைமா நகர் ... 330
6. ஆரியசித்தாந்தம், வீரமா நகர் 332, 334
7. தமிழ்மொழியின் பெருமை ... 337
8. "கம்பர் கவி நலமும் மாதர் மன நிலையும்" ... 341
9. செக்கும் அதன் நன்மைகளும் ... 347
10. கனவின் பலன் ... 349
11. தொண்டர்தம் பெருமை ... 353
12. மேனாட்டுத் தத்துவம் ... 356
13. தேவீ சந்திரகுப்தம் ... 360
14. வானக் காட்சி ... 366
15. வேதாந்த சூடாமணி வசனம் ... 369
16. பரோபகாரம், தேவி இந்துமதி 374, 379

மனோ சக்தி ... 382

திருநீலகண்ட நாயனார் ... 385

சித்திர விநோதம், நாவல் 390, 394

பஞ்ச விநோதம், பஞ்சாங்கம் 399, 400




# "ஆனந்தபோதினி"

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, பர்மா, ஸிலோன் ... ... | 1—0—0 |
| | பினாங், ஸிங்கபூர், தென்னாப்பிரிக்கா, பசாரா, மெசபோடோமியா முதலிய வெளி நாடுகளுக்கு | 1—8—0 |
| நடந்துகொண்டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை விலை | | 0—2—0 |
| சென்ற வருடங்களின் தனிச் சஞ்சிகை விலை | | 0—3—0 |

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

(1) சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் **பூரணமாகப் பெயரை** எழுதி யனுப்பவேண்டும்.

(2) சந்தாத் தொகையை முன்னுடிச் செலுத்தியாவது அல்லது வி. பி. யில் பணம் கட்டியாவது பத்திரிகை பெற்றுக்கொள்ளவேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆடிமாத முதல்தான் கணக்கு வைக்கப்பட்டு ஆடி மாத சஞ்சிகை முதல், பத்திரிகை அனுப்பப்படும்.

☞ (3) சஞ்சிகையை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜ் 2—அணு வோடு (18-4-1921 முதல் மணியார்டர் கமிஷன் 10-ரூபா வரையில் 2-அணு வாகையால்) அந்தக் கமிஷன் 2-அணு, வி. பி. க்குத் தபால் சார்ஜ் 0-0-6. ஆக 0-4-6-அதாவது 5-அணு சேர்த்து ரூபா 1-5-0 கட்டி வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினுல் 1-2-0 மட்டுமே யாகும். ஆதலால் முன்னுடி மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக் கொள்வதே நலம். இதைக் கவனிக்கவும்.

(4) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம்மாதம் 15-ம் தேதி வரையில் பார்த்து அதற்கு மேல் அதே மாதம் முடிவிற்குள் அவ்விவரத்தைத் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும். பிறகு தெரிவிப்போர் கிரைய மனுப்பிப் பெறவேண்டும்.

(5) இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புது விலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புது விலாசத்தை யறிவிக்கவேண்டும். இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாம் பொறுப்பாளியல்ல.

(6) **சந்தா நம்பரைக்** குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்பட மாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாளி யல்ல. பதிலை விரும்புவோர் **ரிப்ளை கார்டாவது தபாற் பில்லையாவது** அனுப்பினுலன்றி விடை யளிக்கப்பட மாட்டாது.

(7) வியாசங்களை எழுதுவோர் சுத்தமாக இலக்கணப் பிழையின்றித் தங்கள் உண்மைப் பெயருடன், மத தூஷணை, பிறர் தூஷணை, துரைத்தன விரோதம் முதலியவையின்றியும், பொது ஜனங்கள் விரும்பக்கூடியனவாகவும் எழுதவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| **Life Subscription** ஜீவிய சந்தா | இந்தியா, பர்மா, சிலோன் | ரூபா | 15—0—0 |
| | அன்னிய நாடுகளுக்கு | ,, | 20—0—0 |

*Telephone* No. 3005. *Telegram* :—"Ananda Bodhini," Madras.

**விலாசம்:—நா. முனிசாமி முதலியார், "ஆனந்தபோதினி"**
**6, லாயர் சின்னதம்பி முதலி தெரு, தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.**


ஆசிரியரின்றி ஆங்கிலந் தெரிந்துகொள்ளும்

# ஆனந்த ஆங்கில பாஷா போதினி.

(மூன்றாம் பதிப்பு) **விலை ரூபா 2-0-0**

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1-8-0

எம்.ஏ., எல்.டி. பட்டம் பெற்ற ஆங்கில போதகாசிரியராகிய திருவாளர் எம். ஷண்முக சுந்தர முதலியா ரவர்களால் இயற்றப்பெற்ற உயர்ந்த திருத்தங்களோடும் சிறந்த அமைப்புக்களோடும், நிறைந்த போதனைகளோடும் இப்பதிப்பு வெளிவந்திருக்கிறது.

**800 பக்கங்களுக்குமேல் திக்குகாகிதத்தில் அச்சிடப்பட்டு சீமைகாலிகோ பைண்டு செய்யப்பட்டது.**

பற்பல கதைகளும், பாரதக்கதைகளும், ஸ்ரீ கிருஷ்ணர் சரித்திர சுருக்கமும் அடங்கியது. அவற்றிற்குப் பொருத்தமான அழகிற் சிறந்த 16-ஆப்டோன் படங்களுடன் கூடியது.

இக்காலத்தில் இங்கிலீஷ் இராஜ பாஷையாயிருப்பதால் அதை எல்லோரும் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியமா யிருக்கின்றது, அப்படிப் படிக்காத சிலர், பல சங்கடங்களை அடைகின்றனர். ஆதலின், அத்தகையினர் கற்றுக்கொள்வதற் குதவியாயிருக்கும்படி ஆங்கில பாஷையைத் தமிழ் மக்களுக்கு எளிதிற் போதிக்கும் அரிய போதனுமுறை நூலாகிய இது பலர் வேண்டுகோளுக்கிணங்க வெளிப்படுத்தப் பெற்றிருக்கின்றது.




இதனைச் சிரத்தையுடன் படிப்பவர் பணச் செலவில்லாமலும் வேறெவ்விதக்கஷ்டமில்லாமலும் மிக எளிதில் இங்கிலீஷ் பேசவும் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்ளலாம். ஆயிரக்கணக்கான பணச்செலவு செய்து 10 வருஷம் படிப்பதனுல் எவ்வளவு ஆங்கில தேர்ச்சி யுண்டாகுமோ அவ்வளவு தேர்ச்சியை ஒரு மாதம் அல்லது 40-நாளில் இப்புத்தகத்தின் உதவியைக்கொண்டு அடைந்து, ஆங்கிலத்தை அதிவிரைவில் படித்துக்கொள்ளலாம். மனிதர் தாமே சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளத் தக்க மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாக அமைக்கப்பெற்றிருக்கின்றன.

இதில் இதுவரை வெளிவாரத நூதன பாடமுறைகளெல்லாம் வெளியிடப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு ரூபா முதல் 10 ஆயிரம் ரூபாவரை சம்பளப்பட்டிக் கணக்கு, வட்டிக்கணக்கு, ஒவ்வொரு தேசத்திலும் ஏற்படும் மணிவித்தியாசம், அன்னியதேச நாணயமதிப்பு முதலியனவெல்லாம் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.

மேற்படி தெலுங்கு பதிப்பு விலை ரூபா **2.**

விலாசம்:—ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# பிரபஞ்சவிநோதக்கதைகள்



இந்நூலில் படத்தில் காட்டியபடி எட்டு பெரிய கதைகளிருக்கின்றன. அதில் ஐந்து சகோதரிகளின் சாமர்த்தியமும், சாஹசமும், முழுமோசமும், நாட்டியமும், அதிசயச்செயலும் மிக வேடிக்கையாயிருக்கும்.

இதன் விலை ரூபா 1—0—0

## இனிய செந்தமிழ் நாவல்கள்.

| | ரூ. | அ. | | | |
|---|---|---|---|---|---|
| சுவர்ண சுந்தரம் 2-பாகம் | 2 | 0 | ஷண்முகநாதன் | 1 | 4 |
| காந்திமதி | 2 | 0 | ராதை | 1 | 4 |
| மணிவாசகன் | 1 | 4 | அமிர்தம் | 0 | 8 |
| | | | மனிதனின் வாழ்நாள் | 0 | 6 |

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# இந்திராபாய் அல்லது இந்திரஜாலக்கள்ளன்

இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்கரம் என்ற கள்ளன் கல்வி சாஸ்திர் ஆராய்ச்சி, தந்திரம், சாமர்த்தியம் முதலிய யாவும் உடையவனாதலின், அவன் தன் கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட தன் சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலைகளவுகள் அதிசயமானவைகளே. இந்திராபாய் பல் முறைகளில் அக்கள்ளனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணாபத்துக்களி லிருந்து தப்புவதும் அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்காரத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் அற்புத சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்கு மிக்க பிரமையை யுண்டாக்கும்.

இதன் விலை ரூபா 2—8—0

# தமிழ் மெட்டீரியா மெடிக்கா

என்னும் அருமையான வைத்திய நூல்.

# MATERIA MEDICA

இவ்வரிய பெரிய வைத்திய புஸ்தகமானது ஆங்கில மருந்துக் கலப்பு விவர முறைகளைத் தமிழில் விளக்கமாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளக்குவது. இன்னின்ன நோய்க்கு இன்னின்ன விதமாக மருந்துகளைச் சேர்த்து மிக்சர் (Mixture) முதலானவை செய்து சாப்பிடவேண்டுமென்பதை இந்நூல் நன்றாகக் கூறுகின்றமையால் இதை ஓர் 'ஆபத்துக் குதவும் தோழன்' என்று அனைவரும் நம்பலாம். இது வைத்திய அனுபவம் மிகப் பெரிதும் உடைய ஒருவரால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே கூடியவரையில் நோய்களுக்குப் பரிகாரம் செய்து கொள்ளவும் இந்நூல் மிகவும் உபயோகப்படும். **இதன் விலை ரூபா 3.**

# கிராமபோன் சங்கீத கீர்த்தனாம்ருதம்

தற்காலம் கிராமபோன் என்னும் ஸங்கீதக் கருவியில் பாடிவரும் திருச்செந்தூர் ஷண்முக வடிவு, எஸ். வி. சுப்பைய பாகவதர், டி. எம். காதர்பாஷா, எஸ். ஆர். கமலம், மிஸ் கே. ரங்கநாயகி, மதுரை மிஸ் அ. சுந்தரம், திருநெல்வேலி டி. எஸ். ரங்கம்மாள், சேலம் அம்மாகண்ணு, திருவிடைமருதூர் பவானி, சேலம் கோதாவரி, மிஸ் லோகாம்பாள் இன்னும் பல வித்வத் ரத்னங்கள் பாடிய 300 கீர்த்தனைகளை ஒருங்கு சேர்த்து ராகதாளங்களுடன் அச்சிட்டு நேர்த்தியாக பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது. சங்கீதாபிமானிகளுக்கு இது ஓர் பொக்கிஷம் என்பது நாம் சொல்லாமலே விளங்கும்.

**301 கீர்த்தனைகள் கொண்ட 1-ம் பாகம் விலை ரூபா 1.**

**246 கீர்த்தனைகள் கொண்ட 2-ம் பாகம் விலை ரூபா 1.**

**211 பெரிய கீர்த்தனைகளுள்ள 3-ம் பாகம் விலை ரூபா 1.**

மூன்று பாகம் சேர்ந்தது ஒரே கட்டடம் விலை ரூபா **2—8—0**

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# தத்வசங்க்ரஹ ராமாயணம்

## இரண்டாம் பதிப்பு.

இது ஸமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட அருமையான நூல். இதனை ஒருமுறை படிப்பவர்கள் இம்மை மறுமை யென்னும் இருவகை வாழ்விற்குரிய சாதனங்களை யுணர்ந்து மக்களாய்ப்பிறந்த தாம் அனுஷ்டிக்க வேண்டிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு பகவானுடைய திருவருட்குரியவராக விளங்குவர் என்பதில் ஐயமில்லை. இந்த கிரந்தம் துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலன நிமித்தம் உலகத்தில் ஸத்யவந்தனுக விளங்கிய தசரத பூபதிக்கு ஸ்ரீராமனுக அவதரித்த ஜகத் பிரபுவின் குணாதிசயங்களைப்பற்றிப் பேசுவது.



ஸ்ரீ ராமாவதாரத்தின் உண்மை இதனை படிப்பவர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும். இதனைப்படித்தால் அநேக ஞான நூற்களைப் படித்த பயனை ஒருங்கே யடைதல் கூடும். ஸ்ரீராம பூஜா விதிகளும் அர்ச்சனைகளும் இதன்கண் விவரிக்கப் பட்டுள்ளன. இதுவரையில் வெளியான ராமாயணங்களை விட மும்மடங்கு மேலான தத்வ உபதேசங்கள் இதன்கண் காணலாம்.

உபந்யாசகர்களுக்கு வேண்டிய பல அரிய விஷயங்களுடன் கூடியது. ஸ்ரீராமசரிதையை வாசிப்பதே இகபர நன்மை யளிக்கு மென்பர் பெரியோர். இதில் எண்ணிறந்த மிக்க அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

புஸ்தகம் சுமார் 520 பக்கங்கள் கொண்டது. இங்கிலீஷ் கிலேஸ் காகிதத்தில் டபுள்க்ரௌன் 4 பக்க அளவில் அச்சிடப்பட்டு முழுகாலிகோ பைண்டு செய்யப்பட்டது. இதன் விலை ரூபா 4—0—0.

# ஸ்ரீமத் கம்பராமாயண வசன சங்கிரகம்.

## (சப்தகாண்டங்கள் அடங்கியது.)

(மூன்றும் பதிப்பு) இதன் விலை ரூபா 2.

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது. மிக்க திருத்தங்களோடு கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

☞ சொற்பக் காப்பிகளே அச்சிடப்பட் டிருக்கின்றன. ஆதலின் புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக்கொள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக்கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாம் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைக்கூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷ முண்டாகும்.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# எமது சொந்தப் பிரசுரங்கள்.

# கைவல்ய நவநீத வசனம்.

## (இரண்டாம் பதிப்பு.)

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும் பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின உட்பொருள்களைத் தழுவிப் பல மகான்கள் பல நூல்களை இயற்றி யிருக்கின்றனர். அவற்றுள் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இது எவரும் எளிதில் வாசித்துணரும்படி வசனமாக எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனுல் முத்தி மார்க்கத்தை எவரும் நன்குணரலாம்.

இதன் விலை ரூபா 1—8—0

# இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்.

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக்கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி பெருந் திருட்டும் மிகுந்த கொலைத்தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு மூடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் பிள்ளை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்துகொள்வது, அதிசயம் பொருந்திய செயல்களாயுயபடிப்போர் மனதைக் கவரக்கூடியதாயும் இருக்கும். இதன் விலை ரூபா 2.

**ஞானசெல்வம்பாள் (5-பாகங்கள்)** 9 10 0

நம்மிடம் இதுவரை வெளியாகியிருக்கும் அநேகம் நாவல்களில் இதுதான் மிகப் பெரியது. "இரும்பைக் காந்தம் இழுக்கின்றவாறுபோல்" படிப்போர் மனத்தை இழுத்துக்கொள்ளத் தக்கது. கதை மிகப் பெரியதாயினும், வாசகர்களின் மனம் சிறிதும் அயர்ச்சியடையாமல் மேலும் ஆனந்தமாக முடிவுவரை யிருக்கும். சில பெண்கள் தங்களுக்கு மேலதிகாரிகளின்றித் தங்கள் இஷ்டம்போல் எங்கு முலவிச் சகல ஆடவர்களுடன் பழகிக்கொண்டிருப்பதால் நேரும் துன்பங்கள் இத்தன்மையன வென்பது நன்குவிளங்கும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நான்கு பாகம் வரை ஒவ்வொன்றுக்கு விலை | ரூபா | 2 | 0 | 0 | |
| ஐந்தாவது பாகம் மாத்திரம் | ,, | ,, | 1 | 10 | 0 |
| ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களுக்கு ஐந்து பாகமும் சேர்ந்து வாங்கினுல் | ,, | ,, | 8 | 0 | 0 |

**பவளத்தீவு 2 பாகம்** 3 0 0.

இக்கதையில் ஒரு செல்வச் சீமான் பேராசையால் செய்யும் குற்றத்திற்காக அவன் சந்ததியார் கொடிய சாபத்தை யனுபவிப்பது யாவர்க்கும் மேலான படிப்பினையைக் கற்பிக்கும். இதில் வரும் ஒவ்வொரு ஆசாமியின் சரித்திரமும் அவரவர் தத்தமது நடக்கைகளுக்குத் தக்க பலனை முடிவில் அடைவதும் ஒவ்வொரு நேர்த்தியான நீதியைப் போதிக்கும். இக்கதை ஆரம்பமுதல் முடிவுவரை வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்து கொண்டு மிக்க களிப்பை யளிக்கும்.

# சந்திராபாய்

அல்லது

## சங்கரதாஸின் வெற்றி.

ரஸாயன ஆராய்ச்சி, மின்சாரம், டெலிபோன், ஆகாயக்கப்பல், வெடிகுண்டு, டார்பிடோப்படகு முதலானவைகள் தோன்றியிருக்கும் நவீனநாகரீகப்போக்கின் சாதகபாதகங்களை இந்நாவல் வெள்ளிடைமலைபோல் ஆங்காங்கு வெளிப்படுத்துகிறது. இதன் விலை ரூபா 2—0—0.

## கனகபூஷணம் 2-பாகம்.

இதிலுள்ள கதாநாயகிக்கு நேரிடும் ஆபத்துகளை நினைக்கப் படிப்போர் கண்களில் நீர் வடியும். இக்கதையில் சோகரச மொன்றேயன்றி ஏனைய ரசங்களும் பொருந்தியிருக்கின்றன. இதிலுள்ள கதாநாயகி பயங்கரமும் பிராணாபத்துமாகிய இக்கட்டுகளில் சிக்கியபோதும், தன் கற்புக்கு அழிவு நேரிடாது அதனைக் காப்பாற்றிக்கொள்வது மிக்க அதிசயமாயிருக்கும். இதில் இலௌகிகத்தில் சம்பவிக்கும் சகல நடவடிக்கைகளும் ஆசாரவொழுக்கங்களும் நமது நாட்டுமாதருக்கு அமைந்திருக்க வேண்டியவண்ணமாகச் செவ்வனே விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. விலை ரூபா 3-8-0.

## மதனாம்பாள் 2-பாகம்.

இதில், காளிங்கனுகிய லோகநாதன் என்னும் ஓர் நயவஞ்சகன், சகோதரத் துரோகியாய் அவனை அடுத்துக் கெடுதலும், பட்டாபிராமன் என்னும் ஓர் உத்தமனைக் காதலித்திருந்த மதனாம்பாள் என்னும் உத்தமியைத் தான் மணஞ்செய்துகொள்ள விரும்பி, வேலாயுதன் என்பவனைத் தன் மோசச் செய்கைகளுக்குத் துணைக்கருவியாகக்கொண்டு பல வஞ்சனைகளைச் செய்து, மதனாம்பாளை ஆதரித்துவந்த பாங்கிக்காரர் மனைவியாகிய விமலாபாயைப் பயமுறுத்தி, மதனாம்பாளைத் தன் விருப்பத்திற் கிணங்கச் செய்வதும், பாங்கியில் மகாமாயக் களவு நடத்தி அக்குற்றத்தை நிரபராதியாகிய பட்டாபிராமன் மேல் சுமத்துவதும் படிப்போர்க்கு ஆச்சரியத்தை விளைவிக்கும்.

2 பாகமும் விலை ரூபா 3.

**காமவல்லி** இன்பரசம் பொருந்தியது, பெண்களின் மாயஜாலத்தை விளக்குவது, நீதியைப் போதிப்பது. இதன் விலை அணா 8

அற்புதமர்மங்கள் அல்லது

ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் 1 12 0

இது மகா அற்புத மர்மங்களடங்கிய துப்பறியும் நாவல். இதில் எட்டு விதமான கதைகள் அடங்கியிருக்கின்றன. எந்த நாட்டிலும் எப்பேர்ப்பட்ட யூகமுடைவர்களாலும், எவ்வித காரணத்தைக் கொண்டும், கண்டுபிடிக்க முடியாத அதியாச்சரியமான இரகசிய சம்பவங்கள் நிகழ்வதும், அவற்றை ஆனந்தஸிங்கு அதிகப் பிரயாசையுடனும், வெகு சாமர்த்தியத்துடனும் கண்டுபிடித்து உண்மையை வெளியாக்கிக் குற்றவாளிகளைத் தண்டனைக்குள்ளாக்குவதும், நிரபராதிகளுக்குத் துணைபுரிவதும், சத்தியத்தை நிலைநிறுத்துவதும், படிப்பவர்க்கு மிக்க மனோற்சாகத்தையும், ஆனந்தத்தையும், அறிவு விளக்கத்தையும் உண்டாக்கி, உலகத்திலுள்ள மனிதவர்க்கத்தவரின் இயற்கைகளையும் நன்கு விளக்கிக்காட்டும்.

அமராவதி 2 பாகம் 4 0 0

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமுமுடையவனுயிருந்தால் அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக் கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்றாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேக சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியையளிக்கும்.

இரத்தினபுரி இரகசியம் 3 பாகம் 6 0 0

இதில் மிக்க ஆச்சரியமுள்ளனவும், நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதி முதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருஷ்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்படுகின்றன.

குசேலோபாக்கியான வசனம் 1 0 0

இதில், குசேலர் மேல்கடலடைந்தது, வடமதுரைச் சிறப்பு, கடைவீதியின் சிறப்பு, அவந்திக்கடுத்த மலையச்சியிலுள்ள பிராமணச் சேரியின் சிறப்பு, குசேலர் திருமணம், குசேலர் துவாரகைசேர்தல், ஸ்ரீ கண்ணனுடைய அந்தப்புரத்தின் சிறப்பு, கிருஷ்ணன் குசேலர் கொண்டுபோன அவலை வாங்கி உண்ணுதல், ஒருபிடி அவலுக்கு மேல் உண்ணலாகாதென்று உருக்குமணி கிருஷ்ணனைத் தடுத்தல், குசேலர் செல்வம் பெற்றுத் தமது நகரமடைந்தது, குசேலரை அவர் மனைவி உபசரித்துக் கொண்டாடுதல், குசேலர் விஷ்ணுதோத்திரஞ் செய்தல் முதலியன விளக்கமாக எழுதப்பெற்றிருக்கின்றன.

## மூவர் அடங்கல் முறை.

திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் மூவரும் பாடிய தேவாரங்கள் முழுமையும் அடங்கிய பெரிய புத்தகம்.

இவ்வருமையான புத்தகம் ஒவ்வொரு சைவர்வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டிய தொன்று. இவ்வடங்கல் முறையினது பிரபாவமும் அருமையும் அளவிடுதற் கரியது. இதனை ஒவ்வொருவரும் அன்றாடம் விதிப்படி சிரத்தையோடு பாராயணம் பண்ணி வருவாராயின் இஷ்டகாமியார்த்தங்களை எளிதில் அடையக்கூடு மென்பது பெரியோர் துணிபு.

பிறவிப் பெருங்கடல் நீந்துதற்கு ஓர் அரும் பெரும் தெப்பமாயும் சைவ சமயத்துக்கோர் திலகமாயும் விளங்கும் இத்துணை அரிய பெரிய நூலை அச்சிடாது வாளா இருத்தல் சைவ சமயத்தினருக்கே மிகவும் இழிவைத் தருமென்று கருதி அதிகச் செலவிட்டு ராயல் 8-பேஜ் சைசில் புதிய எழுத்துக்களால் சரித்திரக் குறிப்பு, ஸ்தலக்குறிப்பு, இராகம் முதலியன பிரித்து உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அழகாக அச்சிட்டிருக்கிறோம். கொஞ்சம் பிரதிகளே அச்சிட்டதால் சீக்கிரம் மிஞ்சிக்கொள்வோர்க்கே கிடைக்கும். பிறகு கிடைப்பது அரிது. இதன் விலை ரூபா 5.

**ஆனந்தபோதினி ஆபீஸ்,** தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## நூதன தமிழ் நாவல்களும் கதைப் புத்தகங்களும்.

ஆரணி-குப்புசாமி முதலியார் இயற்றியவை.

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஞானசெல்வாம்பாள் 5 பாகம் | 9 | 10 |
| கற்பகச் சோலையின் அற்புதக் கொலை ... | 1 | 4 |
| கடற்கொள்ளைக்காரன் 2பாகம் | 3 | 4 |
| மதனாம்பாள் 2-பாகம் ... | 3 | 0 |
| லோகநாயகி ... | 1 | 0 |
| விளையாட்டுச் சாமான் ... | 1 | 6 |
| பவளத்தீவு 2-பாகங்கள் ... | 3 | 0 |
| தபால்கொள்ளைக்காரர்கள் ... | 0 | 14 |
| இந்திராபாய் ... | 2 | 8 |
| அமராவதி 2-பாகங்கள் ... | 4 | 0 |
| மஞ்சள் அறையின் மர்மம் ... | 1 | 8 |
| கற்கோட்டை ... | 2 | 0 |
| பூங்கோதை ... | 0 | 10 |
| வீரநாதன் ... | 0 | 12 |
| கனகபூஷணம் 2 பாகமும் ... | 3 | 8 |
| கமலசேகரன் ... | 1 | 12 |
| தினகரசுந்தரி ... | 1 | 0 |
| ரத்தினபுரி ரகசியம் 3-பாகமும் | 6 | 0 |
| சந்திராபாய் ... | 2 | 0 |
| இராஜாமணி ... | 2 | 0 |
| இரத்தினபாய் ... | 1 | 12 |
| மதனபூஷணம் ... | 1 | 0 |
| சுவர்ணம்பாள் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 |
| குணசுந்தரன் ... | 0 | 12 |
| பத்மாஸனி ... | 0 | 14 |
| ஆனந்தலிங் ... | 2 | 0 |
| மின்சார மாயவன் ... | 1 | 8 |
| ஆனந்தலிங்கின் அஷ்டஜயங்கள் | 1 | 12 |
| அர்ஜுனலிங் சுந்தர் ... | 0 | 2 |
| கைவல்லிய நவநீத வசனம் ... | 1 | 8 |
| சகோதரவாஞ்சை ... | 0 | 7 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| தத்வஸங்க்ரஹ ராமாயணம் ... | 4 | 0 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரம் ஹம்சருடைய சரித்திரமும் உபதேசங்களும் | 1 | 12 |
| விவேகாநந்தர் ... | 4 | 0 |
| தமிழ் மெடீரியா மெடிகா ... | 3 | 0 |
| மாதவி மாதவன் 2-பாகம் ... | 2 | 0 |
| மலையாள பகவதி ... | 1 | 0 |
| அற்புத நவநீதரம்பை ... | 1 | 0 |
| அகட விகட விலாச விநோதம் | 0 | 10 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| துயபாலன் கதை ... | 0 | 12 |
| பூலோக லக்ஷ்மி கதை ... | 0 | 10 |
| கனகரத்தினம் ... | 0 | 8 |
| கண்டிராஜா நாடகம் ... | 0 | 12 |
| நளினசுந்தரி ... | 0 | 10 |
| கம்பராமாயண சங்கிரக வசனம் | 2 | 0 |
| குசேலோபாக்கியான வசனம் | 1 | 0 |
| ஸ்ரீபாலன் ... | 0 | 8 |
| உதயணன் ... | 0 | 7 |
| தசக்கிரீவன் ... | 0 | 14 |
| போஜ சரித்திரம் ... | 0 | 5 |
| சதானந்தர் ... | 1 | 4 |
| ஜீவகன் வசனம் ... | 1 | 0 |
| கர்ணன் சரிதை ... | 0 | 12 |
| பீஷ்மவிஜயம் ... | 0 | 10 |
| கீர்த்திசிங்கன் ... | 0 | 8 |
| மூப்பெருந்தாசர் ... | 0 | 10 |
| அரிச்சந்திரன் சரிதை ... | 0 | 8 |
| நீலக்கொடி ... | 0 | 5 |
| மணவாளன் ... | 0 | 3 |
| பரசுராமன் ... | 0 | 3 |
| சிசுபாலன் ... | 0 | 8 |
| அங்கதன் ... | 0 | 4 |
| தசாவதாரம் ... | 0 | 6 |
| கிருஷ்ணன் தூது வசனம் ... | 0 | 8 |
| சண்டோபாக்கியானம் ... | 0 | 6 |
| கருணாகரரும் சத்தியசீலரும் | 0 | 8 |
| சத்தியவசனி ... | 0 | 4 |
| விமலன் ... | 0 | 4 |
| கண்ணபிரான் ... | 0 | 4 |
| செய்யுட்பாடத்திரட்டு ... | 0 | 4 |
| நாலுமந்திரி கதை ... | 0 | 4 |
| மங்களேசுவரன் ... | 0 | 6 |
| தக்கன் ... | 0 | 6 |
| சீமந்தனி ... | 0 | 8 |
| நான்குகோடி ... | 0 | 4 |
| மதிமோச விளக்கம் ... | 1 | 0 |
| மெய்க்காதலி ... | 0 | 8 |
| மேனுமினுக்கி கதை ... | 0 | 8 |
| வீணைகானன் ஞானேந்திரி ... | 0 | 8 |
| மனோன்மணி கதை ... | 0 | [illegible] |
| கோமளவல்லி கதை ... | 0 | [illegible] |
| விகடவல்லி கதை ... | 0 | [illegible] |
| தாலிகட்ட மறந்த கதை | 0 | [illegible] |

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, [illegible]



ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.



(ALL RIGHTS RESERVED.)



| தொகுதி | பிரமோதூதஹு கார்த்திகைமீ கஉ | பகுதி |
|---|---|---|
| 16 | 1930ஹு நவம்பர்மீ 16உ | 5 |


## கடவுள் வணக்கம்.

மின்போலும் இடையொடியும் ஒடியுமென மொழிதல்போல்
மென்சிலம் பொலிகளார்ப்ப
வீங்கிப் புடைத்துவிழு சுமையன்ன கொங்கைமட
மின்னார்கள் பின்னவலாய்
என்போல் அலைந்தவர்கள் கற்றார்கள் கல்லார்கள்
இருவர்களில் ஒருவருண்டோ
என்செய்கேன் அம்மம்ம என்பாவம் என்கொடுமை
ஏதென் றெடுத்துமொழிவேன்
அன்பால் வியந்துருகி அடியற்ற மரமென்ன
அடியிலே வீழ்ந்து வீழ்ந்தெம்
அடிகளே உமதடிமை யாங்களெனும் நால்வருக்கு
அறமாதி பொருளுரைப்பத்
தென்பாலில் முகமாகி வடவா லிருக்கின்ற
செல்வமே சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே. (1)

மாடுமக்கள் சிற்றிடையார் செம்பொன் ஆடை
வைத்தகன தனமேடை மாட கூடம்
வீடுமென்பாற் றொடர்ச்சியோ இடைவிடாமல்
மிக்கதி வீடன்றோ விளங்கல் வேண்டும். (2)

கற்குணத்தைப் போன்றவஞ்சக் காரர்கள்கை கோவாமல்
நற்குணத்தார் கைகோத்து நான்றிரிவ தெந்நாளோ. (3)

## அரும்பொருள் விளக்கம்

(1) இதனால் மின்னார்கள் பின் ஆவலாய்ச் சென்ற தமது அறியாமைக்கு அடிகள் இரங்குகின்றார்.

(இ-ள்.) உள்ளத்தில் வீற்றிருக்கின்ற ஞானமயமான இறைவனே! ஒளி வடிவான இன்பமே! அன்பினால் போற்றி மனங்கரைந்து வேரற்ற மரம்போல் உன் திருவடிகளில் விழுந்து விழுந்து "எமது இறைவனே! நாங்கள் உம் அடிமைகள் என்று பிரார்த்தித்த சனகாதிகளாகிய நால்வருக்கும் அறம் முதலிய உறுதிப் பொருள்களை உபதேசிக்கும் பொருட்டு, தெற்குத் திசையின் முகமாகி (தக்ஷிணாமூர்த்தியாகி) கல்லாலின் நிழலில் எழுந்தருளி யிருக்கின்ற எம் நிதியே! மின்னற்கொடியை ஒத்த இடையானது ஒடியும் ஒடியும் என்று சொல்லுதல்போல் மெல்லிய காற்சிலம்பு ஓசைகள் ஆரவாரிக்க, பருத்துப் புடைகொண்டு சிலநாளில் தளர்ந்தொழிகின்ற பெரும் பாரத்தினை ஒத்த தனம்வாய்ந்த இளமாதர்களின் பின் வேட்கைகொண்டு அலைந்து கெட்டேன். அவர்கள் பின் என்போல் அலைந்தவர்கள் கற்றார்கள்—கல்லார்கள் ஆகிய இரு திறத்தாரில் ஒருவரும் இலர். இனி, நான் என்ன செய்வேன்? என் பாவத்தையும் என் கொடுமைகளையும் என்ன என்று எடுத்துச் சொல்லுவேன்? என்பதாம்.

நால்வர்—சனகன், சனந்தனன், சநாதனன், சனத்குமாரன். அறமாதி பொருள்—அறம், பொருள், இன்பம் வீடு ஆகிய உறுதிப் பொருள்கள். தென்பாலின் முகமாகி என்றது தக்ஷிணாமூர்த்தி சொரூபத்தை. வடவால்—கல்லாலமரம். இது கைலாசத்தி லுள்ளது.

(2) இதனால் மேற்கதியாகிய வீட்டின்பம் விளங்கல் வேண்டும் என்கின்றார்.

(இ-ள்.) மாடு, பிள்ளைகள், மாதர்கள், உயர்ந்த பீதாம்பரம், தேடி வைத்த பெருந்திரவியம், உபரிகையோடுகூடிய மாடமாளிகை ஆகிய இவையெல்லாம், அழியுந் தன்மையுள்ள என்னிடம் என்றும் தொடர்ந்து நிற்பனவாமோ? இடையீடின்றி மேற்கதியாகிய மோட்சம் அன்றோ உண்டாதல் வேண்டும்? அது சித்திக்குமாறு செய்வாயாக என்பதாம்.

(3) இதனால் நல்லோர் இணக்கம் வேண்டும் என்கிறார்.

(இ-ள்.) கன்னெஞ்ச வஞ்சகர்களின் கைகோத்து நட்புக்கொள்ளாமல் நற்குணத்தவர் கைகோத்து நான் திரியும் நாள் எந்நாளோ? என்பதாம்.

ஆனந்தபோதினி
பிரமோதூத ௵ கார்த்திகைமீ 1உ

### சங்கங்கள்.

தனிமையாக வாழ்வது மக்கள் இயற்கை அன்று. சேர்ந்து சமூகமாக வாழ்வதே மக்களின் இயற்கையாகும். ஒரு மனிதன் தனது வாழ்க்கை நலத்துக்குரிய எல்லாப் பொருள்களையும் தானே அமைத்துக் கொள்ளுதல் அசாத்தியம். மக்கள் வாழ்க்கைக்கு அவர்களுக்குள் பரஸ்பர உதவி இன்றியமையா திருத்தலினாலேயே சமூக அமைப்பு ஏற்பட்டது. மக்கள் சமூக அமைப்பானது பகுத்தறிவையும் ஒழுங்கையும் அடிப்படையாகக் கொண்டு விளங்குகிறது.

மக்கள் சமூகத்தில் ஒவ்வொருவரும் தனித்தனியே பிரிந்து நின்று ஒரு காரியத்தைச் செய்வதைவிடப் பலபேர் ஒன்றுகூடிச் செய்தல் மிகவும் பயன் தருவதாகும். அங்ஙனம் செய்யின் எடுத்த காரியத்தைத் திறமையாகவும் எளிதாகவும் முடித்துவிடலாம். தற்காலம் உலகத்தில் நடைபெறும் நற்பயன் அளிக்கும் பெரிய காரிங்கள் எல்லாம் பலர் சேர்ந்து ஒற்றுமையோடு முயல்வதாலேயே இனிது நடைபெறுகின்றன. பலரும் திரண்டு—சங்கமாகச் சேர்ந்து காரியம் சாதிக்கும் விசேஷத்தை மேனாட்டார் நன்கு தெரிந்துகொண் டிருக்கின்றனர். அவர்கள் பெரும்பாலும் எந்தக் காரியத்தையும் தனிமையாகச் செய்யும் வழக்கம் இல்லை. தங்கள் முயற்சியினால் வரும் இன்ப துன்பங்களை எல்லாரும் பங்கிட்டுக் கொள்ளும்படியான

---

தானைக் கொடாத பசுவினிடம் கன்றைக் கொண்டு பால் கறப்பதே போல் சில யாசகப் பேர்வழிகள் சிநேகரைக் கொண்டு கடிதம் பெற்று யாசகம் வாங்குகின்றனர்.

தோரணையிலேயே காரியங்களைத் தொடங்குவர். "சேர்ந்து வாழ்தலே சிறந்த வலிமை" என்ற உண்மையைத் தற்காலம் மேனாட்டாரிடையேதான் நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

நமது நாட்டில் ஆங்கில ஆட்சி நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேலாகவே நடைபெற்று வந்தும், வர்த்தகத் துறையிலும் பிற துறைகளிலும் மேனாட்டாரின் சம்பந்தம் இதுகாறும் எவ்வளவோ ஏற்பட்டிருந்தும், இன்னும் நம் மக்கட்குச் சங்கங்களின் வாயிலாகக் காரியங்களைச் சாதிக்கும் முறை புதுமையாகவே இருந்து வருகின்றது. அவர்களிடம் சங்கங்களின் சிறப்பைப்பற்றிய அறிவும் உணர்ச்சியும் மிக மிகக் குறைவாகவே இருக்கின்றன. ஆங்காங்கு ஒரு சில சங்கங்கள் தோன்றாமலும் இல்லை தோன்றியும் பயன் என்? தோன்றிய நாளே அழிவனவாகவும், தோன்றிச் சில நாளிருந்து அழிவனவாகவும், பேர் மாத்திரையால் விளங்குவனவாகவும், ஆண்டுக்கு ஒரு நாள் ஆண்டு நிறைவு விழாவோடு நிற்பனவாகவுமே நமது நாட்டுச் சங்கங்களின் வரலாறு இருந்துவருகிறது. வர்த்தக சம்பந்தமாகவும், கைத்தொழில் சம்பந்தமாகவும் உள்ள சில சங்கங்கள் இன்னும் குழவிப் பருவத்திலே இருந்துவருகின்றன என்றே கூறவேண்டும்.

சங்கங்களின் மூலம் காரியம் சாதிக்கும் முறை நமது நாட்டுக்கு நூதனமானது என்று சொல்ல முடியாது. பண்டைக்காலந்தொட்டே சங்கங்கள் இருந்து வந்திருக்கின்றன. அவை பெரும்பாலும் மொழிவளர்ச்சிக்கும் சமய வளர்ச்சிக்கும் மட்டும் பயன் படுத்தப்பட்டன என்று தெரியவருகிறது. வியாபாரம், கைத்தொழில், விவசாயம், விஞ்ஞானம் முதலிய லௌகிக காரியங்கட்காகத் தற்காலம் மேனாடுகளில் ஏற்பட்டுள்ள சங்கங்களைப்போல் நமது நாட்டிலும் முற்காலத்தில் சங்கங்கள் இருந்திருக்கும் என்று ஊகிக்க ஒரு சிறிதும் ஆதாரம் காணக்கூடவில்லை. பெரும்பாலும் பௌத்தர் காலத்துக்குப் பின்னரே சங்கங்களின் தோற்றவரலாறு காணக்கிடக்கின்றது. தமிழ்நாட்டில் தமிழ்மொழி வளர்ச்சிக்கு என்று மூன்று சங்கங்கள் ஏற்பட்டிருந்த வரலாற்றைத் தவிர வேறு விசேஷமாக ஒன்றும் கூறுவதற்கில்லை. பௌத்தர்கள் தங்கள் மதக்கொள்கைகளைப் பரப்பச் சங்கங்களை உயிராகப் போற்றினர். இப்பொழுதும் பௌத்த மதம் உலகத்தில் பெரியமதமாக விளங்குவதற்குக் காரணம் பௌத்த பிக்ஷுக்கள் சங்கங்களின்மூலம் செய்த தீவிரமான பிரசாரமேயாகும். இந்தக்காலத்தில் ஒரு விஷயத்தைப் பிரசாரம் செய்தல் மிகவும் எளிது. போக்குவரவு சாதனங்கள் சௌகரியமாய் அமைந்திருக்கின்றன. அச்சுக்கூடங்கள், வர்த்தமான பத்திரிகைகள், புத்தகங்-

நெல்லைவிட்டு உமி பிரிந்தால் அந்நெல் முளைத்தற் குரிய வலிமை கெட்டுவிடும். அதுபோல் பிரியாது மனமொத்திருந்த சிநேகர் பகையிலாது பிரிந்து கூடினாலும் பழைய வலிமை குறைந்தே போகின்றது.



கள், தந்தி—தபால் முதலிய எல்லாம் மிகுந்த நற்பயன் அளித்து வருகின்றன. முற்காலத்தில் இவை ஒன்றும் இல்லை. அங்ஙனமிருந்தும், பௌத்தமதமானது விரிந்த நிலப்பரப்பைக்கொண்ட இந்தியாவிலும், அதைச் சேர்ந்த தீவுகளிலும், சைனா, ஜப்பான் முதலிய தூரதேசங்களிலும் பரவியிருந்தது. சங்கங்கள் இன்றேல் இம்மதம் இவ்வளவு தூரம் பரவ முடியுமா என்று சிந்திக்குமாறு நேயர்களை வேண்டுகின்றோம். இக்காலத்தில்தான் சைவ—வைணவ—அத்வைத மடங்களும் தோன்றின. மடங்களும் சங்கங்களே. இம்மடங்கள் தோன்றி பௌத்தமதத்துக்கு எதிர்ப்பிரசாரம் செய்யத் தொடங்கின. பௌத்தரல்லாத பிறரும் மடங்களாகிய சங்கங்களின் மூலம் எதிர்ப்பிரசாரம் செய்யத் தொடங்கவே பௌத்தமதத்தின் ஆதிக்கம் வீழ்ச்சி அடைந்தது.

முற்காலத்தில் கிராமங்கடோறும் சங்கங்கள் இருந்தன என்றே கூறவேண்டும். கிராமப் பெரியோர்கள் ஒன்றுகூடி அவ்வக்கிராமத்தின் பொதுநலத்தைப் பாதுகாத்து வந்தனர். எத்தகைய வழக்குகளையும் இவர்களே தீர்த்து நியாயம் வழங்குவது வழக்கம். கிராமப் பொதுஜனங்களும் அவர்கள் கூறும் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். யாராவது ஒருவன் பஞ்சாயத்தார் தீர்ப்புக்குக் கட்டுப்படவில்லை என்றால் அவனோடு கிராமத்தார் எல்லாரும் ஒத்துழையாமையை மேற்கொள்ளுவர். அதாவது அவனுக்கு ஜாதிப்பிரஷ்டம்—சமூக பகிஷ்காரம் தண்டனையாகக் கிடைக்கும். கிராமப் பெரியோர் சங்கங்கூடும் இடத்திற்கு மன்றம் என்று பெயர். மன்றம் என்பது மரத்தின் நிழல். முற்காலத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் இத்தகைய மன்றங்கள் இருந்து வந்தன என்று தெரிகிறது. பின்னர் நாளாவட்டத்தில் கிராமங்களில் ஊர்ப்பொதுச் சாவடிகள் ஏற்பட்டன. இவையெல்லாம் இப்பொழுது பழையன கழிதலாகப் போய்விட்டன. இக்காலத்தில் வாழ்க்கை நிலைமையும் விவகாரங்களும் வேறு விதமாக மாற்றம் அடைந்து விட்டன. நமது நாட்டிலும் சங்கங்கூடிக் காரியங்களைக் கவனிக்கும் முறை முற்காலத்திலும் இருந்தது என்பதற்காகவே மேற்கூறிய விஷயங்களை ஒரு சிறிது குறிப்பிட்டோம்.

இப்பொழுது நமது நாட்டில் மேனாட்டு நாகரிகவெள்ளம் கரைகடந்து புரண்டோடிக்கொண்டிருக்கிறது. கல்வியறிவு வாய்ந்தவர் என்போர் எல்லாரும் இவ்வெள்ளத்தில் மிதந்துகொண்டிருப்பதால் நமது நாட்டு ஒழுக்க வழக்கங்கள் மாயமாய் மறைந்துகொண்டு வருகின்றன. நன்மை தீமைகளைப் பகுத்துணரும் ஆற்றல் குன்றி, மேனாட்டாரைக் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றுவது என்ற மனப்-

எளியோர் வன்மை மிகுந்த தங்களுடைய பகைவரினும் அதிக வன்மையுடையோரிடத்தில் சேரின் பயப்படாதவராவர்.

பான்மையே நம்மக்கள் உள்ளங்களில் வேரூன்றி வருகின்றது. மேனாட்டினரிடம் நாம் விரும்பிப் பின்பற்றத்தக்க அம்சங்களும் உண்டு; வெறுத்துத் தள்ளத்தக்க அம்சங்களும் உண்டு. நாம் இப்பொழுது அவர்களிடமுள்ள சத்தைக் கைவிட்டுச் சக்கையை மாத்திரம் கைக்கொண்டு வருகிறோம். அதாவது நடையுடை பாவனைகளாகிய வெளிப்பகட்டில் மயங்கிக்கொண்டு வருகின்றோம். மேனாட்டாரின் அறிவாற்றல்களையோ, பிடிவாதமான விடாமுயற்சியையோ, புத்தம் புதிய விஷயங்களைக் கண்டுபிடிப்பதில் அவர்கட்குள்ள வேட்கையையோ, அவர்கள் உயிராகப்போற்றும் ஒற்றுமை உணர்ச்சியையோ, இந்நறுங் குணத்திற்கு ஆதாரமான சமத்துவ சகோதரத்துவ பாவத்தையோ நாம் ஒரு சிறிதும் மதிக்கின்றோம் இல்லை. இவை நம் கண்கட்குத் தெரிவதும் இல்லை. தெரிந்துகொள்ள நாம் முயற்சிப்பதும் இல்லை. அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான் முதலிய தேசங்கள் எல்லாம் இப்பொழுது "இந்திரபோகம்" அநுபவிக்கின்றன என்று கூறவேண்டும். சிறப்பாக இந்தியாவிலும், பொதுவாக மற்ற நாடுகளிலும் இருக்கும் செல்வங்கள் எல்லாம் மேற்கூறிய தேசங்களில் வழிதேடிக்கொண்டு போய்க் குவிகின்றன. நாம் பழம் பெருமையைப் பன்னிப் பன்னிப் பேசிக்கொண்டே வீண்காலங்கடத்திக்கொண் டிருக்கின்றோம். போகபூமி—பொன்விளையும் நாடு என்று ஒருகாலத்தில் உலகம் போற்றிய நமது நாட்டில் இப்பொழுது அறியாமையும் வறுமையும் பிணியும் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கின்றன.

அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய மேனாடுகள் செல்வங்கொழிக்கும் போகபூமிகளாய்த் திகழ்வதற்குரிய காரணம் என்ன என்ற உண்மையை நேயர்கள் சிந்திக்கவேண்டும். அவர்கள் ஒவ்வொரு காரியத்தையும் பலர் சேர்ந்து செய்வது என்று வைத்துக் கொண்டுள்ள வழக்கமே அவர்களை உலகம் புகழ முன்னேறச் செய்திருக்கிறது. வியாபாரம், கைத்தொழில், விவசாயம், விஞ்ஞானம், மதம், மொழி, அரசியல், சமூகவியல் ஆகியவைகளில் அவர்கள் தீவிரமாக முன்னேறியிருக்கின்றனர். இவற்றின் வளர்ச்சிகள் எல்லாம் சங்கங்களின் வாயிலாகவே ஏற்பட்டன. இவ்விஷயங்களில் நாமும் ஏன் அவர்களைப் பின்பற்றக்கூடாது என்று கேட்கின்றோம்?

நமது நாட்டில் இன்னும் பத்திரிகை படிக்கும் அறிவே ஜனங்களுக்கு ஏற்படவில்லை. சமாச்சாரப் பத்திரிகைகள் என்றால் பொய்யும் புரட்டும் அளப்பதே அவைகளின் தொழில் என்று கோடிக் கணக்கான மக்கள் நினைத்துக்கொண் டிருக்கின்றனர். மேனாடுகளில் வர்த்தமானப் பத்திரிகைகளே மக்களின் வாழ்க்கை நலத்துக்கு உயிர் நாடிகளாய் விளங்குகின்றன. நம் நாட்டைவிடச் சிறு தொகையினராயுள்ள இங்கிலாந்து முதலிய தேசங்களில் ஒவ்வொரு

விருப்பத்தால் வெறுப்பும், வெறுப்பதால் விருப்பும் தோன்றுவதில்லை.



பத்திரிகையும் பல லக்ஷக்கணக்கான சந்தாதாரர்களைக் கொண்டு விளங்கும். நமது நாட்டிலோ புகழ்பெற்ற மேதாவிகளால் நடத்தப்பெறும் பத்திரிகைகளுக்குங்கூட ஒரு சில ஆயிரம் சந்தாதாரர் சேருவது துர்லபமாயிருக்கிறது. ஐரோப்பிய மகாயுத்தமும், மகாத்மா காந்தியடிகளின் பழைய ஒத்துழையாமை இயக்கமும், தற்பொழுது நடைபெற்றுவரும் சத்தியாக்கிரக இயக்கமும் நமது நாட்டுப் பொது மக்களிடையே பத்திரிகை ஞானத்தை ஒரு சிறிது ஏற்படுத்தியிருக்கின்றன. முப்பத்து முக்கோடி மக்களின் பெருக்கத்தையும், அறியாமையால் நேர்ந்துள்ள நாட்டின் இழி நிலையையும் நோக்கும்போது இப்பொழுது மக்களிடையே காணப்படும் பத்திரிகை ஞானம் கடலிற் பெருங்காயம் கரைப்பதற்கு ஒப்பாகவே உரைக்க வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன்னர் அரசியல் கிளர்ச்சியும் பிரசாரமும் நகரங்களில் ஆங்கிலங் கற்றவர்களிடம் மாத்திரம் அடங்கியிருந்தன. அக்காலத்தில் காங்கிரஸ் மகாசபை அவ்வளவாகப் பொதுஜன அநுதாபம் பெற்றிருக்கவில்லை. மகாத்மா காந்தியடிகள் காங்கிரஸில் ஆதிக்கம் வகித்த நாள் முதல் அது பொதுஜன சபையாக மாறிவிட்டது. இப்பொழுது காங்கிரஸில் வெறும் மேடைப் பிரசங்கிகளுக்கு வேலையில்லை; உண்மையாகத் தொண்டாற்ற முற்படுவோருக்கே அது இடங்கொடுக்கும். நாட்டில் இப்பொழுது காங்கிரஸ் மகா சபைக்குச் செல்வாக்கும் மதிப்பும் அதிகரித்துவிட்டன. எல்லா வகையிலும் வலிமை பெற்று விளங்கும் இங்கிலாந்துங்கூட காங்கிரஸ் மகா சபையைக் கண்டு அஞ்சுகிறது. காங்கிரஸ் சபை ஒன்று இன்றேல் நமது நாட்டுக்கு இந்த யுகத்திலேனும் விடுதலை உண்டாகும் என்று எண்ண இடமுண்டா என்று கேட்கின்றோம்? இந்திய மக்கள் காங்கிரஸ் மகா சபையில் பெரும்பாலும் அநுதாபம் காட்டி வருகின்றமை ஒன்றே—சர்க்காரின் மனதை முழுதும் மாற்றாவிட்டாலும்—நல்ல வார்த்தையேனும் சொல்லுமாறு செய்து வருகின்றது. இங்கிலாந்தில் நடைபெறும் சர்வகக்ஷி மகாநாடு காங்கிரஸைத் திருப்திப்படுத்தவே ஆதியில் ஏற்பாடு செய்யப்பட்டது என்பது ஈண்டு குறிப்பிடத் தக்கது.

அரசியல் கிளர்ச்சிக்கு காங்கிரஸ் மகா சபை ஏற்பட்டுள்ளது போலவே சமூக முன்னேற்றத்துக்கும், சமய முன்னேற்றத்துக்கும், தாய்மொழி முன்னேற்றத்துக்கும் இன்னும் நமது வாழ்க்கை நலத்துக்குரிய ஒவ்வொரு அம்சத்துக்கும் நாடெங்கும் சங்கங்கள் ஏற்பட வேண்டும். சமூகத்துறையில் நாம் இன்னும் பிற்போக்கான நிலைமையிலேயே இருந்து வருகின்றோம். சாதி சமய வேற்றுமைகள் நமது நாட்டின் ஒற்றுமையைப் பாழ்படுத்திக்கொண் டிருக்கின்றன. பொருளற்ற மூடப்பழக்க வழக்கங்கள் மக்களை முன்னேறவிடாமல் ஆழ்த்திக் கொண்டு வருகின்றன. இவையெல்லாம் சங்கங்

செய்யுந் தொழிலாற் செழிக்கும் நாடு.

களின் மூலம் ஒற்றுமையாகவும் கட்டுப்பாடாகவும் பிரசாரம் செய்தாலொழிய நமது நாட்டைவிட்டுத் தொலையா. சமய வளர்ச்சிக்கு என்று ஏற்பட்டுள்ள நமது சைவ—வைணவ-அத்வைத மடங்களின் நிலைமை மிகவும் கேவலமாயிருக்கின்றது. அம் மடங்களில் வருவாயாக வரும் ஏராளமான பொருள்கள் எல்லாம் துர்விநியோகம் செய்யப்படுகின்றன. அவ்வச் சமயத்தைச் சார்ந்த மக்கள் ஒன்று சேர்ந்து சங்கங் கண்டு கிளர்ச்சி செய்தால் மடங்களைச் சீர்திருத்தி நல்வழிப் படுத்தலாம். அவ் வருவாய்களைக் கொண்டு உண்மையான சமய ஞானத்தை நாடெங்கும் பரப்பலாம்.

தமிழ் மக்களைத் தவிர மற்றமொழியினர் எல்லாரும் தங்கள் தங்கள் தாய்மொழிகளைப் பொன்னேபோல் போற்றத் தொடங்கிவிட்டனர். வங்காளிகளும், ஆந்திரர்களும் தங்கள் மொழிகளைப் பற்பல விதத்திலும் வளர்ச்சிபெறச் செய்திருக்கின்றனர். மொழிவளர்ச்சிக்கென்றே அநேக சங்கங்களை ஏற்படுத்திப் பழைய இலக்கியங்களோடு புத்தம் புதிய கலைகளையும் தங்கள் மொழிகளில் அபிவிருத்தி செய்து வருகின்றனர். மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தாரும் தமிழ்மொழி வளர்ச்சியின் பொருட்டு நாடெங்கும் சங்கங்களை ஸ்தாபிக்க முற்படவேண்டும். தமிழும் ஆங்கிலமுங் கற்ற அறிஞர்களைக்கொண்டு புதிய கலைகளைத் தமிழ்மொழியில் கொணர ஏற்பாடு செய்யவேண்டும்.

சமூக சீர்திருத்தவாதிகளும், அரசியல் வாதிகளும் கிராமாந்தரங்களுக்குச் சென்று பிரசாரம் செய்து ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு கிராமசபை ஏற்படுமாறு செய்யவேண்டும். முக்கியமாய்க் கிராமங்களிலுள்ள ஆரம்ப ஆசிரியர்கள் இவ்விஷயத்தில் அரிய தொண்டாற்றலாம். ஒவ்வொரு கிராமத்திலும் தவறாமல் ஒவ்வொரு வர்த்தகசாலை இருக்குமாறு ஏற்பாடு செய்யவேண்டும். அவ்வாசக சாலைகளை நன்கு நிர்வகிக்கும் முறைகளையும் அவைகளைப் பயன் படுத்திக்கொள்ளும் முறைகளையும் கிராமாந்தர மக்கட்குப் போதிக்கவேண்டும். கலாசாலை மாணவர்களும் தங்களுக்குரிய விடுமுறைக் காலங்களில் கிராமங்களுக்குச் சென்று சங்கங்களின் மேன்மை, வாசக சாலைகளின் உபயோகம் முதலியவற்றைப்பற்றி அவ்விடங்களிலுள்ள ஜனங்களுக்குப் போதிக்கவேண்டும்.

சங்கங்கள் நன்கு நடைபெற வேண்டுமானால் ஒற்றுமை மிகமிக அவசியம். ஒற்றுமை இன்றேல் ஒன்றும் இல்லை. "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—அன்றி—ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே" என்ற உண்மையை எல்லாரும் இதயத்தில் இருத்திக்கொண்டு நமது வேண்டுகோளைப் பூர்த்தி செய்ய முயற்சிப்பார்களாக. எல்லாம் வல்ல திருவருள் முன்னிற்பதாக.

ஓம் தத் ஸத்

# கல்விச் செய்திகள்.

அபினிஸியா ராஜ்யம் ஆப்பிரிகா கண்டத்தில் வட கீழ்ப்பக்கத்தில் இருக்கிறது. இது 350,000 சதுர மைல் உள்ளது. 8,000,000 ஜனத்தொகை கொண்டது. இங்கு 1907-ம் வருஷத்திலிருந்து ஆண்பிள்ளைகளுக்கு மாத்திரம் ஆரம்பக்கல்வி கட்டாயப் படுத்தப்பட்டிருக்கிறது.

பெல்ஜியம் என்பது ஐரோப்பாவில் 11,373 சதுரமைல் உள்ள ஒரு ராஜ்யம். இதன் ஜனத்தொகை 7,500,000 அவர்களில் 2,833,000 பேர் பிரெஞ்சு பாஷையும், 3,220,000 பேர் பிளெமிஷ் (*Flemish*) பாஷையும் பேசுகிறார்கள். இரண்டு பாஷைகளையும் பேசுவோர் தொகை 871,000. இத்தேசத்தில் ஆரம்பக்கல்வி இலவசமாக்கப் பட்டிருக்கிறது. ஆனால் கட்டாயப் படுத்தப்படவில்லை. புரூஸல்ஸ், லௌவெய்ன் என்னும் இடங்களிலுள்ள பல்கலைக் கழகங்களிலும் (*Universities*) இலவசக் கல்வி அளிக்கப்பட்டது.

பொலிவியா (*Bolivia*) என்பது தென் அமெரிக்க கண்டத்தில் உள்ள ஒரு குடி அரசு தேசம். 6000,000 சதுரமைல் விஸ்தீரண முள்ளது. 2,200,000 ஜனத்தொகை யுடையது. அமெரிக்க சுதேசிகளும் வெள்ளையரும், நீக்கரோவருமாக பல ஜாதியார் வசிக்கிறார்கள். இங்கு ஆரம்பக் கல்வி கட்டாயமாக ஏற்பட்டிருக்கிறது. 20-வயது முதல் 50-வயது வரையில் இராணுவ ஊழியமும் ஆண்மக்களுக்குக் கட்டாயமாக்கப் பட்டிருக்கிறது.

பல்கேரியா (*Bulgaria*) தேசம் ஐரோப்பாவில் தென்கீழ்ப் பாகத்தில் இருக்கிறது. 42,000 சதுரமைல் விஸ்தீர்ணமுள்ளது. 5,500,000 ஜனத்தொகை யுடையது. பல்கேரியா ஜாதியரும் துருக்கியரும் அங்கு வசிக்கிறார்கள். இத்தேசத்திலும் கல்வி கட்டாயப்படுத்தப் பட்டிருக்கிறது.

கலிபோர்னியா (*California*) மாகாணம் யுனைட்டெட் ஸ்டேட்ஸ் அரசாட்சிக்கு உட்பட்டது. 158,297 சதுர மைல் உள்ளது. இதில் 2,64[illegible] சதுர மைல் தண்ணீர். பிரிட்டானியர், ஜெர்மனியர், இத்தலியா, பிரெஞ்சுக்காரர் ஆகிய இவர்களின் சந்ததியாரும் சீனர், ஜப்பானியர் இந்தியர்களும் வசிக்கிறார்கள். கல்வி இலவசமாக அளிக்கப்படுகிறது.

கானடா (*Canada*) தேசம் வட அமெரிக்காவின் வட பாகத்தில் உள்ளது. 3,730,000 சதுர மைல் உள்ளது. பிரிட்டிஷ் அரசாட்சிக்கு உட்பட்டது. பிரிட்டிஷ், பிரான்ஸ் முதலிய ஐரோப்பிய ஜாதியர்களும், இந்தியரும், சீனரும் வசிக்கிறார்கள். பிரெஞ்சு பேசுவோர் 1,600,000 பேரும் 110,000 இந்தியரும் இருக்கிறார்கள். மொத்த ஜனத்தொகை 8,361,00[illegible] கல்வி இலவசமாகவும் கட்டாயமாகவும் ஏற்பட்டிருக்கிறது. இத்தேசத்தில் 22 பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. 18 வயது முதல் 50 வயது வரையில் இராணுவ ஊழியம் கட்டாயப் படுத்தப்பட் டிருக்கிறது.

"ஆரம்பாசிரியன்"

---

பெருகிவரும் வெள்ளத்தைக் கரைகட்டித் தடுத்தல் அரிது. கரைக்குள் அடங்கிய வெள்ளத்தை கரையை யுடைத்து செல்ல விடுத்தல் மிக வெளியது. அதுபோல கோபத்தை அடக்குதல் அரிது; கோபங் கொள்ளுதல் எளிது.

# மதுரைமா நகர்

(எஸ். சேஷையர்.)

(193-ப் பக்கத் தொடர்ச்சி)

அமிழ்தினு மினிய தமிழி னின்சுவை
யுணர்ந்தநீர் வையை மணந்த பாண்டியன்
பதியென வயங்கிய மதுரையு நீகொலோ?
வல்லாள ரேத்துங் கல்லாடர் தாஞ்செய்
கல்லாட மென்னுங் கனிதமிழ் நூலுட்
சொல்லாயுஞ் சங்கத் தொல்பெரு நகரென
வெல்லாருங் கொள்வா னின்னிசை யகவற்
பாத்தொறு முரைத்துப் பரிவுடன் புகழ்ந்த
மதிகுல வேந்தர்த மதுரையு நீகொலோ?
செந்தமிழ்ப் பாற்கடற் புந்திமத் தாற்கடைந்
துட்பொரு ளாகிய தட்பநல் லமுதை
யுரையெனத் தந்த நரைமுதா தாள
ரந்தண குலத்தின் விந்தையிற் றோன்றி
யன்னார்ப் பற்றிய வின்னாப் பழமொழி
போலியுரையெனச் சால விளக்கிய
வுச்சிமேற் புலவர்கொ ணச்சினார்க் கினியர்
மாண்புட னிருந்த மதுரையு நீகொலோ?
புலத்தமிழ் தோற்ற போலி மதுராய்!
நலத்தெரி வில்லாய்! நாணிலை போலும்!
அன்றோ வென்றன் மெய்ந்நடுங் குறுமால்!
அஞ்ஞான்றை யுயர்வென்! இஞ்ஞான்றை யிழிவென்!
மனைவிசொற் கேட்டுத் தனையீன் றெடுத்த
தாயினைப் பசியிற் றீய விடுக்கும்
பதகனை யொத்த மதுரைமா நகரே!
பொருத்தமின் முரணிருள் போக்கி யெங்குஞ்சீர்

வேப்பம் பழம் கசப்பது வாய்க்குற்றமல்ல. சிலர் பிறரைப் பார்த்த அளவில் தம்போன்றில்லை என்று நினைக்கின்றார்கள். அது மனக்குற்றமாகும்.



திருத்தமென் பரிதி திகழ்ந்து தோன்றியும்
பயிலுந் தமிழ்த்தாய் வெயிலுறத் தள்ளித்
துயிலுகின் றனையோ? தொல்சீர் மதுராய்!
நன்றி யறிவிலாய்! குன்றிய சிந்தையாய்!
குறையே நயமெனக் கொண்டு பிதற்றுவோய்!
உன்வயிற் பிறந்தேன் யானென வுரைக்கவும்
வெள்கினேன்! அந்தோ! வெள்கினேன்!! அந்தோ!!
இன்னணம் வெள்குவோ ரின்னு மெத்துணைப்
பெயரோ? அறியேன் மயலார் மதுராய்!
அழிநிலை யடையா தெழுதி; துயிலுத
லொழிதி; தமிழ்நிலை விழிகொடு காண்டி;
அவளிசைத் தேறல் செவிவாய்ப் பருகுதி;
நந்தலி லின்பஞ் சிந்தையிற் பெறுதி.
என்றோ சொற்றே னென்ன வெண்ணலை.
அருந்தமிழ்த் தாயின் றிருந்திய வன்பினாற்
சிறியனே னித்துணை நெறியெனக் கூறினேன்.
என்னை வெகுளலை; என்னன் பதனை
வேண்டு மெனினீ வெகுள்க; மற்றுச்
‘சொல்வன்மை யுண்டெனிற் கொன்னே விடுத்திடல்
நல்வினை கோறலின் வேறன்’ றென்ன
வுரைத்த புலவனு முளனால். தமரே
யெனினு மவர்பிழை யினிதெடுத் துரைத்தல்
கடனே யன்றோ? கழறுய். அன்றியு
நின்பா லெனக்குள வன்பால் யானுரை
செய்த விதனைநீ நொய்தெனக் கருதி
வாளா காலம் போக்கலை. மதுராய்!
மீளாய் தமிழ்நலம் விரும்பியுய் வாயென.

“ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது” அதுபோல ஏட்டுப் படிப்பு தக்க பலன் தராது. ஆதலால் நல்லாசிரியரைக்கொண்டு எந்த வித்தையும் பழகவேண்டும்.




## இல்லற வொழுக்கம்

(சிவானந்தசாகர யோகீஸ்வரர்.)

(196-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி ஆடவன் கடமையைச் சிறிது நோக்குவாம். கணவன் மனைவியை நடத்துமுறை 'கண்ணுக்கெதிரிற் பெண்டாட்டி' என்ற பழமொழிப்படி எப்பொழுதும் தன் பார்வையிலேயே வைத்துக் கொண்டிருக்கவேண்டும். அவளிடத்தில் அன்பைப் பூரணமாய்ச் செலுத்த வேண்டும். தான் அவளிடத்திலே வைத்த அன்பை அவளும் பிறரும் அறிந்து கொள்ளும்படி உபாயமாய் நடக்கவேண்டும். மனைவி அதனை யுணராக்கால் கணவனை நேசியாள். பிறரறியாக்கால் அவர்கள் பெண்ணை அலட்சியம் செய்வார்கள். ஒரு சமயம் அவளுக்குத் தீமையும் செய்வார்கள்.

மாமியும் நாத்தியும் அன்னிய வீட்டிலிருந்துவந்தவள் இளம் பெண்ணை யில் மருமகளை இழிவாய் நடத்துவது அவர்களுக் கியல்பென்பது பிரசித்தம். அங்ஙனம் நேராதபடி ஜாக்கிரதையாய்ப் பார்க்கவேண்டும். தன்னாற் கூடிய மட்டும் அவள் விரும்பிய பொருள்களைக் கொடுத்துத் திருப்தி செய்விக்க வேண்டும். தன் வீட்டில் அவளுக்குச் சுதந்தரமும் வேலைக்காரர்களின்மே லதிகாரமும் கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் வீட்டுப்பொருள்களின் மேல் அவளுக்குக் கவன முண்டாகாது. தனக்குள்ளமட்டில் ஆடையாபர ணங்களால் அலங்கரிக்கவேண்டும். பெண்களுக்கு ஆடையாபரணங்களிலே விருப்ப முண்டு. மற்றவர்கள் அணிந்து வருவதைக்கண்டால் அவர்கள் மனம் சிறிது வருந்தும். ஆதலால் அது செய்யவேண்டு மென்பது.

"ஆடையாபரணங்களால் மனைவியை அலங்கரிக்காவிட்டால் அவள் தன் புருஷனை ரஞ்சிப்பியாள். அதனால் புத்திரோற்பத்திக் குறைவு நேரிடும்" என்றார் மனுவும். இதனால் அழகில்லாமையாற் புருஷனுக்கு ஆசையைக் கொடாள். அவனுக்கும் விருப்ப மிராது. இராமற்போகவே புத்திரோற்பத் திக்குக் குறைவா மென்பது. சர்வ சுதந்தரமும் சகல அதிகாரங்களும் ஆடை யாபரணங்களும் குறைவற விருந்தாலும் கணவன் அன்பில்லாதவனானால் அவை யெலா மில்லாதது போலவே நற்குணமுடைய பெண்ணுக்குத் தோன்றும். அவளுக்கு நாயகனுடைய அன்பே பெருஞ் செல்வம். ஆதலால் புருஷன் அவளைத் தன் மனமொத்து நேசித்தல் வேண்டும். அதனால் மேற்கூறிய நகை முதலியவை இல்லாவிடினும் அவளுக்குக் கணவனிடத்திலே பேரன் புண்டாம்.

---

உழைப்பால் வருவன பிழைப்பும் புகழும்.



அவ்வாறின்றிச் சிலர் யோசனை யில்லாமற் செய்வதுபோல் இழிவான சொற்களால் வைவதும் அப்பிழையைப் பலரிடத்திற்கூறி அவமானப் படுத்து வதும் இரக்கமின்றி அடித்தலும் மற்றும் வேறு வகையான கொடுமைகளைச் செய்தலும் ஒருபோதுங் கூடாது.

இப்படிச் செய்வதால் எதிர்த்துப் பேசுவதும் பயமின்மையும் அன் பின்மையும் அடங்காமையும் ஒன்றின் பின் ஒன்றாய் வந்து அவளிடம் சேரும். அதனால் விளையுந்தீமை அளவில்லாதனவாம். அவள் செய்த குற்றங்களைப் பிறரறியச் சொல்லித் தூற்றக் கூடாது. தன் மனைவியைக்கூறும் இழிசொற் கள் தனக்கும் தன் குடும்பத்துக்குமேயாமென்று கருதி ஈனமொழிகளால் வைவதாகாது.

அந்நிய வீட்டிலிருந்துவந்த பெண் வாழ்வதைச் சகிக்கமாட்டாத மாமி, மருமகள்மேல் பலவித குற்றங்களைக் கூறக்கூடுமாதலால் அவர்கள் சொல்லைக் கொண்டே மனைவியைக் கண்டிப்பது கூடாது. இவ்வாறு செய்து அவளை மகிழ்வித்து அவளுந் தன்னை விரும்பும்படி செய்துகொண்டு சுகமாக இல்லறம் நடத்த வேண்டும்.

ஒரு கணவன் அந்நியஸ்திரீ கமனம் செய்யக்கூடாது. இதனையே 'பிறன்மனை புகாமை யறமெனத் தகும்' என்றதனால் இல்லறத்துக்கு முக்கிய இலக்கணம் பிறன்மனை புகாமையேயென்று அன்னையார் விளக்கியருளினார். இதனாற் பழியும் பாவமுமுண்டாய் இம்மைப்பயன் ஒருங்கே கெடும். ஆதலால் இல்ல றத்தாற் பயனில்லாமற் போகும். அன்றியும் இச்செயலைக்கண்ட மனைவிக்கும் வெறுப்புத் தோன்றும். பெரியார் இகழ்வர்.

'பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்க ணில்'

என்று வருவதனால், அறநூல் பொருணூல்களை யோதியுணர்ந்த அறிஞர்கள் பிறர் மனையாளை விரும்ப மாட்டார்கள்.

இனி யதுவன்றி வரைவின் மகளிர், பொதுமகளிர் என்று கூறப்படுத லால் அவர் கூட்டம் நன்மை பயப்பதாமெனின் அதனை விலக்கவேண்டு மென்றுணர்த்தவே 'மைவிழியார் மனையகல்' 'மைவிழியாடன்னைக் கையகன் றொழுகு' என்று கட்டளை பிறப்பித்தார் அன்னையார்.

இத்தீய ஒழுக்கத்தை மேற்கொண்டால் பொருளழிவும் பேரழிவும் பெருமை யழிவும் இம்மையிற் பழியு முண்டாகும். ஒரு சமயம் முன்னோ ரீட்டிய பொருளும் தான்தேடிய பொருளும் முற்றுமொழிந்து இரக்கவும் நேரிடும். இது பிரத்தியக்ஷம்.

குடும்பத்தைக் காப்பாற்றாமை, மனைவியைப் போற்றாமை, இல்லற மியற் றாமையாகியவற்றா லுண்டாகும் பாவத்தால் மறுமையில் நரகமெய்தவும் பெறும்.

---

கைத்தொழில் முயற்சி மெய்த்தொழி லாகும்.




# வீரமா நகர்.

(ரா. பி. சேதுப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.)

பாரத நாட்டிற்குத் தென்பால் அமைந்திருந்த பரந்த நாட்டின் தலைநகராய் இலங்கைமா நகரம் இலங்கிற்று. அந்நகரில் அஞ்சா நெஞ்சு படைத்த அரக்கர்கள் வாழ்ந்து வந்தார்கள். பசியும் பிணியும் இன்றி, வசியும் வளமும் சுரந்த அந்நகரில் வசித்த அரக்கரெல்லாம் வீரராய் விளங்கினர் என்பது,

"கழலுலாம் காலும் கால அயிலுலாம் கையும் காந்தும்
அழலுலாம் கண்ணும் இல்லா ஆடவரில்லை"

என்று அனுமன் வாயிலாகக் கம்பர் அறிவிக்கும் மொழிகளால் இனிது விளங்கும். ஆடவராய்ப் பிறந்த மக்கள் அனைவரும் பகைவரை நடுக்கும் புய வலியும் படை வலியும் வாய்ந் திருந்தமையால் அந் நகரம் வீரமாதின் உறைவிடமாய் விளங்கிற்று. குழிந்த கண்ணும் குவிந்த உடலும் உடைய ஆடவர் எவரும் அந்நகரில் இல்லை. நிமிர்ந்த நோக்கும் திமிர்ந்த உடலும் வாய்ந்த வீரரே யாண்டும் விளங்கினார்கள். போர் ஒடுங்கிய காலத்து அந் நகரில் வாழ்ந்த வீரர்கள் ஆடிப் பாடி அகமகிழ்வார்கள். மாடங்களிலும் மாளிகைகளிலும், சாலைகளிலும் சோலைகளிலும், மதுவுண்டு மதுரகீதம் பாடிய அரக்கரைக் கண்ணுற்ற அனுமன்

"பளிக்கு மாளிகைத் தலந்தொறும் இடந்தொறும் பசுந்தேன்
துளிக்கும் கற்பகத் தண்ணறுஞ் சோலைகள் தோறும்
அளிக்குந் தேறலுண்டு ஆடுநர் பாடுநராகி
களிக்கின்றாரலாற் கவல் கின்றார் ஒருவரைக் காணேன்"

என்று புகழும் முறை அறிந்து போற்றத் தக்கதாகும். கனக மாளிகைகளிலும் கனியுதிர் சோலைகளிலும் காயத்தாற் பெரிய அரக்க வீரர். கள்ளுண்டு களித்த காட்சியைத் தன் மெய்யுணர் கண்களால் கண்ட மாருதி இலங்கைமா நகரின் வளத்தையும் வீரத்தையும் வாயாரப் புகழ்ந் துரைத்தான். வறுமையின் கொடுமை யறியாத அவ்வள நகரில் வாழும் பேறு பெற்ற வீரரது முகத்

"காய் முற்றினால் பழமாகும்" அதுபோலவே நல்லவருடைய சிநேகம் அன்பும் அருளும் உண்டாக்கும்.



தில் கவலைக் குறியே இல்லை என்று கவிக்கு நாயகன் கூறும் முறை கருதத் தக்கதாகும்.

இவ்வாறு தேன் பிலிற்றும் சோலைகளில் திரிந்து திளைத்த அரக்கர், போரொலி கேட்டபோது ஆடல் பாடல்களை அறவே யொழித்து அமர்க்களம் நோக்குவார்கள். கல்லெனத் திரண்ட அரக்கரது தோள்கள் போர் முரசம் கேட்டபோது பொங்கி நிமிர்வனவாம்.

"நானில மதனில் உண்டுபோர் என நவிலின் அச்சொல்
தேனினும் களிப்புச் செய்யும் சிந்தையர்"

என்று அரக்கரது போர் ஆர்வத்தைக் கம்பர் அழகுற எழுதி அமைத்தார். பரந்த பாரிடை எங்கேனும் போர் நிகழு மாயின், அரக்கரது மனம் துள்ளித் துடிப்பதாகும். போர்க்களத்தில் நிகழும் வீரச் செய்தியைச் செவி வாயாகப் பருகிச் செம்மாந் திருப்பார்கள். போர்ப்பறை முழக்கம் கேட்டபோது பொங்கி நிமிர்ந்த போர் வீரர் அந்நிலையே திரண்டு படைத் தலைவனது ஆணை வழிச் செல்வார்கள். இவ்வாறு மாற்றார் யார் என்றும் உணராது மறக்களம் எது வென்றும் அறியாது படைத் தலைவன் காட்டிய வழியே விரைந்து சென்ற வீரரது தன்மையை

"ஏனென்றார்க் கென்னென்றார் எய்திய தறிந்திலாதார்
முன்னின்றார் முதுகு நீயப் பின்னின்றார் முடுகு கின்றார்"

என்று கம்பர் அழகிய மொழிகளால் அருளிப் போந்தார். வீரமா நகரினின்றும் அணியணியாய்ப் போந்த வீரர்கள் உற்ற பகை யுணராது ஒருவரை ஒருவர் எதிர் வினவி விரைந்து நடந்து சென்ற விதம், இக் கவியால் இனிது விளங்குவதாகும். மாற்றாரது படைக் கலங்கள் தம் மார்பிற் பொறித்த வடுக்களையே அரக்கர் பொற்றோடுகளாகப் போற்றி மகிழ்ந்தார்கள்.

இத்தகைய ஆற்றல் சான்ற அரக்கர் இராவணன் என்னும் இணையற்ற வீரனது குடையின் கீழ் அமைந்து வாழ்ந்தார்கள். அம் மன்னனது வெண் குடை அரக்கர்க்குத் தண்மையும் அடையார்க்கு வெம்மையும் விளைத்தது. அவ் வீரனது வீணைக் கொடி அசைந்த விரிந்த நில முழுமையும் வளமும் வீரமும் பொங்கி வளர்ந்தன. வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும் வாய்ந்த வீரவேந்தனது விழுமிய புகழை விண்ணோரும் மண்ணோரும் வீணையில் அமைத்துப் பாடினார்கள். வேழத்தின் வலியழித்து வேந்தர் வேந்தனாய் விளங்கிய இராவணனது இணையற்ற பெருமையை

"தோடுழு தண்டார் வண்டும் திசையானைமதம் துதைந்த வண்டுஞ் சுற்ற
மாடுழுத நறுங்கலவை வயக் களிற்றின் சிந்தூரத்தை மாறுகொள்ள
கோடுழுத மார்பானைக் கொலையுழுதநெடுவேலின் கொற்ற மஞ்சி
தாடொழுத பகைவேந்தர் முடியுழுததழும்பிருந்த சரணத்தானை."

என்று நல்லியற் கவிஞராய கம்பர் நயம் சான்ற மொழிகளால் எழுதிப் போந்தார். வணங்காத மன்னரது முடிகளை இலங்கேசனது தாள்களில் வணக்கிய இணையற்ற வேலின் வெம்மையை "கொலையுழுத நெடுவேல்" என்று

நல்லவனென்று பெயர்வாங்க அநேகநாட் செல்லும். கெட்டவனென ஒரு விநாடியில் பேர் எடுக்கலாம்.

கவிஞர் குறித்தமுறை எண்ணுந்தொறும் இன்பம் பயப்பதாகும். இத்தகைய மன்னனுக்குப் பின்னவனாய்த் தோன்றிய கும்பகர்ணனும் மைந்தனாய்த் தோன்றிய மேகநாதனும் வீரத்தின் விளக்கணியாய்த் திகழ்ந்தார்கள். கூற்றையும் ஆடல்கொண்ட கும்பகர்ணன் "புனலையும் கனலையும் பிழிந்து சாறெடுக்கும் பெற்றியான்" என்றும், விண்ணவர் தலைவனை வென்று விளங்கு புகழ்பெற்ற மேகநாதன் வில்லாள ரானார்க் கெல்லாம் மேலவன் என்றும் கவிஞர் கூறுமாற்றால் இவ் விருவரது வீரமும் இனிது விளங்குவதாகும்.

இவ்வாறு எத்திசையும் புகழ் மணக்க வீரமாநகராய் விளங்கிய இலங்கையில் வானவர் அஞ்சி யொடுங்கி அடிமைத் தொழில் ஆற்றுவாராயினர். தருக்கொழிந்த தேவர் அரக்கர்கோன் அடிபணிந்து பணி செய்த பான்மையை

"தேவ ரென்பவர் யாரும் இத்திரு நகர்க் கிறைவற்கு
ஏவல் செய்கிலார் எவரே? எண்வகை யுருவின்
மூவர் தம்மினும் அதிகன் என்றால் அவன் முயலும்
தாவில் மாதவ மல்லது பிறிதொன்று தருமோ"

என்று மாருதி மனமாரப் புகழ்ந்தான். இவ்வாறு வானவரும் வணங்கிப் பணி செய்யும் பெருமை வரத்தினால் வருவதல்லால், வேறொன்றால் வாராதென்றறிந்த மாருதி இலங்கை மன்னன் இயற்றிய மாதவத்தின் மாண்பினை வியந்து நின்றான். மர மடங்கலும் கற்பகமாகவும், மனையெலாம் கனக மாகவும் கண்ட மாருதி

"தெய்வத் தச்சனைப் புகழ்துமோ, செங்கண் வாளரக்கன்
மெய்யொத் தாற்றிய தவத்தையே வியத்துமோ விரிஞ்சன்
ஐயப் பாடிலா வரத்தையே மதித்துமோ, அறியாத்
தொய்யற் சிந்தையாம் யாவரை யாதென்று துதிப்பாம்"

என்று இலங்கையின் எழில் ஒளியில் மயங்கி நின்றான். அந்திமாலை வந்தெய்தியபோது வானவர் பந்தி பந்தியாய் இலங்கை நாதன் மாளிகையை நோக்கி விரைந்தோடுவார்கள். காலம் கடந்து சென்றால் காவலன் முனிவான் என்றறிந்த தேவர், நடுங்கிய மனத்தோடும் ஒடுங்கிய உடம்போடும் வீரவேந்தனை நோக்கி விரைந்தோடும் வேகத்தைக் கம்பர் நகைச் சுவை ததும்ப விளக்கிப் போந்தார்.

"சித்திரப் பத்தியில் தேவர் சென்றனர்
இத்துணை தாழ்ந்தன முனியும் என்று தம்
முத்தின் ஆரங்களும் முடியின் மாலையும்
உத்தரீயங்களும் இரிய ஓடுவார்"

என்னும் கவியி லமைந்த நகைச் சுவை நுகரத் தக்கதாகும். கடமையாற்றும் காலம் கழிந்தால் காவலன் கனன்று சீறுவான் என்று கலங்கிய வானவர், மார்பிலணிந்த முத்தாரங்களும், தோளி லணிந்த உத்தரீயங்களும், முடியி லணிந்த மணி மாலைகளும், துவண்டு குழைந்து சரிய, வேகமாய் ஓடினார்கள் என்று கவிஞர் கூறும் மொழிகளில் அமரர் அச்சம் இனிது விளங்கக் காணலாம்.

---

இரவையும் பகலையும் எப்படிக் கழிக்கின்றோமோ அப்படியே இன்பத்தையுந் துன்பத்தையும் அனுபவிக்கின்றோம்.

# தமிழ்மொழியின் பெருமை

(பொ. திருகூடசுந்தரம் பிள்ளை, எம். ஏ., பி. எல்.)

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோ லனைத்துலகு மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க விருந்தபெருந் தமிழணங்கே.

(மனோன்மணீயம்.)

தமிழ் மக்கள் தங்கள் தாய்பாஷையினிடமுள்ள அளவிலா அன்பின் மிகுதியால் தங்கள் தமிழே தலை சிறந்த பாஷையென்றும் அச்சிறப்பிற்குரிய காரணங்கள் புராண சம்பந்தமானவை என்றும் கூறுவர். ஆனால் அவர்களிடம் கூறும் புராணப் பெருமைகளை இக்காலத்தவர் யாரும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏற்றுக் கொண்டாலும் அவை தமிழ்மொழியின் சிறப்பை ஸ்தாபித்துவிடா. சரித்திர சம்பந்தமான பெருமைகள் யாரும் ஒப்புக்கொள்ளத் தக்க உண்மையுடையனவா யிருக்கலாம். ஆனால் அவை உண்மையானவைகளாயிருந்தால் மட்டும் போதா. மொழிமாண்பைக் காட்டக் கூடியவைகளாயு மிருக்கவேண்டும். அப்பொழுதுதான் தமிழன்பர் கூறும் சரித்திரக் காரணங்களைக் கொண்டு தமிழின் தலைச் சிறப்பை ஒப்புக்கொள்ள இயலும்.

ஆகையால் முதலில் தமிழர் கூறும் சரித்திரக் காரணங்கள் எவை? அவை உண்மையானவைதானா? உண்மையானவைதான் என்று நிர்ணயித்தற்குரிய சான்றுகள் எவை என்று ஆராயவேண்டும். அவர்கள் கூறும் காரணங்கள் ஆறு என்றும் அவற்றில் முதற்கண் கூறப்படும் "தொன்மைக்"குரிய சான்றுகள் இவை என்றும் இதற்கு முன் எழுதிய வியாசங்களில் விளக்கியிருந்தேன்.

அதுபோல் இரண்டாவதாகிய "பயின்ற நில விஸ்தீரணம்" சம்பந்தமாயும் சில சான்றுகள் கூறியிருந்தேன். அச் சான்றுகளிலிருந்து தமிழ்மொழி ஆதிகாலத்தில் கிறிஸ்து பிறப்பதற்குப் பல ஆயிர வருஷங்கட்கு முன் வடக்கே இமயமலை முதல் தெற்கே கன்னியாகுமரி வரைக்கும் அதற்குத் தெற்கே 700 காவத தூரம் நிலமிருந்த பொழுது அந்நில முழுவதும் அதாவது மேற்கே மடகாஸ்கர் முதல் கிழக்கே சந்தா தீவுகள் வரையும் அதனால் பரதகண்ட முழுமையும் பஞ்சாப்முதல் அஸ்ஸாம்வரையும் தெற்குக் கடலில் இலட்சத் தீவுகள்,

---

அத்தனைக் காணச் சுத்தமே துணையாம்.

சுமாத்ரா, ஜாவா, நியூஜீலண்டு, அஸ்திரேலியா முதலிய பெருந்தீவுகளிலும் பரவியும் பேசப்பட்டும் வந்தது என்று அறிந்தோம்.

### வட ஆசியா.

தமிழ்மொழி பரவியிருந்த நிலம் இவ்வளவு மட்டுமன்று, இதற்கும் அதிகமாயுண்டு என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இந்தியா ஆசியா கண்டத்தில் ஒரு பாகம். ஆகையால் தமிழ்மொழி இந்தியாவுக்கு வெளியேயும் பரவியிருந்திருக்குமானால் அது இந்தியாவுக்கு வடக்கேயுள்ள ஆசியாவின் இதர தேசங்களிலும் பயிலப்பட்டு வந்திருக்க வேண்டும். அங்ஙனமே பயிலப்பட்டு வந்ததாகச் சில ஆசிரியர்கள் அபிப்பிராயப் படுகின்றனர்.

உதாரணமாகத் தமிழ் பாஷையையும் சைன தேசத்து பாஷையாகிய சீன பாஷையையும் நன்றாய் ஒப்பிட்டுப் பார்த்தால் சீனபாஷை தமிழ்மொழியின் தொடர்புடையது என்பது மொழிநூல் வல்லார்க்கு எளிதில் புலனாகும் என்று கூறப்படுகின்றது. அதுபோல் அச் சீனபாஷை வழங்கும் சைனாவுக்கு வடக்கே ஆசியா கண்டத்தின் வடகிழக்கு மூலையிலுள்ள "காமஸ்கட்கா" என்னும் பிரதேசத்தில் இக்காலத்தில் பேசப்படும் பாஷை தமிழ்மொழியின் சிதைவு என்று டாக்டர் ஹண்டர்துரை எழுதுகின்றார்.

### மேல் ஆசியா.

ஆசியாவின் வடபாகங்களில் பரவியிருந்தது போலவே ஆசியாவின் மேல் பாகங்களிலும் தமிழ்மொழி பரவியிருந்தது என்பதற்கும் சான்றுகள் உள. இந்தியாவின் வடமேற்கு பாகத்தில் உள்ள "பலுச்சிஸ்தானம்" என்னும் பிரதேசத்தில் பேசப்பட்டுவரும் பாஷையை உற்றுநோக்கின் அது தமிழ்மொழியின் பாகதமே என்று தெரிந்து கொள்ளலாம் என்று சரித்திர ஆசிரியர்கள் உரைக்கின்றனர். அதற்கு மேற்கேயுள்ள பாலஸ்தீனத்தில் ஆதியில் பேசப்பட்ட பாஷை ஹீப்ரு என்பதாகும். அதில் பல தமிழ்ப் பதங்கள் காணப்படுகின்றன என்று ரைஸ் டேவிட்ஸ் பண்டிதர் பகர்கின்றார். அந்நாட்டில் வசித்து இதோபதேசம் இயம்பி வந்த இயேசுகிறிஸ்து ஒரு தமிழரே என்று எம். எஸ் சுப்பிரமணிய அய்யர் பத்திரிகைகளில் பல ஆதாரங்களுடன் எழுதிவருவது யாவரும் அறிந்த விஷயம். தவிர, அப் பாலஸ்தீன நாட்டில் "ஊர்" என்னும் விகுதியோடுள்ள நகரங்களின் பெயர்களும் அந்நாட்டு ஜனங்களின் வழக்க பழக்கங்கள் தமிழர் வழக்க பழக்கங்களை ஒத்திருப்பதும் பழய காலத்தில் பாலஸ்தீனம் தமிழ்பயின்ற தேசமே என்று சான்று பகரும் என்றும் கூறுவர்.

### ஆப்பிரிக்கா

இனி ஆப்பிரிக்கா கண்டத்தைக் கவனிப்போம். ஆப்பிரிக்கா கண்டத்தை ஒட்டியுள்ள மடகாஸ்கர் வரையும் தமிழ் நாடும் தமிழ் பாஷையும் ஆதியில் பரவியிருந்தது என்பதை முன்னமேயே பார்த்துள்ளோம். அக்கண்டத்தின் வடபாகத்தில் உள்ள "எகிப்து" (அதாவது மிசிரம்) என்னும் நாட்டோடு தமிழ்நாடு பழய காலத்தில் வியாபாரம் செய்து வந்தது என்னும் விஷயத்தையும் முன் வியாசங்களில் அறிந்தோம். சமீப காலத்தில் அங்குள்ள பாலைவனத்தில் ஒரு நாடக ஏடு கண்டெடுக்கப்பட்டது. அந்நாடகம் கிரீக் பாஷை கன்னட பாஷை இரண்டும் கலந்து எழுதப்பட்டிருப்பதாக ஆசிரியர்கள் கூறுகின்றனர். கன்னடம் தமிழின் புத்திரி என்பது யாவரும் அறிந்த விஷயம். ஆகவே பல்லாயிர வருஷங்கட்கு முன்னரேயே தமிழ்மொழியும் அதன் புத்திரியாகிய கன்னடமும் எகிப்து நாட்டில் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வந்திருக்கின்றது என்பது தெளிவாகும். அந்நாட்டு ஆதிகால பழக்க வழக்கங்கள் இந்நாட்டுப் பழக்க வழக்கங்கள் இரண்டின் ஒற்றுமையும் மேற்கூறிய விஷயத்தை உண்மையென வலியுறுத்தும். சமீபத்தில் எகிப்து நாட்டில் பூமிக்குள் மூடிவைத்திருந்த அரச வம்சத்தாரின் கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவைகளில் முக்கியமானது ஆதிகால அரசன் "தூதன் காமன்" என்பவனதாகும். அவன் பெயரை வைத்து அவன் ஆதியில் தமிழ்நாட்டு மன்னரிடமிருந்து மிஸிர மன்னர் சபைக்குச் சென்ற தமிழ்த் தூதனாயிருக்கலாம் என்று சில தமிழ்ப் பண்டிதர்கள் அபிப்பிராயப் படுகின்றனர்.





### ஐரோப்பா.

தமிழ்மொழி ஆதியில் இந்தியாவில் மட்டுமன்றி ஆசியா, ஆப்பிரிக்கா ஆகிய கண்டங்களிலும் பரவியிருந்தது போலவே ஐரோப்பா கண்டத்திலும் அநேகமாக எல்லாப் பாகங்களிலும் பரவியிருந்தது என்பதற்கும் தமிழன்பர்கள் சான்றுகள் பல சாற்றுகின்றனர். ஆசியா கண்டத்திற்கு அடுத்துள்ள கிரீஸ் தேசத்து பாஷையில் தமிழ்ப் பதங்கள் பல காணப்படுகின்றன என்பது ரைஸ் டேவிட்ஸ் பண்டிதரின் அபிப்பிராயம். அந்நாட்டு ஆதிகால வழக்கங்கள், புராணக்கதைகள் முதலியனவும் அவர் அபிப்பிராயத்தை வலியுறுத்தும்போல் காணப்படுகின்றன.

அந்த கிரீஸ் தேசத்திற்கு மேற்கே உள்ளது இத்தாலிய நாடு. அதில் உள்ள "டஸ்கனி" என்னும் பிரதேசத்தார் பேசும் பாஷை தமிழ்மொழியின் சிதைவு என்று சரித்திர ஆராய்ச்சி நிபுணர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

ஐரோப்பாவின் மேற்கே கடலில் உள்ள பிரிட்டிஷ் தீவுகளிலும் ஆதியில் தமிழ் பேசப்பட்டிருத்தல் வேண்டும் என்று கூறுகின்றவர் உளர். அவர்களில் ஒருவர் ஆங்கிலநாடு ஆதியில் சைவநாடு என்றும் வாதிக்கின்றனர். மற்றொருவர் ஐரோப்பாவின் வடமேற்கு மூலையில் உள்ள "ஸ்காந்திநேவியா" என்னும் நாட்டிலும் ஆதியில் பேசப்பட்டு வந்த பாஷை தமிழே என்றும் கூறுகின்றனர்.

### எனது அபிப்பிராயம்

இங்ஙனம் தமிழ்ப் பண்டிதர்கள் தங்கள் தாய்மொழியாகிய தமிழ் மொழிதான் முதன் முதலில் உலகத்தில் தோன்றியது என்றும், அங்ஙனம் தோன்றிய காலத்தும் அதற்குப் பின் வெகு கால மட்டும் அதுவே உலக முழுவதிலும் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வந்தது என்றும் கூறிவருகின்றனர். அவர்கள் கூற்றுக்கு ஆதாரமாகவுள்ள சான்றுகளை மேலே விரித்துரைத்திருக்கின்றேன். ஆனால் அச்சான்றுகளை ஆராயப் புகுந்தால் அவற்றில் சிலவே ஆட்சேபமின்றி ஒப்புக்கொள்ளக் கூடியவையாயிருக்கும் என்று விளங்கும். ஆட்சேபமின்றி ஒப்புக்கொள்ளத் தகுந்தவை சிலவாகவே யிருந்தாலும் அவை

தமிழ் மொழி ஆதிகாலத்தில் வெகு தூரம் வரை பரவியிருந்தது என்பதை நிச்சயமாகக் கூறக்கூடிய ஆற்றல் உடையனவே யாகும். யார் எது கூறினும் தமிழ் மொழி ஆரிய பாஷையாகிய சம்ஸ்கிருதம் வரும் முன் இந்தியா முழுவதும் பரவியிருந்தது என்பதை மறுக்க இயலாது. சம்ஸ்கிருதமோ இங்கு வரும் முன் பாஷையாக ஒழுங்குபடுத்தப்படாமல் பேச்சு வழக்கில் மட்டுமே இருந்து வந்தது என்பதும் அப்பாஷையின் பாகங்களைப் பயிலும் ஜாதியாரே ஆப்பிரிக்கா ஐரோப்பாக கண்டங்களில் போய் வசித்தவர்களாவர் என்பதும் சரித்திர உண்மைகளாகும். ஆகையால் ஆதியில் உலகில் வ்ழங்கப்பட்ட "பாஷை" தமிழ் மொழியே என்பது எளிதில் விளங்கும். இது பற்றியே மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம் பிள்ளை தமிழ்த் தாய் வணக்கம் கூறும் பொழுது,

சதுமறை ஆரியம் வரும் முன் சகமுழுது நினதாயின்
முதுமொழி நீ அனாதிஎன மொழிகுவது வியப்பாமே.

என்று பாடியுள்ளார். கவிதிலகர் சுப்பிரமணிய பாரதியார்,

ஊணர் தேசம் யவனர்தந் தேசம்
உதய ஞாயிற் றொளிபெறு நாடு
சேணகன்ற தோர் சிற்றடிச் சீனம்
செல்வப் பாரசிகப் பழந்தேசம்
தோணலத்த துருக்க மிசிரம்
சூழ்கடற் கப்புறத்தினி லின்னும்

காணும் பற்பல நாட்டிடை யெல்லாம் தமிழ்த்தேவியின் துவஜம் சிறப்புறச் செய்யப்பட் டொளி வீசிப் பறந்து நின்றது என்று கூறுகின்றார்.

இதுகாறும் தமிழ் மொழி முதுமொழி என்பதற்கும் பார் முழுதும் பரவியிருந்தது என்பதற்கும் சான்றுகள் கூறினேன். இனி அடுத்த வியாசத்தில் ஏனைய சரித்திரக் காரணங்கள் சம்பந்தமாகத் தமிழ் மக்கள் கூறும் சான்றுகளை எடுத்துரைக்க உத்தேசித்திருக்கின்றேன்.

தாங்கள் சர்வ ஜாக்கிரதை புருஷர்கள் என்பது சிலருடைய பாவனை. பத்துப் பதினைந்து ஸ்டேஷன்கள் கடக்கும் வரை சிரமப்பட்டு விழித்துக் கொண்டிருப்பர். அடுத்த ஸ்டேஷனில் இறங்கவேண்டி யிருக்கும்—அப்பொழுதுதான் கும்பகர்ணப் படலம் மும்முரமாய் வாசித்துக்கொண்டிருப்பர்.

***

எங்கள் வீட்டுக்கு எத்தனையோ பத்திரிகைகள் வருகின்றன. அவைகளை நான் கையால் கூடத் தொடுவதில்லை என்கிறார் ஒருவர்—இவருடைய கௌரவமே கௌரவம்! இந்தக் கௌரவத்தில் பத்திரிகைப் பித்தர்களுக்கு ஏன் ஆசையில்லை?

***

சிறு துவாரத்தில் வெளிப்பொருளை நோக்குவோமானால் எப்படி எல்லாப் பொருளும் தெரிகிறதோ அப்படியே சிறுவர்களையும் பழக்கத்தில் கொண்டுவந்தால் பெரிய சங்கதியும் முடித்துக்கொள்ளலாம்.

---

அடிமை யகற்றல் மிடிமை தீர்க்கும்.

# "கம்பர் கவி நலமும் மாதர் மன நிலையும்"

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், பி. ஏ.

இந் நிலவுலகில் வாழும் மக்களின் உள்ளத்தை உள்ளவாறு அறிந்து கூறுவதே உத்தமக் கவிகளின் இலக்கணம் என்பர் பெரியோர். இம் முறையை உரையாணியாகக் கொண்டு தமிழ்க்கவி உலகை நாம் ஆராயப் புகுந்தால் புலவர் என்னும் புகழ் பெறுதற்கு உரியார் ஒரு சிலரே யாவார் என்று காண்போம். அப்புலவர் பெரு மக்களுள் எல்லாம், வள்ளுவப் பெருந்தகையாரும், கவியரசர் கம்பரும் நாம் எடுத்துக்காட்டிய இலக்கணத்திற்குத் தலைசிறந்த சான்றாய் அமைந்து தம் தம் புகழுடம்பை நிலைபெற நிறுவியுள்ளார்கள். இவர்களில் கவியரசர் கம்பர், மக்களுள் ஒரு பகுதியினராய மாதர்தம் மன நிலையை எவ்வாறு உணர்ந்து, அவரது உலகம் போற்றும் உயரிய நூலாம் இராமகாதையில் அமைத்துள்ளார் என்பதை யானறிந்தமட்டில் எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மாதர் மன நிலையை அரியதோர் ஆற்றல்வாய்ந்த பெரு மக்களும் உணர்தல் எளிதன்று என்பது வெள்ளிடைமலை.

"பங்கயத் தொருவனும் விடையின் பாகனும்
சங்குகைத் தாங்கிய தரும மூர்த்தியும்
அங்கையில் நெல்லிபோல் அனைத்து நோக்கினும்
மங்கையர் மனநிலை உணர வல்லரோ"

என்று கவியரசர் பெருமானே மாதர் மனநிலையை உணரும் அருமையினைப் புகழ்ந்து உரைக்கின்றார். இவ்வாறு உணர்ந்து கூறுதற்கரிய மாதர் மனநிலையைக் கவியரசர் கம்பர் உணர்ந்து கூறும் இடங்கள் இராமாயணத்தில் பலவுள. நம் தமிழகத்தில் பெண்கள் பெருமையைப் போற்றிப் புகழாத புலவர் ஒருவருமிலர். 'பெண்ணெனில் பேயெனப் பிதற்றிடும் மாந்தர், கண்ணிலார் என்றே கழறுதற்குரியர்" என்று வீர முழக்கம் செய்கின்றார் ஒரு கவி. இத்தகைய பெண்ணிற்குப் பெருமையளிப்பது அவன் தன் நிறையுடைமையே யாகும் என்பது யாவரும் அறிந்த உண்மை. இவ்வுலகில், கற்புடைப் பெண்ணைப் படைத்திருத்தலே, பெறற்கரியதோர் பெரும் பேறு என்பது புலவர் பெருமக்கள் துணிபு. அதுவே சிறந்த உண்மையாகும்.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்"

என்றார் வள்ளுவப் பெருந்தகையார். இவ்வுண்மை நமது கவியரசர் கம்பர் பெருமானால் பொன்னேபோல் போற்றப்படுகின்றது.

---

பொதுநலமதனைப் புரிதல்வேண்டும்.

காவியம் எழுதப் புகுந்த கவிஞர் அனைவரும் முதன்முதலில் அவர்கள் எடுத்துக்கொண்ட நாட்டின் நீர்வளத்தைப் போற்றிப் புகழ்கின்றார்கள்.

"கோடைக்காலத்தில் வெண்மையாயிருந்த மேகங்கள் மாரிக்காலம் வர நீல நிறமாய் மாறலும், பின்னர் அவை மின்னிவந்து மலையிற் படிதலும், படிந்த மேகம் மழை பொழிதலும், பொழிந்த மழை வெள்ளமாய்த் தழைத்தலும், தழைத்தவெள்ளம் ஆறுகிச் சேர்தலும், சேர்ந்த வெள்ளம் குறிஞ்சியில் புரண்டு, முல்லையில் பாய்ந்து, மருதத்தில் பெருகி, நெய்தலில் தவழ்ந்து, கடைசியில் கடலொடு கலப்பதும் ஆகிய இவையெல்லாம் நதியொன்றின் சரித்திரமாய்" அமைத்துக் கூறுவதுதான் கவிமரபாகும். நாட்டின் நீர்வளத்திற்குக் காரணமாயிருப்பது மழை பொழியும் மேகமென்பது புலவர் பலரின் கருத்தாயிருக்க, நமது கவியரசர் அம்மழைக்குக் காரணமாயிருப்பது மாதரார் கற்பு எனப் போற்றி யுரைக்கும் நலம் நாம் கண்டு மகிழ்வதற்குரிய ஓர் இடமாகும்.

"பொற்பில் நின்றன பொலிவு, பொய்யிலா
நிற்பில் நின்றன நீதி, மாதரார்
அற்பில் நின்றன அறங்கள்—அன்னவர்
கற்பில் நின்றன காலமாரியே"—(அற்பு-அன்பு.)

என்பது கவியரசர் கூற்றாகும். இவ்விடத்து

"தெய்வந்தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்று வள்ளுவர் அருளிய தெள்ளிய குறளின் கருத்தும் உற்று நோக்கத் தக்கது. "பெண்டிர்க்குத் தெய்வம் கொழுநனே" என்ற கொள்கை, நம் தமிழ் மக்களிடையே யெழுந்த உயரிய உண்மையாகும். தலைவனுடனுறைந்து இல்லறம் நடத்தும் தலைவியர், கோவில் சென்று கடவுளை ஆராதிக்க வேண்டிய அவசியமேயில்லை யென்பதும், அவர்கள் இல்லத்தில் இலங்குகின்ற தலைவனே அவர்களின் கண்கண்ட தெய்வம் ஆகும் என்பதும், இந்தத் தலைவனை வணங்கி, கற்பின் நெறி வழாது வாழும் பெண்ணொருத்தி "மழை பெய்" என்றால் மழை பெய்தே தீரும் என்பதும் தமிழர்தம் கொள்கையாய் இலங்கக் காண்கின்றோம். ஆகவே பெண்ணின் பெருமை அவளது நிறையுடைமையிலும், அவளது நிறையின் திறம், மழை பெய்விக்கும் ஆற்றலிலும் அமைந்து கிடக்கக்காட்டும் புலவர் பெருமையே பெருமை. இத்தகைய அழகிய கருத்து கம்பரது உள்ளத்தில் எவ்வாறு ஆழ்ந்து பதிந்துள்ளதென்பதை விளக்க ஒரே ஒரு சான்றுமட்டும் கூறி அடங்குதும். கம்பர், அவரது கவி உலகில் ஒரு பொழிலைக் காணுகின்றார். அப்பொழில் முனிவர் இருந்து தவஞ் செய்தற்குரிய ஓர் தூய இடமாகும் என்பதையும் உணர்கின்றார். அத்தூய தன்மைக்கு இலக்கிய உலக முழுவதிலும், ஓர் உவமானம் தேடித் தேடிப் பார்க்கின்றார். பல கருத்துக்களை தம் மனத்தகத்தே பதித்த அவர் கடைசியாக

"தங்கணுயகரிற் றெய்வம் தவம்பிறிதில வென்றெண்ணும்
மங்கைமார் சிந்தைபோலத் தூயது"

என்று நிறையுடை மாதரின் தூய மனநிலையைப் போற்றி யுரைக்கின்றார் என்னே புலவர் திறம்!

---

குற்ற முணர்ந்து சுத்தமுறுக.



இதுவரை நிறையுடை மாதர் நீர்மையை நினைந்தோம். இனி விருந்தோடுண்டல் என்ற உயரிய மன நிலை கம்பரது கவி உலகில் காணும் மாதரிடத்து எவ்வளவில் அமைந்து கிடக்கின்றது என்பதையும் பார்ப்பாம்.

"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்பதே தமிழக மக்களின் இல்லற இரகசியமாகும். இந்த உண்மையை உணர்ந்த கம்பர் கோசல தேசத்து மக்கள். "தம்தமில்லிருந்து, தாமும், விருந்தொடும் தமரினோடும் அமுத உண்டி அருந்தும்" அழகினைத் தமது அழகிய கவி நலத்தால் போற்றி யுரைக்கின்றார். "விருந்து கண்டன்ன விழாவணி விரும்பும்" மக்களே கம்பரது கோசலத்தில் நிறைந்திருந்தனர். இனி இக் கவியரசர், தெண்ணீர் நிறைந்த தடாகத்தினிடத்தே அன்றலர்ந்த செந்தாமரையினைக் கண்ட காலத்து அவை மலர்ந்திருந்த தன்மையை,

"விருந்து கண்டுள்ளம் களிக்கும் மங்கையர்
முகமெனப் பொலிந்த கமலம்"

என்று போற்றி யுரைக்கின்றார்.

"மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"

என்று வள்ளுவர் அருளிய உண்மையை உணர்ந்து மாதர் மன நிலை அவரது மதிவதனத்தே விளங்குவதாகும். இவ்வாறு விருந்தோம்பும் வாழ்க்கையையுடைய மாதர் வதனத்தைப் போற்றும் கம்பர் கவிநலம் கற்றார் உளத்திற்கு களிபேருவகை தருவதாகும்.

இனி இம்மாதர் நுணுகிய அறிவு படைத்தவர்களாய் விளங்குகின்றார்கள் என்பதையும் கம்பர் மறந்தவரல்லர். மாதரது கூர்த்தமதி, தலைவன் தலைவியரிடையே நிகழும் புலவி நுணுக்கத்தில் விளங்குவதாகும். வள்ளுவர் அருளிய,

"வழுத்தினள் தும்மினேனாக வழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீரென்று"

என்ற குறளை உற்று நோக்குங்கள். மாதரின் கூர்த்தமதி நலம் விளங்கக் காண்பீர்கள். தலைவனும் தலைவியும் ஒரு பொழிலினிடத்தே தனித்திருந்த காலையில், தலைவன் இயற்கையாய் தும்மல்வந்து தும்ம, அதையுணர்ந்த தலைவி தலைவனை வாழ்த்தியதோடமையாது, பின்னர், உம்மை நினைந்து வருந்துகின்ற மாதருள் எவர் நினைத்தலால் தும்மினீர் என்று பிணங்குகின்றாள். அன்புடையார் நினைத்தபோது, நினைக்கப்பட்டவருக்குத் தும்மலுண்டாகும் என்ற உலக வழக்கை அடிப்படையாகக்கொண்டு, தான் தன் தலைவன் பக்கலிருப்பவும், தலைவனுக்கு தும்மல் வந்ததற்கு காரணம், தன்னைத் தவிர அவனுழை அன்புடைய மாதர் பலருளர்போலும். அவருள் ஒருவர் நினைத்தனாலேயே அவனுக்குத் தும்மல் வந்தது என்று உருவகஞ்செய்து அவ்விதம் அவனை நினைத்தது யார் என்று கேட்டுப் பிணங்கினாள் என்பது புலவர் கருத்தாகும்.

---

குற்றம்போக்கிக் குணமுற்றுயர்க.

இத்துடன் கம்பர் அருளிய,

"போரென்ன வீங்கும் பொருப்பன்ன பொலங்கொள்திண்டோள்
மாரன் அனையான் மலர் கொய்திருந்தானைவந்தோர்
காரன்ன கூந்தல் குயிலன்னவள் கண்புதைப்ப
யாரென்ன லோடும் அனலென்ன வெய்துயிர்த்தாள்" என்னும்

செய்யுளில் விளங்கும் மாதர் மதிநலத்தை ஒப்பிட்டு நோக்குங்கள். ஒரு பொழிலினிடத்தே ஆடவரும் மகளிரும் பூக்கொய்து விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். அவ்விடத்தில் ஒரு தலைவன் பூக்கொய்து நிற்கின்றான். அவனது தலைவி, அவனறியாது அவன் பின்வந்து, அவனது கண் பொத்தி நிற்கின்றாள். கண் பொத்தியது யார் என்று தெரியாத தலைவன் இது யார் என்று கேட்கின்றான். யார் என்று கேட்ட அக்கணமே, கண் பொத்திய கையிரண்டையும் எடுத்துவிட்டு, தலைவி கண்ணில் நீரருவி சோரக் கலங்கியழுது கரைகின்றாள். என்னே! புதுமை! யார் என்று கேட்டால் நான் தானே யென்று கூறி அவள் அவனுடன் உறவாடியிருக்கலாமல்லவா. ஆனால் அம்மங்கை நல்லாள், தான் தன் தலைவனது கண்ணைப் பொத்திய காலத்து தலைவன் அக்கைகள் ஒரு பெண்ணினது கைகள் என்பதை மெய்தொட்டுப் பயிறல் என்ற உணர்ச்சியால் உணர்ந்திருக்கலாம். தன் தலைவன் தன்னைப் போல பல மங்கையருடன் விளையாடி அனுபோகமுடையவனா யிருத்தலினாலன்றோ என்னுடைய கைக்கும் மற்ற மங்கையர் கைக்கும் வித்தியாசம் தெரியாது மயங்கி யாரென்று கேட்க நேர்ந்தது. ஆகவே, தன் தலைவனின் காதலைக் கவர்ந்தவர் பலருளர்போலும் என்று கருத அக் கருத்துக்களின் எதிரொலி கண்களின் வழியே கண்ணீராய்ப் பெருக நின்றாள் என்பதே கவியரசர் க்ருத்தாகும். என்னே! மாதர் கூர்த்த மதி நலம்! என்னே கம்பர் கவி நலம்!

நிறையுடைமகளிர் நீர்மையை விரித்துரைக்கும் கம்பர், நிறையின் நீங்கிய மகளிர் கீழ்மையை உணர்ந்து கூறும் திறனும் போற்றத்தக்கதேயாகும். கவியரசர், அயோத்தி நகரை அரண்செய்து கிடக்கும் அகழியின் ஆழத்தை விளக்க விரும்புகின்றார். அவ்வகழி, "பொன்விலை மகளிர் மனமெனக் கீழ்ப் போய்" ஆழ்ந்து கிடக்கின்றது என்று கூறி, நிறையின் நீங்கிய மகளிரது தாழ்ந்த மன நிலையை விளக்குகின்றார். பாலைவனத்தின் பசையற்ற தன்மைக்கும் வேறு உதாரணம் கண்டாரல்லர். "பொன்விலைப் பாவையர் மனமும் போல் பசையுமற்றது" என்றே கூறுகின்றார். மாரீசனென்னும் மாயமான் ஓடி மறையும் சித்திரத்தைத் தீட்ட விரும்பிய கம்பர் உள்ளத்து

"நின்றதேபோல நீங்கும் நிதிவழி நேய நீட்டும்
மன்றலங் கோதை மாதர் மனமெனப் போயிற்றம்மா"

என்ற உவமானமே நின்று நிலவுகின்றது. ஆகவே நிறையிழந்து, பொன்னுக்கும் பொருளுக்கும் தம் மானம் விற்கும் பேதை மாதரின் தாழ்ந்த மன நிலையை உணர்ந்துரைக்கும் கம்பர் கவிப்பெருமையே பெருமை. அன்பர்களே! கவியரசர் கம்பர் கவி உலகில் காணும் "தங்கள் நாயகரிற் றெய்வம் தவம் பிறிதிலை யென்றெண்ணும் மங்கைமார்" தூய சிந்தையையும், "மெய்

இன்பமும் துன்பமும் எண்ணியாங் செய்தும்.



வருபோக மொக்க உடனுண்டு விலையுங் கொள்ளும் பையர வல்குலார்" தம் உள்ளத்தையும் ஒப்பிட்டு நோக்குங்கள், உண்மை காண்பீர்கள்.

இதுவரை பொதுவாய் மாதர் மனநிலை கம்பர் கவிநலத்தில் எவ்வாறு அமைந்துள்ளது என்று பார்த்தோம். இனி ஆரியர் உலகத்தை அணிசெய்து விளங்கும் சீதையின் சீலத்தையும், அரக்கர் உலகத்தின் அணி கெழுதெய்வமாய் விளங்கும் மண்டோதரியின் மன நிலையையும் ஆய்ந்து கூறி இக் கட்டுரையை முடிக்க விரைகின்றேன். "ஆதரித்து அமுதில் கோல் தோய்த்து, அவயவம் அமைக்கும் தன்மை, யாதெனத் திகைக்குமல்லால் மதனற்கு மெழுதவொண்ணாச் சீதை"யின் சீலம் நாம் அளவிட்டுரைக்கும் திறத்தினது அன்று. மிதிலைமாநகரில் அரசமாளிகையில் கன்னிமாடத்து மேடைமீது நின்று தன் காதலனைக் கண்டு, அவன் கண்ணொடு கண் இணைகவ்வி, ஆதரவுபடுகின்ற இடத்திலும், பின்னர் அயோத்திமா நகரில், "நாயகன் வனம் நண்ணலுற்றான் என்றும், மேயமண் இழந்தான்" என்றும் கேட்டகாலத்து அதற்காக ஒரு சிறிதும் வருந்தாது, "நீ வருந்தலை நீங்குவன் யானென்று" இராமன் சொல்லியகாலத்து அவள் தேம்பியழுகின்ற இடத்திலும் அவளது மனநிலை கம்பரது கவி நலத்தால் அழகுறுவதாயிற்று. இன்னும் அமரர்தம் புகழ் விழுங்கிய அரக்கர்கோன் இவளைத் தூக்கிச்சென்று அசோகவனத்தினில் சிறை வைத்திருந்த காலையில், அங்கும் தான் தனியாயிருக்க நேர்ந்த தனது நிலைக்காக வருந்தாது தன் தலைவன் அப்போழ்தத்து, என்ன நிலையில் எவ்வாறு வருந்துகின்றானோ என்று எண்ணியெண்ணி ஏங்கி நெஞ்சம் புண்ணாய் உலைகின்றாள்.

"அருந்து மெல்லடகாரிட அருந்தும் என்றழுங்கும்
விருந்து கண்டபோது என்னுறுமோ என்று விம்மும்"

என்று கவி கூறும் திறன் கம்பருடையதேயாகும். "சீலமின்னதென்று அருந்ததிக்கருளிய திரு"வின் நிறையின் நீர்மை இக்கட்டுரையில் சுருக்கிக் கூறும் திறத்தினது அல்ல.

"நிலம் பொறையிலதென நிமிர்ந்த கற்பு"டைய சீதையின் சீலத்தையும், தென்னிலங்கைத் தெய்வமாய் இலங்கிய மயன் மகளாம் மண்டோதரியின் மாண்பையும் ஒப்பிட்டு நோக்கினால் வேற்றுமை காண்பது அரிதேயாகும். கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்னும் உண்மைக்குச் சிறந்த சான்றாய்,

"பஞ்செரியுற்றதென்ன அரக்கர்தம் பாவை யெல்லாம்
வெஞ்சின மனிதர் கொல்ல விழிந்ததே மீண்டதில்லை,
அஞ்சினேன்! அஞ்சினேன்! இச்சீதை யென்றமிழ்தாற்செய்த
நஞ்சினால் இலங்கை வேந்தன் நாளை யித்தகையன் அன்றோ"

என்று வாய்விட்டலறி, சீதையின் நிறையை உணரவல்லவள் அவளுக்கு ஒப்பான நிறையுடைய மங்கையேயாவள். இத்தகைய தூய உணர்வுடைய மங்கை தனது தலைவன் போர்க்களத்தே மாண்டு மடிந்து கிடக்கின்றான் என்று கேட்ட அக்கணமே போர்க்களத்துக்கு விரைந்து வந்து, இராவணன் மீது வீழ்ந்து அழுகின்றாள். "வெள்ளெருக்கம சடை முடியான் வெற்பெடுத்த திருமேனி" உயிரற்றுக் கிடப்பதை உணர்ந்த மங்கை அவ்வுடலத்தை

கேடிழை யாமையே பீடுறு மறமாம்.

தன் தடக்கைகளால் தழுவி யெடுத்து மார்புடனணைத்தாள். தானும் உடனே உயிர் நீங்கி, தன் தலைவன் சென்ற விடத்திற்கே சென்று உயிர் நீங்கினும் உணர்வு நீங்கா உத்தமியாய் வானவர் தொழ வாழ்ந்தாள். இதைத்தான் கவியரசர் கம்பர் பெருமான்

"என்றழைத்தனள் ஓங்கியெழுந்தவன்
பொன்றழைத்த பொருவரு மார்பினைத்
தன்தழைக் கைகளால் தழுவித் தனி
நின்றழைத் துயிர்த்தாள் உயிர் நீங்கினாள்"

என்று போற்றி யுரைக்கின்றார். "காதலர் இறப்பின் கனை எரி பொத்தி ஊதுலைக் குருகின் உயிர்த்தகத்து அடங்காது இன்னுயிர் ஈவர்" தலை யன்புடைய தமிழ் பெருமக்கள் என்பர் மணிமேகலையார். "மன்னவன் செல்வழிச் செல்கயானென தன்னுயிர்கொண்டு அவனுயிர்தேடிய" கோப்பெருந் தலைவியின் தலையாய அன்பையும், "காவன் மன்னவன் இறந்தனன் எனும் உரை கன்னத்துள் மேவும் எல்லையில் அசனி ஏறுண்ட அம்பணியேபோல் ஆவி நீங்கிய தேவியாகிய" பதுமகோமளையின் தலையன்பையும், ஒத்த நிலையில் மண்டோதரியின் மாண்புடைக் கற்பு இலங்கக் காண்கின்றோம்.

ஆகவே, இதுவரை கூறிய சில சிறு சொற்களால், கம்பரது கவி நலத்தில் மாதர் மன நிலை எவ்வாறு அமைந்து கிடக்கின்றதென்பது தெள்ளிதிற் புலனாம். நிறையுடைய மாதர் பெருமையே பெருமை. அவர்தம் மனநிலையை உணர்ந்து கூறும் கம்பர் கவி நலமே நலம். என்று கூறி என் பணி முடிக்கின்றேன்; திருவருள் முன்னிற்க. சுபம்.

## ஓர் வேண்டுகோள்.

செந்தமிழ்ச் செல்வர்காள் !

ஸ்ரீமத் தேவராய சுவாமிகள் அருளிச்செய்துள்ள கந்தர் சஷ்டி கவசம் என்னும் நூலில், "இருபத்தேழ்வர்க்கு வந்தமுதளித்த குருபரன்" என்றிருக்கின்றது. இதனுளடங்கிய வரலாற்றைப் புராண இதிகாச ஆராய்ச்சியுடையார் யாவரேனும் நமது "ஆனந்தபோதினி" வாயிலாய்த் தெரிவித்தால் அவர்பால் மிக நன்றியுடையவனா யிருப்பேன்.

இங்ஙனம்,
எஸ். சேஷையர்.

ஊனும் மதுவும் ஒழித்தருள் பெருக்குக.

# செக் (Cheque) கும் அதன் நன்மைகளும்.

(சேலம். அ. மாரம ரெட்டி.)

செக்கு (Cheque) முதன் முதலாக இங்கிலாந்து தேசத்தில் லண்டன் மாநகரத்தில், பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்டது. அது நாளுக்கு நாள் விருத்தியாகிக்கொண்டுவந்து தற்காலத்தில் அநேகமாய் எல்லாத் தேசங்களிலும் ஒருவித காகிதப் பணமாக வழங்கி வருகிறது. முக்கியமாய், இங்கிலாந்து அமெரிக்கா முதலிய இடங்களில் செக்கு சர்வ சாதாரணமாய் உபயோகப் படுத்தப்படுகிறது. நம் தேசத்தில் வியாபார ஸ்தலங்களில், நாம் செக்கை அதிகமாய்க் காண்கிறோம்.

செக்கு ஒருவித காகிதப் பணமென்று மேலே சொன்னோம். ஆனால் இது "நோட்டு" என்று சொல்லப்பட்ட காகிதப் பணத்தைவிட அநேக விதங்களில் சிறந்ததாக இருக்கிறது. ஏனெனில் நோட்டை ஒருவன் மிகவும் பத்திரமாகப் பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. நோட் டொன்றை ஒருவன் எங்கேயாவது நழுவ விட்டு விட்டால் அவனுடைய பணம் அநேகமாய்ப் போன மாதிரிதான். தவிர, நோட்டு நெருப்பினாலோ, மழையினாலோ வேறு எந்தக் காரணத்தினாலோ அழிந்து போய்விட்டால் பணம் போனதே. ஆனால் செக்கு அந்தவிதம் அழிந்து போய்விட்டால், செக்கைக் கொடுத்தவனிடம் வேறொரு புதியச் செக்கை வாங்கிக் கொள்ளலாம். முக்கியமாய்ச் செக்கை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் பணம் அனுப்ப வேண்டியிருக்கும்போது உபயோகிக்கலாம். செக்கை அனுப்பினால் இன்ஷியூர் (Insure) செய்யவேண்டிய அவசியமில்லை. செக்கில் இரண்டு வகைகள் உண்டு. அவை (Bearer Cheque) "பேரர் செக்கு", (Order Cheque) "உத்திரவுச் செக்கு" என்பன. பேரர் செக்கு ஏறக்குறைய நம் "நோட்டு" போன்றது. ஏனெனில் அந்தச் செக்கைக்கொண்டு எவனொருவனும் பாங்கியில் பணத்தைப் பெறலாம். ஆனால் உத்திரவுச் செக்கை அது எத்தனைப் பேர் கைக்கு மாறுகிறதோ, அத்தனை பேரும் அதன்பேரில் கையெழுத்துப் போட்டாலன்றி அதை பாங்கியில் மாற்றமுடியாது. தவிர செக்கின் குறுக்காக இரு சம கோடுகளை இழுத்துவிட்டால், செக்கு இன்னும் பத்திரமானதாகப் போய்விடுகிறது. ஏனெனில் அந்தச் செக்கை ஒரு பாங்கியின் வழியாக அனுப்பினாலன்றி அதற்குப் பணங் கிடைக்காது. இன்னும், "a/c Payee", Credit "Payee's a/c" முதலிய சில வார்த்தைகளை செக்கின் குறுக்காய் எழுதிவிட்டால், அந்தச் செக்கை அது எவன் பேருக்கு எழுதப்பட்டிருக்கிறதோ அவனைத் தவிர வேறொருவராலும் மாற்றமுடியாது.

மரக்கறி உணவே மனிதர் உணவாம்.

ஒரு செக்கு எப்படியாவது காணமற் போய்விட்டால் அதை அநேக வழிகளில் கண்டுபிடித்துவிடலாம். அவையாவன :—

(1) செக்கு காணமற்போன விஷயந் தெரிந்தவுடனே அதன் மீந்த பாதி (Counter Part) யில் இருக்கும் நம்பரை பாங்கிக்குத் தெரியப்படுத்தினால், அது அந்தச் செக்குக்குப் பணத்தைக் கொடுக்காது.

(2) மேலே சொன்னமாதிரி அது உத்திரவுச் செக்காகவோ அல்லது கோடுள்ள செக்காகவோ யிருந்தால், பணம் ஏற்கனவே கொடுக்கப்பட்டிருந்தாலும், பாங்கிகளின் மூலமாய் பணத்தை யார் பெற்றுக்கொண்டது என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

(3) சில சமயங்களில் பேரர் செக்கிலுங்கூட அதைக் கொண்டுவருபவன் பேரில் பாங்கிக்குச் சந்தேகமுண்டானால், அது செக்கை எழுதினவனுக்குத் தெரியப்படுத்தாமல் அதற்குப் பணங் கொடுக்காது.

செக்கு விருத்தியை அதிகப்படுத்துவதற்காக கவர்ன்மெண்டார் சில வருஷங்களுக்கு முன்பு செக்கின்பேரிலிருந்த ஒரு அணா வரியை எடுத்துவிட்டது மிகவுஞ் சிறந்ததே.

முடிவாக நம் தேசத்திலும் பாங்கிகள் விருத்தியாகி வரவர செக்கின் உபயோகமும் அதிகப்பட்டு வரும் என்று நம்புகிறோம்.


"ஆனந்தபோதினி" மாத சஞ்சிகை

## தெலுங்குப் பதிப்பு.

—(0)—

நமது "ஆனந்தபோதினி" தமிழ்மொழியில் மாதப் பதிப்பும், வாரப்பதிப்பும் வெளிவந்து தொண்டாற்றி வரும் விஷயம் எல்லாரும் அறிந்ததே. இப்பொழுது "ஆனந்தபோதினி"யைத் தெலுங்கு மொழியிலும் ஜூன் முதற்கொண்டு ஒவ்வொரு இங்கிலீஷ் மாத முதல் தேதியில் வெளிவர ஏற்பாடு செய்திருக்கின்றோம். தமிழ் நேயர்கள் தங்களுக்குத் தெரிந்த தெலுங்குப் பயிற்சியுள்ள நண்பர்களுக்கு இவ்விஷயத்தைத் தெரிவித்துச் சந்தாதாரர்களாகச் சேரும்படி தூண்டுமாறு வேண்டுகின்றோம். மாதிரி காபி இனும்

வருட சந்தா தபாற்கூலி உள்பட

உள் நாடுகளுக்கு ... ரூபா 1—0—0

வெளி நாடுகளுக்கு ... ,, 1—4—0

மானேஜர்.


தற்புகழெல்லாம் தன்னிழிவாகும்.

# கனவின் பலன்

(வி. சங்கர ஐயர்.)

(222-ம் பக்கத் தொடர்ச்சி)

21 a. பசி தீர்ந்ததாக கனவு காணுவது சுபகரம்.

b. தான் அனேகரோடு இலைமுன் உட்கார்ந்து சாப்பிடப் போவதாகக் கனவு கண்டால் பந்துக்களில் கலியாணமாகும்.

c. சுவரின்மேல் உட்கார்ந்து சாப்பிடுவதாக கனவு கண்டால் உத்தியோக லாபம்.

22 a. சுத்தமான ஜலம் அருந்தியதாகக் கனவு கண்டால் அபிவிருத்தி.

b. யாருக்காகிலும் தாகத்திற்குத் தண்ணீர் கொடுத்ததாகக் கண்டால் மேன்மை உண்டாகும்.

23 a. தேன், ரத்தம், கள்ளு, சாராயம் அருந்தியதாகக் கனவு கண்டால் ஐசுவரிய லாபம்.

b. தன்னை மறக்கும் மது அருந்திவிட்டு இருப்பதாகக் கனவு கண்டால் ஞானம் அபிவிருத்தியாகும். புதிய நண்பர்களால் ஐசுவரிய லாபம்.

24 a. சாப்பிடுவதற்குப் பக்குவமாயிருக்கும் அன்னத்தைக் கனவில் கண்டால் காரிய லாபம்.

b. ஒருவருக்கு அன்னமிட்டால் தனலாபம்.

c. ஒருவரை சமையல் செய்யும்படி சொல்லி அதைப் பார்த்துக் கொண்டிருந்தால் உத்தியோக லாபம்.

d. பச்சை மாமிசத்தையோ அல்லது பக்குவம் செய்ததையோ கனவிற் கண்டால் ஐசுவரிய லாபம்.

25 a. பலஹாரக் கடையைப் பார்த்தால் சுபம்.

b. பலஹாரம் சாப்பிட்டால் வம்ச விருத்தி.

c. பலஹாரம் தானம் செய்தால் கீர்த்தி.

26 a. வெண்ணெயைக் காண்பது நலம்.

b. வெண்ணெயை உண்பது உத்தியோக லாபம்.

27 a. பாயசம் சாப்பிடுவது லாபகரம்

b. ஏரி, குளம், ஆறு இவைகளின் மத்தியிலும், தாமரை இலையில் பாயசம் சாப்பிடுவதாகக் கனவு கண்டால் ராஜயோகம், உத்தியோக லாபம்.

வஞ்சகனுமை நஞ்சினும் கொடியன்.

28 a. பால், தயிர் இரண்டையுமோ அல்லது ஒன்றையாவது தான் எடுத்துக்கொண்டு போவதாகக் காணும் கனவு அனேக குடும்பங்கள் தன்னால் ஜீவிக்கும்படிச் செய்யும்.

b. தயிர் குடித்தால் கீர்த்தி.

c. பால் குடித்தால் புகழ் உண்டாகும்.

29 a. பால் நிறைந்த மடியையுடைய பசுவைக்கண்டால் விசேஷ லாபம்.

b. பால்குடம், தயிர்க் குடம் இவைகளைக் கண்டால் தனலாபம்.

30. சர்க்கரைப் பாகு, பழரசம், கருப்பஞ்சாறு இவைகளைச் சாப்பிட்டால் லாபம்.

31. பாக்கு மூட்டையைப் பார்த்தால் தனலாபம்.

32. மஞ்சளைப் பார்ப்பது லக்ஷ்மீகரம்.

33. சந்தை, கடைகள் இவைகளைப் பார்ப்பது சுபம்.

34 a. மருந்துகளைக் கனவு கண்டால் நோயாளியின் வியாதி சொஸ்தப்படும்.

b. மருந்துகளை அருந்துவதாகச் சுவப்பனம் கண்டால் மனதிற்கு நிம்மதி யுண்டாகும்.

c. ருசியுள்ள மருந்துகளைச் சாப்பிட்டால் தம்பதிகள் ஒற்றுமை, விசுவாசம்.

35. தன்னுடம்பில் தானியங்கள் ஒட்டியிருப்பதாகக் கண்டால் தனலாபம்.

36. கோதுமை, கடலை, அரிசி, நெல் இவைகளைக் காண்பது தனலாபம்.

37. வெற்றிலை, பாக்கு இவைகளைக் காண்பதும், அவைகளைப் பிறருக்குக் கொடுப்பதும் நலமே.

38 a. புளியை வியாபாரி கண்டால் சுபம்.

b. புளியை மற்றவர்கள் கண்டால் பந்து தரிசனம்.

39 a. பழங்களைத் தான் மரத்திலிருந்து பறிப்பதாகக் கனவு கண்டால், எதிர்பாராத தனலாபம்.

b. பழங்களைப் பொறுக்குவதும் தனலாபமே.

40 a. எலுமிச்சம் பழம் ஒருவர் கொடுத்தால் தனலாபம்.

b. எலுமிச்சம் பழத்தைக் கண்டால் சுகம்.

41. பேரீச்சம்பழம், திராட்சைப் பழம், இவைகளைக் காணுதல் மனோக்கிலேச நிவிர்த்தி. மனோவிசாரம் தீரும்.

42. கருணை, சேம்பு, உருளை முதலிய கிழங்குகளைக் கனவிற் கண்டால் சுபகாம், லாபம்.

43. மற்றவர்கள் கீரையைச் சாப்பிடுவதாகக் காண்பது சுபம்.

பிறர் துயரம் தமதெனப் பேணுவர் பெரியோர்



44. கத்தரிக்காய், அவரைக்காய், வெண்டைக்காய், புடலங்காய் இவைகளைக் காண்பது ரோகநிவர்த்தி, ஆரோக்கியம்.

45 a. பக்ஷிகள் பறந்து போகும்போது பார்த்தால் கஷ்டங்கள் நீங்கும்.

b. கூண்டிலிருந்த பக்ஷிகளைத் திறந்துவிட்டால் காரியானுகூலம், லாபகரம்.

c. விளை பொருள்களைச் சாப்பிடுகிற பக்ஷிகளைப் பிடிப்பதாகக் கனவு கண்டால் ஐசுவரிய லாபம்.

46 a. பக்ஷிக் கூண்டு கிடைத்ததாகவும், அதில் குஞ்சுகள், முட்டைகள் இருக்கிறதாகவும் பார்த்தால் சுபம்.

b. முட்டையுள்ள கூண்டு அகப்பட்டால் தனலாபம்.

c. அனேகம் முட்டைகளைக் கண்டால் தொட்டதெல்லாம் அனுகூலமாகும்.

47. குருவி, நாரை இவைகளைக் காண்பது சுபம்.

48. பறக்கும்போது பார்த்தால் நன்மை.

49. சிட்டுக் குருவியைப் பார்த்தால் தம்பதிகள் அன்னியோன்யமாக இருப்பார்கள்.

50. வாத்து, அன்னப்பக்ஷிகளைப் பார்ப்பதும், அவைகள் தண்ணீரில் நீந்தும் பொழுது பார்ப்பதும், அதிக தனலாபம்,

51. மயிலைப் பார்ப்பது மிகவும் நல்லது, சந்தான விருத்தி, விவாஹப் பிராப்தி, மனைவியின் மூலம் தனப் பிராப்தி. விதவை ஸ்திரீகள் பார்த்தால் யாத்திரை செய்யவும், புண்ணிய தீர்த்த ஸ்னானமும் ஏற்படும்.

52. கிளியைப் பார்த்தால் தூரதேசப் பிரயாணம், அங்கு தனலாபமும் பலன்.

53. பரத்வாஜபக்ஷி (கருங்குருவி) யைக் கண்டால் ஸ்திரீ புருஷர்கள் அனுகூலம் ஏற்படும்.

54. வானம்பாடியை அல்லது மைனாவைப் பார்ப்பதும் அவைகள் பாடுவதைக் கேட்பதும் விசேஷமான தனலாபம்.

55 a. எறும்புகள் வரிசை வரிசையாகப் போவதாகக் கனவு கண்டால் தூர தேசப் பிரயாணம். அங்கு சுக ஜீவனமும் சந்தான விருத்தியும், யசஸ்ஸும் பலன். வியாபாரிகளுக்கு வியாபார அபிவிருத்தி.

b. எறும்புகள் ஆகாரத்தைக் கடித்துக்கொண்டு போவதாகக் கண்டால் லாபமுண்டாகும்.

56. வியாதியஸ்தர்கள் கொசு, ஈ, பாச்சா, வண்ணத்திப் பூச்சி முதலான இறக்கையுள்ள பூச்சிகளைக் கண்டால் உள்ள வியாதி பறந்துபோம்.

57. தேன் ஈக்கள் தேன்கூண்டு கட்டுவதாகப் பார்த்தால் அதிக லாபம்.

கல்விக்கழகு கசடற மொழிதல்.

58. சர்ப்பங்கள், அட்டைகள், தேள்கள் முதலியவையைப் பார்ப்பது ஜயம்.

59 a. மீன், தவளை, ஆமை முதலிய ஜல ஜந்துக்களைப் பார்ப்பது சுபம்.

b. ஆமையைக் கண்டால் தூரதேசப் பிரயாணத்தால் தனலாபம்; தம்பதிகள் அனுகூலம்,

60. முயலைக் கண்டால் பந்துக்கள் வருவார்கள். தனலாபம்.

61. ஜலஜந்துக்களைச் சாக அடிப்பதாகக்கண்டால் சத்துருக்கள்நாசம்.

62. பூனையைக் கட்டி வைத்திருப்பதாகவோ, தான் அடித்துக் கொன்றதாகவோ கண்டால் திருடர்கள் பிடிக்கப்பட்டு சிறைச்சாலையில் அடைபடுவார்கள்.

63 a. நாய் வாலை ஆட்டிக்கொண்டு தன்னிடம் வருவதாகக் கண்டால் புதிய சிநேகித மேற்படும்.

b. தன்னோடு உலாவிக்கொண் டிருப்பதாகக் கண்டால் எல்லா ஆபத்துகளும் நீங்கும். தன்னை ஆபத்திலிருந்து காப்பாற்றக் கூடிய ஆப்த நேசர் கிடைப்பர்.

64 a. ஆட்டுமந்தை, பசுமந்தை இவைகள் புல்மேய்வதாகக் காண்பது நலம்.

b. அம்மந்தையைத் தான் ஓட்டிக்கொண்டு போவதான கனவானால் தான் செய்யும் கிருஷியில் மிகுந்த லாபம்.

65 a. வெள்ளைப் பசு, குதிரை இவைகளைக் கனவு கண்டால் யாத்திரை, பந்து தெரிசனம் பலன்.

b. குதிரைச் சவாரி செய்வதாகக் கண்டால் மனைவி மூலம் தன லாபம். சிநேகிதர்கள் மூலம் தூரதேச யாத்திரையும், அங்கு தனலாபமும் பலன்.

66 a. கழுதையைக் கனவிற் கண்டால் கொஞ்சம் கொஞ்சமாக கஷ்டங்கள் நீங்கும். அன்ன வஸ்திராதிகளுக்கு விசாரப்பட வேண்டியதேயில்லை.

b. கழுதையைத் தான் ஓட்டிக்கொண்டு போவதாகக் கனவு கண்டால் கஷ்ட நிவர்த்தி.

c. சுமக்கத்தக்க மூட்டையைச் சுமந்து போகும் கழுதையைப் பார்த்தால் தான் செய்யும் சொந்த வேலையில் புகழும் லாபமும் பலன்.

67. ஒட்டகத்தைக் கண்டால் சகல கஷ்டமும் விசாரமும் நீங்கும், ஆரோக்கியமும், சுகமும் பலன்.

68 a. யானையைக் காண்பது விசேஷ அதிர்ஷ்டம்.

b. யானைச் சவாரி செய்தால் சந்தானப் பிராப்தியும் அவர்கள் மூலம் புகழும் பலன்.

---

குற்றமில்லாதவனே கற்றவனாவான்.

# தொண்டர்தம் பெருமை.

(எஸ். சேஷையர்.)

கடவுளாற் படைக்கப்பட்ட பல்வகைப் பிறவிகளிற் சிறந்ததான இம் மானிட ஜன்மத்தை எடுத்ததின் பயன் பேரின்ப வீடடைவதேயாம். அதனை யடையப் பல வழிகளிருப்பினு மவற்றுள் பக்திநெறியே சிறந்ததாகும். ஏனெனில் பக்தியே பகவானைப் பிடிக்கும் வலையாகும். "பக்தி வலையிற் படுவோன் காண்க" என்றார் பிறரும். இத்தகைய பக்தி மார்க்கத் தமைந்தோர் பெருமை பகர்வதற்கரியதேயாயினும் ஆன்றோர் அதனை ஒருவாறு அளவிட்டுக் கூறி யிருக்கின்றனர். அது வருமாறு:—

"பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான் முகன்படைப்பு
நான்முகன் கரியமா லுந்தியில் வந்தோன்
கரியமாலோ அலைகடற்றுயின்றோன்
அலை கடலோ குறுமுனி கையி லடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக்கொருதலைப் பாரம்
அரவோ வுமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே."

இதனால் தொண்டர்தம் பெருமையே யாவற்றினும் பெரிதென அங்கை நெல்லிக்கனியென விளங்கும்.

மேலும் இக்கருத்துப்பற்றியே, அன்பர்தம் சரிதங்களைத் திறம்படச் செஞ்சொற்களால் விரித்துக் கூறும் திருமுறைக்குப் பெரிய புராணம் எனப் பெயரிட்டிருக்கின்றனர் பெரியோர்.

அடியார்களைச் சாதிகுலம் முதலிய வேறுபாடு நோக்காமல் அவனாகவே பாவித்து வழிபட்டுவரின் முத்தியெய்தலாம்.

"தானே முத்தி தருகுவன் சிவனவன்
அடியன் வாத வூரனைக்
கடிவின் மனத்தாற் கட்டவல் லார்க்கே" (நால்வர் நான்மணிமாலை)

"சிவனே சிவஞானி யாதலாற் சுத்த
சிவனே யெனவடி சேரவல் லார்க்கு
நவமான தத்துவ நன்முத்தி நண்ணும்
பவமான தின்றிப் பரலோக மாமே" (திருமந்திரம்.)

என்ற திருவாக்குகள் மேற்கூறிய உண்மையை வலியுறுத்தும். சிவனடியார்

களிற் சிறந்த அறுபான்மும்மை நாயன்மார்களிற் பத்தொன்பதின்மர் அடியார்க ளின்னருள் பெற்றே அரன் றிருவடி நீழலை யடைந்தனர்.

நமது மெய்ஞ்ஞானச் செல்வராகிய தாயுமான சுவாமிகள்,

"அண்டமுடி தன்னிலோ பகிரண்ட மதனிலோ
அலரிமண் டலநடு விலோ
அனனடுவி லோவமிர்த மதிநடுவி லோவன்பர்
அகமுருகி மலர்க டுவித்
தெண்டமிட வருமூர்த்தி நிலையிலோ திக்குத்
திகந்தத்தி லோவெளி யிலோ
திகழ்விந்து நாதநிலை தன்னிலோ வேதாந்த
சித்தாந்த நிலைதன் னிலோ
கண்டபல பொருளிலோ காணாத நிலையெனக்
கண்டகு ணியம தனிலோ
காலமொரு மூன்றிலோ பிறவிநிலை தன்னிலோ
கருவிகா ணங்க ளோய்ந்த
தொண்டர்க ளிடத்திலோ நீவிற்றிருப்பது
தொழும்பனேற் குளவு புகலாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவா ரியே."

என்ற திருப்பாட்டில், இறைவன், பக்தானுக்கிரக காரணமாக உருவமாகவும், அருவமாகவும், உருவாவருவமாகவும் அவசர பேதங்களாக எழுந்தருளும் இடங்களை யெல்லாங் கூறி முடிவில் "தொண்டர்க ளிடத்திலோ" எனக் கூறி முடித்தமையின் அதுவே முதல்வனுக்கு முக்கியமாய் உகப்பிற்கேற்ற இடமாமென்பதைக் குறிப்பாற் காட்டி வைத்தனர்.

அலர் கதிர் ஞாயிறு அகிலமெங்கும் பிரகாசிப்பினும் காந்தத்தினிடமிருந்து மிளிர்வதுபோன்று, கடவுள் எல்லோ ரிதயத்தினு மிலகி வாழ்வதுண்மையே யாயினும் அன்பரகத்தே அன்புமயமாகவே விளங்குகின்றார்.

ஆதலால் நாமும் அன்பர்களுக்கு மனோவாக்குக் காயங்களால் மெய்த்தொண்டாற்றிவரின் இன்ப வீடடைவோ மென்பதிலையமின்று.

"அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே."

என்பது ஆன்றோர் அமுதவாக்கன்றோ?

மற்றும், பக்த சிரோமணிகள் ஏதேனும் பிழையியற்றின் பரமன் உடனே யவர்களைத் தண்டித்து மேன்மேலும் அதைச் செய்து பிறவித் துன்பத்திற் காளாகாமற் றடுத்து நல்வழிப்படுத்துகின்றார். சுந்தரமூர்த்தி நாயனார், சங்கிலிநாச்சியாரிடம் திருவாரூருக்குச் செல்வதில்லை யென்று கடவுள் முன்னிலையில் சபதம் செய்துவிட்டு, பிறகு அதினின்றும் தவறி நடந்தபொழுது இறைவன் அவர் கண்பார்வையை நீக்கிவிட்டமையே யிதற்குப் போதிய சான்றாகும்.

இன்னும் இவ்வன்பர்கள் தலைவனுக்கு யாதாயினுமொரு தீங்கிழைத்த பின்னர், அவர் சந்நிதானத்தில் நின்று கண்ணீருங் கம்பலையுமாய் கனிந்து

பிரமச்சரியம் பேரின்பளிக்கும்.



கனிந்தழுது தொழுவார்களானால் மன்னிப்பும் மட்டிலா இன்ப நலங்களுமடைவர். ஆ, என்னே! ஈசன் கருணை யிருந்தவாறு!. அருளே அரன்றன் வடிவமன்றோ? இதற்குச், சிவனடியே சிந்திக்குஞ் செம்மை நெறிபூண்ட இராவணன், கண்ணுதற் கடவுள் வீற்றிருக்குந் திருக்கைலாய மலையை, தன் விமானத்தைத் தடுத்ததென்று, வெகுண்டு, பெயர்த்து அசைத்தமையும், பின்னர் ஈசன் காற் பெருவிரலை யழுத்தவும், மலையினடியிற் கரங்களுஞ் சிரங்களு மகப்பட்டுப் பெரிதும் வருந்தியபொழுது, இனிய கானம்பாடி ஈசனை மகிழ்வித்து, வாளும் நீண்ட ஆயுளும் பெற்றமையே தக்க உதாரணமாகும்.

இனி, பக்திக்கு வயப்படும் பரம்பொருள், தமக்கு எவரேனும் தீவினை புரிந்தாற் பொறுப்பர். ஆனால் அடியார்களுக்குத் துன்பஞ்செய்தால் கொஞ்சமேனும் பொறார் என்றால், அவ்வடியார்கள் பெருமையைப் பகரவுங் கூடுமோ?

தாய்மார்கள், தாங்கள் அருமையாகப் பெற்றெடுத்த மக்களைக் காப்பாற்றக் கடமைப்பட்டிருப்பதுபோல, கருணாகரக் கடவுளும் குற்றமற்ற அடியார்களைக் காக்கக் கடமைபூண்டுள்ளார். என்னை? அன்பர்க் கெளியனன்றோ ஆதிமத்தியாந்த ரகிதன்! மற்று மூண்மையடியார்கள்பால் நமனும் அணுகுவதில்லை. மார்க்கண்டர்க்காக மறலி பட்ட பாட்டை யுன்னிப்பார்க்கி லன்பர்க்கு மரண பய மேது? இல்லை! இல்லை!

திருத்தொண்டத் தொகைபாடிய பெரியார், அதில் அடியார்களுக்கெல்லாம், "அடியேன், அடியேன்" என்று கூறிப் போந்தனரென்றால் அன்பர்தம் அருமையை அறையவுங் கூடுமோ?

சுந்தரமூர்த்தி நாயனாருடைய செந்தமிழ்ப் பாடலின் அருமையிட்டு, ஆரூரில் அரிவையோர் பரவைதன் புலவிதீர்க்க, அரவணிந்த பெருமான் இரவதனிற் றூது சென்றனரென்றால் அத்திருநாவலூராரின் பெருமையை யாவரே பகரவல்லார்?

இனி, வெள்விடையோன்,

"......................வாதவூரன்பர்
பாடும்பணி கூடும்பொருட்டு
மதுரைமாநகரிற் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண்பொறைசுமந்தும்
நீற்றெழின் மேனியின் மாற்றடி பட்"

டனரென்றால் அம்மாணிக்கவாசக் சுவாமிகள் அருமை பெருமைகளை யாவரே அறியவல்லார்?

ஆகையா லன்பர்களே! உண்மை அடியார்களை அறவாழி அந்தணனாகவே பாவித்துப் பரவிப் பெரிதும் பணிந்து, மெய்த்தொண்டாற்றி அன்னோர் அருள்பெற்று, இப்பிறவிப் பெருங்கடனீந்தி முத்தியாங் கரைசேர, கங்கையுந் திங்களுந் துங்கமாமௌலியிற் சூடும் மங்கை பங்காளன் திருவருள் புரிவானாக. சுபம்.

இருபத்தைந்துமுன் இல்லறமெண்ணேல்.

# மேனாட்டுத் தத்துவம்

(கி. பாலசுப்பிரமணியன், M. A.)

(287-ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் எவ்வாறு பொருள்களை அறிகிறோம்? எம்பிடோக்ளீஸ் என்பவர் "நாம் எல்லா வஸ்துக்களையும் சுலபமாய் அறியலாம். ஏனெனில் நம் தேக அமைப்பில் எல்லா வஸ்துக்களின் சாராம்சங்களும் பொருந்தியிருக்கின்றன. பிருத்வி, ஜலம், ஆகாயம், அக்னி-பிருத்வி நம் தேகமாகவும், ஜலம் உள்ளேயிருக்கும் ஜல வஸ்துக்களாகவும், ஆகாயம் மூச்சுக் காற்றாகவும், அக்னி ஆத்மாவாகவும் இருக்கின்றன. அந்தந்த வஸ்துவை அந்தந்த வஸ்துவின் மூலமாகவே பார்க்கிறோம். பிருத்வியால் பிருத்வியையும், நீரால் நீரையும், ஆகாயத்தால் ஆகாயத்தையும், அக்னியால் அக்னியையும் பார்க்க முடிகிறது. அப்படியே அன்பைக் கொண்டு அன்பையும், வெறுப்பால் வெறுப்பையும் அறிகிறோம்" என்றார்.

எம்பிடோக்ளீஸுக்குப்பின் அனக்ஸகராஸ் (*Anaxagoras*) என்பவர் "எம்பிடோக்ளீஸ் உலகத்திலிருக்கும் வேறுபாடுகளுக்குக் காரணம் நான்கு முக்கிய பூதங்கள் என்று சொல்லியிருக்கிறாரே யொழிய எவ்வாறு அப்படியிருக்கக்கூடும் என்று சவிஸ்தாரமாகச் சொல்லவில்லை" என்றார். ஆனால் அனக்ஸகராஸ் அப்படிச் சொல்ல இயல்வது முடியாத காரியம் என்று தீர்மானித்தார். எப்படி ஒரு வஸ்து இன்னொன்றாக மாறுகிறது? அதாவது குணம் எப்படி மாறக்கூடும் என்று நம்மால் நிர்ணயிக்க முடியாது. இடத்தைவிட்டு மாறுவதுதான் நமக்குத் தெரியும். ஆனால் குணங்கள் நால்வகையானவையல்ல. எண்ணிறந்தவையாகவே கொள்ளவேண்டும். அணுக்கள் குணத்தால் வித்தியாசப்படாமலே ஒவ்வோர் அணுவிலும் மற்ற அணுக்களின் குணங்கள் அமைந்திருக்கின்றன. அணுக்களில் வேறுபாடுகள் அதிகமில்லை. குணங்கள் கலந்திருக்கும் பரிமாண அளவில்தான் வித்தியாசமுண்டு. சில குணங்கள் மிகவும் நுட்பமானவை யாதலால் நம் கண்களுக்குப் புலப்படுவதில்லை.

இவ்வணுக்கள் தாமாகவே அசைய வல்லவையல்ல. எம்பிடோக்ளீஸ் அன்பினாலும் வெறுப்பினாலும் அவை சேர்ந்து பிரிகின்றன வென்று சொன்னார். ஆனால் அனக்ஸகராஸ், உலகத்தில் ஏற்படும் வித்தியாசமும் சலனமும் ஒரு சட்டப்படியும் நிலைகுலையாத ஒழுங்குடனும் நடக்கின்றன. ஆகையால் அவை சூக்ஷ்மமும் ஸ்வயமாகவே அசையக் கூடியதுமான மனத்தால் நடத்தப்படவேண்டும். ஒரு பக்கத்தில் ஜடமான அணுக்கள் இருக்கின்றன. இன்னொரு பக்கத்தில் மனம் அவ்வணுக்களை ஆட்டிவைக்க இருக்கிறது. அனக்





ஸகராஸ் மனமென்பதையும் ஒரு வஸ்துவாகவே கருதினார். எனினும் அக்காலத்தில் ஸ்வயமாகத் திரியக்கூடிய மனமென்று ஒன்று இருக்கிறதென்று நினைத்ததே ஒரு சம்பவமாகக் கொள்ளவேண்டும்.

லூக்கிப்பஸ் (*Leucippus*) என்பவர் "அணுக்கள் அனக்ஸகராஸ் நினைத்தவாறு வித்தியாசமுள்ளவையல்ல, பிரபஞ்சம் பார்மினிடீஸ் நினைத்தவாறு குணமற்றது" என்றார். ஆனால் பார்மினிடீஸ் நினைத்தபடி ஒன்றாக இராமல் எண்ணிறந்த அணுக்களால் ஆயது. மேலும், சலனமுண்டு. அணுக்கள் இடம் மாறுவதால்தான் சலனமுண்டாகிறது. வெற்றிடங்களில் அணுக்கள் பாய்கின்றன. அணுக்கள் உருவத்தினால் வித்தியாசமுள்ளனவே தவிர, ஒன்றைப் போலொன்று நித்தியமானவை. அவைகளும் அவைகள் இடத்தைவிட்டு மாறுதலும்தான் நிச்சயம்; மற்றவை யெல்லாம் வெறுந்தோற்றம். அணுக்கள் மனதினால் அசைக்கப்படுவதில்லை. மனமென்பதே ஓர் அணுதான். ஒவ்வோர் அணுவும் தானாகவே அசையுந்தன்மை யுள்ளது.

இவருடைய சிஷ்யரான டிமாக்ரைடஸ் (*Democritus*) பிரபஞ்சம் லூக்கிப்பஸ நினைத்தபடிதான் இருக்கிறது என்றார். அப்படியாயின் ஞானம் எவ்வாறு உண்டாகிறது? விஷய ஞானத்திற்கும் உண்மை ஞானத்திற்கும் வித்தியாசமுண்டு. உண்மை ஞானம் அணுக்களின் அமைப்பைத் தெளிவிக்கிறது. ஞானம் உண்டாவது ஸ்பரிசத்தால் தான். ஒரு வஸ்து மற்றொன்றோடு சேர்ந்தால்தான் ஞானம் உண்டாகிறது. வஸ்துவை நாம் தொட்டால் அது இன்னதென்று நம்மால் அறிய முடியும். வெளியிலிருக்கும் வஸ்துக்களின் நுண்ணிய சாயல்கள் நம் இந்திரியங்களின் மூலமாய் ஆத்மாவை அசைக்கின்றன. இதனால் ஞானமுண்டாகிறது. மெய் ஞானத்திற்கும் பொய் ஞானத்திற்கும் இவ்விஷயத்தில் அதிக வித்தியாசமில்லை. மெய் ஞானம் சாயல்கள் ஆத்மாவை மெதுவாகத் தொடுவதால் உண்டாகிறது. பொய் ஞானம் அல்லது விஷய ஞானம் ஆத்மா அதிகமாக அலைக்கப்படுவதால் உண்டாகிறது.

இக்காலத்தில் பிதாகொராஸ் (*Pythagoras*) என்னும் தத்துவ சாஸ்திரி யொருவர் புதியதொரு மதத்தை ஸ்தாபித்தார். அவருடைய சிஷ்யர்கள் கைக்கொள்ள வேண்டிய ஒழுக்கங்கள் சிலவற்றைச் சொல்கிறேன். மரக்கால் மீது உட்காராதே; ஹிருதயத்தைத் தின்னாதே; நெருப்பை இரும்பினால் கிளறாதே; கண்ணாடியில் விளக்கை வைத்துக் கொண்டு பாராதே; மிருகங்களைப் பலியிடாதே; கம்பளி யங்கி தரித்துக் கொள்ளாதே என்ற இவைபோல்வன.

இவர்கள் பிரபஞ்சம் ஒழுங்குடன் நடப்பதால் பிரபஞ்ச வஸ்துக்கள் எண்களைப்போல் கணக்காகவும் சதுரவட்டம் முதலிய உருவங்களைக் கொண்டதாகவும் இருக்கின்றன என்றார்கள்.

கிரீஸ் தேயத்தில் நாம் கூறும் சமயத்தில் புதியதோர் இயக்கமுண்டாயிற்று. அதுவரையில் ஜனங்கள் புஸ்தகங்களில் படித்ததையும் பெரியோரிடம் கேட்டதையும் வேதவாக்காகக் கொண்டிருந்தனர். உலகத்தில் நடக்கும் ஒவ்வோர் அற்பவிஷயமும் ஒரு தேவனுடைய செய்கையென்றும், நம்மாலாவது ஒன்றுமில்லை யென்றும் நினைத்தார்கள். நாம் கூறியபடி தத்துவ

சாஸ்திரிகள் பிரபஞ்சத்தை ஆராய்ந்து அது தன்னைக்கொண்டே வியாபித்திருக்கிறது என்று சொன்னபோது அனேகர் குற்றம் கண்டுபிடித்தனர். இருந்தாலும் நாளாவட்டத்தில் ஒன்றையும் ஆராயாமல் புராதனமாக இருப்பதாலோ பெரியோர் சொல்வதாலோ அங்கீகரிக்கக் கூடாதென்று அவர்களுக்குப் புலப்பட்டது. ஆகையால் தேய முழுவதும் குழப்பமுண்டா யிருந்தது. நியாயம் என்பதென்ன, சட்டமென்பதென்ன, ஒழுக்கமென்பதென்ன என்று இதுபோல் ஜனங்கள் தமக்குள்ளேயே ஆராயத் தொடங்கினார்கள்.

ஸோபிஸ்ட்ஸ் (*Sophists*) இச் சமயத்தில் ஸோபிஸ்ட்ஸ் என்னும் ஒரு வகுப்பினர் கிளம்பி ஜனங்களுக்குப் போதித்து வந்தனர். ஒரு வாலிபன் உத்தியோகம் பெற்று தேயத்தின் சட்ட சபையில் ஓர் அங்கத்தினனாவதற்கு, நன்றாகப் பேசக் கற்றுக்கொள்ள வேண்டும். இதற்குத் தக்க உபாத்தியாயர்கள் அவசியம். ஸோபிஸ்ட்ஸ் என்னும் வகுப்பினர் ஊர் ஊராகச் சென்று செல்வவந்தரின் புத்திரர்களைத் தம்முடன் சேர்த்துக் கொண்டு அவர்களுக்கும் மற்றோருக்கும் வாக்குச் சாதுரியத்தால் ஜனங்களின் ஆதரவைப்பெற வழி கற்பித்துவந்தனர். அநேகர் உபந்நியாசப் பயிற்சியோடு நின்றுவிட்டபோதிலும் சிலர் சகலகலைகளிலும் தேர்ச்சி பெற்று சிஷ்யர்களுக்குக் கற்பித்து வந்தனர்.

பொது ஜனங்களுக்கு இந்த ஸோபிஸ்ட்களிடம் அதிகப் பற்றில்லாமல் வெறுப்பு அதிகமாகிக் கொண்டு வந்தது. நாம் பாலியத்திலிருந்து படித்தும் கேட்டும் வந்த விஷயங்களெல்லாம் தப்பு என்று சொன்னால் கோபமுண்டாவது சகஜந்தான். ஸோபிஸ்ட்களும் அக்காலத்திய ஞானமெல்லாம் தவறு என்று சொல்வதில் காலம் போக்கினார்களே யொழிய, வெகுவாக எப்படி அதைச் சீர்திருத்திக் கொள்ளலாமென்று சொல்லவில்லை. ஒவ்வொரு மனிதன் தனக்குத்தானே யோசித்து உண்மையை அறியவேண்டும். ஆனால் நமக்குத் தெரிந்தது சரிதானா வென்று பார்ப்பதற்கு அளவுகோலாக வேறு சாதனமிருக்க வேண்டுமல்லவா? பிரொடாகராஸ் (*Protagoras*) என்னும் ஸோபிஸ்ட் "மனிதனே எல்லாவற்றிற்கும் அளவுகோல்" என்று வற்புறுத்தினார். மனிதனின் அபிப்பிராயம் சரியென்பது என்ன நிச்சயம்? மேலும் ஸோபிஸ்ட்களின் கருத்து ஜனங்களுக்குப் பேசவும் வாதத்தில் ஜயிக்கவும் கற்றுக் கொடுப்பதாக விருந்ததால் எப்படியாவது எதிரியின் கக்ஷியைத் தவறென்றும் தான் சொல்வதே சரியென்றும் நிரூபிக்க யத்தனித்தார்கள். ஆகையால் ஞானம் என்பது என்ன, நியாயம் எது என்று நிர்ணயிக்க ஹேது இல்லாமல் அவரவர்களுக்குத் தோன்றியவாறு நினைக்கத் தொடங்கினார்கள். ஸோபிஸ்ட்கள் செய்த அனுகூலம் கண்ணை மூடிக்கொண்டு புராதனக் கோட்பாடுகளை அங்கீகரியாதே என்ற போதம். அவர்கள் செய்த பிரதிகூலம் "ஒவ்வொரு மனிதனைத் தனித்தனி அணுவாகச் செய்து அவனுக்குச் சரியென்று தோன்றியதே அவன் வரையில் நியாயமென்ற வாதம்.

தத்துவத்தை இவ் விடுக்கண்ணிலிருந்து தப்புவித்தவர் ஸாக்ரெடீஸ் என்னும் மகாஞானி. அவர் சரித்திரம் விநோதமானதால் அதைச் சற்றுக் கவனிப்போம். அவர் ஒரு சிற்பசாஸ்திரியின் குமாரர். ஆயினும் இளமையி

இல்லற வாழ்வே நல்லியற் றுணையாம்.



லேயே அவ் விருத்தியை விட்டுத் தத்துவ ஆராய்ச்சியில் புகுந்தார். உருவத்தில் விகாரமானவர் சர்வ சாதாரணமான ஒரே அங்கியைத் தரித்தும் பாதரக்ஷை யில்லாமலும் மனிதர் கூடுமிடத்திலேயே சஞ்சரித்து அவர்களுடன் சதா பேசிக்கொண்டு இருப்பவர். தன் நாட்டு மக்களுக்கு ஹிதத்தைப் போதிப்பதில் சலிப்பற்றவர். ஒரு சமயம் தன்னைவிட ஞானி யொருவருமில்லை என்று யக்ஷிணி சொன்னதாகக் கேள்விப்பட்டு, அதை நம்பாமல் ஒவ்வொரு மனிதரையும் அவர்களுக்கும் தனக்கும் என்ன வித்தியாசம் என்று பார்க்கப் பரிசோதிக்க ஆரம்பித்தார். எல்லாமறிந்த வியாபகரென்று தம்மைக் கருதினோர் தமக்கு ஒன்றும் தெரியாதென்று ஒப்புக்கொள்ளும் வரை அவர்களுடன் பேசுவார். யக்ஷிணி சொன்னதற்கு "ஸாக்ரெடீஸுக்குத் தனக்கு ஒன்றும் தெரியாதென்ற ஞானம் இருப்பதால் அவரே சர்வஞானி" என்று அர்த்தம் என்று தீர்மானித்தார்.

எப்பொழுதும் நியாய வழியிலே நடப்பதும், மிதமான உணவு உண்பதும், தேசீய ஊழியத்தில் அதிக ஊக்கமாக உழைப்பதும், ஜனங்களுக்கு நல்வழியை போதிப்பதுமாகக் காலத்தைப்போக்கி வந்தார். போர்க்களங்களிலும் அவருடைய தைரியமும் வீரமும் மெச்சத்தக்கதாக இருந்தன. ஒரு போதும் நெறி பிறழாதவராயும் தாக்ஷிணியத்தினால் அநீதியாக ஒன்றையும் செய்யாதவராயுமிருந்ததால் அவருக்கு எதிரிகள் சிலர் கிளம்பி அவர் போதித்தவை வாலிபர்களைக் கெடுத்துவிடுகின்றன என்று குற்றஞ்சாட்டி அவர் விஷத்தைக் குடித்து இறக்கவேண்டுமென்று தீர்மானித்தார்கள். சிறிது வணங்கியிருந்தால் விடுவித்திருப்பார்கள். ஸாக்ரெட்டீஸ் அம்மாதிரி மனிதரல்லவாதலால் உத்திரவின்படி விஷத்தைக் குடித்து மரித்தார். (தொடரும்.)

மனித வருக்கத்தாருள் ஆண் பெண் சாதி இரண்டொழிய வேறில்லை. "சாதி இரண்டொழிய வேறில்லை" என்ற பெரியாரின் வாக்கியத்தைத் தழுவி சகோதரதத்துவத்தை வளரச் செய்ய எல்லோருடைய மனமும் ஒன்றுபடவேண்டும்.

***

பண்டைக்காலத்தவர் தம் தம் தொழிலிற்கேற்ப பிராமணன், க்ஷத்திரியன் என்பன போன்ற பிரிவேற்படுத்தினர். வகுப்புயர்வும் தாழ்வும் ஒழுக்கத்தாலேயே நிகழ்கின்றது.

***

நீர்க்கரை ஓரத்தில் ஓர் மரத்தில் குரங்கானது கனியை வாயிற் கவ்வி நீரை நோக்கியது. அங்கும் தன்னைப்போல் குரங்கைக் கண்டது. பொறாமையால் நீரில் குதித்து இறந்து மாய்ந்தது. இப்படியே பொறாமையில் அநேக குடிகள் கெட்டுவிட்டன.

***

"பெருமையுஞ் சிறுமையுந் தான்தர வருமே" நம்மாலேயே நன்மையும் தீமையும் விளைகின்றனவென்பதைக் காட்டியிருக்கின்றார்கள் பெரியார்கள்.

கற்புங் கடமையுங் காரிகைக் கழகு.

# தேவீ சந்திரகுப்தம்

## (ஒரு நாடகம்)

ஆர். ராமமூர்த்தி ஐயர், எம். ஏ. (ஆனர்ஸ்)

வடமொழியில் "முத்திராராக்ஷஸம்" என்ற நாடகத்தைத் தவிரச் சரித்திர சம்பந்தமான நாடகங்களே கிடையாதெனச் சில மேம்பட்ட மேனாட்டு மேதாவிகள் சாதிக்கின்றனர். கடல் கடந்த புகழால் கலாநிலயம் போன்ற நமது நுண்ணறிவாளர்களில் பலரும் ஆராய்ந்து பாராது இவ் வபிப்பிராயத்தையே பிரமாணமாகக்கொண்டு பின்பற்றிப் பரவச் செய்கின்றனர். ஆனால் இவ்வபிப்பிராயமானது ஆராய்ச்சிக்கு முரண்பட்டது. ஆகையால் ஆதரவிற்கு அருகதையற்றது என்று திண்ணமாகக் கூறலாம்.

ஆழ்ந்த ஆராய்ச்சிக்கு அமைந்த ஆதாரங்களையும் அத்தாட்சிகளையும் அளவின்றி அளிக்கும் "அபிநவ பாரதீ," "நாட்டிய தர்ப்பணம்," "ச்ருங்காரப் பிரகாசம்," "பாவப் பிரகாசம்" என்று பெயர்பூண்ட நமது நாட்டின் நிகரற்ற புத்தகங்களை ஊக்கத்துடன் உற்று நோக்குங்கால், "முத்திரா ராக்ஷஸம்" என்ற நாடகத்தைத் தவிர, சரித்திர சம்பந்தமான நாடகங்கள் மூன்றிருந்தனவென நிரூபிக்கலாம்.

அவையாவன:—

(1) விசாகதத்தராலியற்றப்பட்ட "தேவீ சந்திர குப்தம்"
(2) பீமன் என்றவராலியற்றப்பட்ட "பிரதிபாசாணக்யம்"
(3) வஸுபந்துவாலியற்றப்பட்ட "பைம்பிஸாரம்" (*Baimbisara*)

உண்மை இவ்வாறாக இருக்க, இதை அறியாமல் ஆலஸ்யத்தால் அசட்டை செய்து "ஆராய்ச்சி செய்வோர்" என்ற அமையாத திருநாமத்தையும் தரித்து, அமளி செய்வோரின் ஆண்மைதான் என்னே!

இம்மூன்று நாடகங்களுள் "தேவி சந்திரகுப்தம்"தான் முதன்மை வாய்ந்தது. தெவிட்டாத் தேனுக்கும், பழுத்துப் பரிமளத்தைப் பரந்து பரவச் செய்யும் பழத்திற்கும், அருந்திடின் அமரராக்கும் அமுதத்திற்குமே இதனை ஈடாக ஈயலாம். சுத்த வீரர்களுக்குச் சுவாஸமாய் விளங்கும் வீர ரஸமும், ஸகல ஜீவராசிகளுக்கும் ஸர்வ ஸாதாரணமான சிருங்கார ரஸமும் இந்நாடகத்தில் ஒருங்கே சேர்ந்து ஒன்றுபட்டு உயர்ந்த ஒளியை ஓங்கி வீசுகின்றன. அதுவுமன்றி, இந்நாடகம், இந்துதேச சரித்திரத்தையே மாற்றும் இயல்பையும் பெற்றிருக்கிறது. மனதைக் கவரக்கூடிய கனிந்த காப்பிய நடையுடன், இதுகாறும் எழுதப்பட்டு, போதிக்கப்பட்டு வரும் தேசசரித்திரத்தையே மாற்றும் மறுக்க முடியாத காரணங்களும் காணப்படுவதால், நாற்றமுடைய பொன்மலர்போல் உவமையற்ற உயர்வுடன் ஓங்கி நிற்கின்றது.

---

கொழுநற் பேணல் குலமகட் கழகு.



இப்பொழுது இந்நாடகத்தின் வரலாற்றைச் சற்று விவரிப்போம். மௌர்ய வம்சத்தைச் சார்ந்த முதலாவது சந்திரகுப்தனுக்கு இராமகுப்தன், குமார சந்திரகுப்தன் என்ற இரண்டு தனயர்கள் இருந்தார்கள். இவர்களில் மூத்தோனும் இளங்கோவுமான இராமகுப்தன், தன் தந்தை இறந்த பின் மன்னனானான். இவனுக்கு, தேவமாதோ, அல்லது உலகில் உயிருடன் உலாவி வரும் இரதியோவென நினைக்கத் தகுந்த வண்ணம், அழகே வடிவாயுள்ள துருவதேவீ என்ற புகழ்பெற்ற ஒரு பத்தினி இருந்தாள்.

"வண்டுமொய்த் தனையகூந்தல் மதனபண் டாரவல்லி
கெண்டையோ டொத்தகண்ணாள் கிளிமொழி வாயினூறல்
கண்டுசர்க் கரையோ தேனோ கனியொடு கலந்த பாகோ
அண்டர்மா முனிவர்க்கெல்லா மமுதமென் றளிக்கலாமே"

என்பதற்கொத்த எழில் வாய்ந்தவள்.

இராமகுப்தன், "தந்தைபோல் தனயன்" என்ற முதுமொழிக்கு முற்றிலும் முரண்பாடாக, ஆண்மையற்று, இராச்சியத்தை இடையூறின்றி இரட்சிக்கும் இயல்பற்று, போரென்றால் பேடிபோல் பயந்து, பேதைபோல் மேதையற்று, அரசனின் மகன் என்ற உரிமையால் அரசுபுரிந்து வந்தானே யல்லாது, தனது ஆண்மையின் அளவால் அல்ல.

இவ்விதம் இராமகுப்தன், இகழத் தகுந்தவண்ணம் செங்கோல் செலுத்தி வந்ததால் இராச்சியத்தில் அமைதி குறைந்தது. அமளி கிளம்பிற்று. சிற்றரசர்கள் செருக்கடைந்தார்கள். தனது தந்தை காலத்தில் இராணுவப் பயிற்சியில் மிகுந்து, போரில் வெற்றிபெற்றுச் சிறந்து, வடஇந்தியாவிற்கே அச்சத்தையும், அதனால் அமைதியையும் அளித்துவந்த சைன்யங்கள், பலம் குன்றி, இராச்சியத்திற்குப் பாரமாக ஏற்பட்டனவேயன்றிப் பாதுகாப்பிற்குப் பயன்படவில்லை. அதுகாறும் பகையாளர்களா யிருந்தாலும் பலனற்றுப் பிணம்போலிருந்த பூபதிகள், பகைமையைப் பகிரங்கமாக வெளிக்காட்டத் தலைப்பட்டார்கள். இராமகுப்தனை இரணகளத்திற்கு இழுத்து முறியடித்து மௌர்ய வம்சத்தையே மடியச்செய்யச் சூழ்ச்சி செய்து வந்தார்கள். அரசனென்ற தனது நிலைமைக்கு அவமானமாகவும், அரசாங்கத்திற்கு அழுக்குப் போன்றதாயும், "சத்ததீரன்" என்று பெயர்படைத்த தன் பிதாவின் புகழுக்கு இழுக்காகவுமுள்ள மேற்கூறிய சீர்குலைந்த நிலைமையை இராமகுப்தன் அறிந்தும், சீர்திருத்தச் சித்தை யிருந்தும், சிறிதும் சக்தியற்றிருந்தான்.

இராமகுப்தனின் நிலைமை இவ்வாறிருக்க, அவனைச் சுற்றிச் சூழ்ந்திருந்த நரபதிகளின் மனப்பான்மை எப்படி யிருந்ததென்று சற்றுச் சிந்திப்போம். முற்போக்கடையாது, முடிவையே முன்னோக்கிக் கொண்டிருப்பதுபோல் தோன்றும் மௌர்ய வம்சத்தைக் கண்ணுற்றான் "சகர்கள்" என்ற புகழ்பெற்ற ஒரு கூட்டத்தின் தலைவன். இச்சகர்களோ தேகவலிமையாற் சிறந்தவர்கள். போர் முனையில் வாளைசூடும் வல்லமை வாய்ந்தவர்கள். தலைவன் சொல் தவறாது இட்ட கட்டளையைத் திட்டமாகப் பூர்த்திசெய்யும் பேராண்மை படைத்தவர்கள். சேனையின் ஸம்பூர்ணமான சக்தியையுடைய சேனாதிபதியினிச்சைக் குட்படாதது ஏதேனு முண்டோ? இல்லை யென்றே

---

காதலி தன்னைக் காதலா விளக்கு.

இயற்கையை யனுசரித்து இயம்பவேண்டும். துருவதேவியின் வடிவழகையும் வசீகரிக்கும் வனப்பையும் கேட்டுக் கரைகடந்த காமங் கொண்டிருந்த இச்சேனாதிபதியின் சித்தத்தை, பூர்த்தி பெறாத அவ்வெண்ணமானது சிற்றுளிபோல் சிறுகச் சிறுகச் சேதித்துக்கொண்டே சென்றது. தேகவலிமையுடையவர்களையும் மனோவலிமை யற்றவர்களாக்கும் காமத்தின் கோலம்தான் என்னே !

“அம்பு மழலு மவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறஞ்சுடும்—வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலாற் காமம்
அவற்றினு மஞ்சப் படும்”

கொழுந்து விட்டெரியும் காமத் தீயைத் தணிக்கத் தகுந்த தருணத்தை எதிர்பார்த்திருந்த இவனுக்கு வேறு சமயமும் கிட்டுமோ! ஆகையால் தனது திறம்பெற்ற திரண்ட சேனையைத் திரட்டி, இராமகுப்தனின் இராச்சியத்தில் இடையூறின்றிப் பிரவேசித்து, கோட்டையையும் முற்றுகை போட்டான். பலனற்ற பயங் கொளிகளான பேடிகளுக்கும் அபாய காலத்தில் அதிசயிக்கத் தக்க ஆக்ரஹமும், ஆர்வமும், ஆண்மையும், அடக்கியாளுந் தன்மையும் அவன் அருளால் அமைவதை நாம் அறிந்திருக்கிறோம். இறைவர்களுள் இழிந்தோனான இராமகுப்தனுக்கு இவ் வாபத்திலும் ஆண்மை ஏற்படவில்லை. எவ்விதத்தாலாவது சமரை நிறுத்திச் சமாதானத்தைச் சம்பாதிப்போமென்ற சித்தத்துடன், சகர்களுடைய சேனாபதியின் சிபிரத்தை நடுநிசியில் அடைந்தான்—தஞ்சம் புகுந்தான். இராச்சியத்தைத் தவிர யாவற்றையும் அளிப்பதாக வாக்களித்தான். சகர்களின் சேனாபதியும், சக்ரவர்த்தினியான துருவ தேவியைத் தனக்குத் தாரமாகத் தந்தாற்றான் சமாதான மேற்படுமென்று வேட்கையால் வெட்கமற்ற விலங்குபோல் மொழிந்தான். அப்பொழுதும் அரசாதமனான இராமகுப்தனுக்கு ஆத்திர மேற்படவில்லை. ஆண்மையற்ற அலிபோல், அவமானத்தைப் பஹுமானமாகப் பாவித்துப் பத்தினியை, அல்ல, பட்ட மஹிஷியை—கற்புக் கரசியை அவ்வாறே தருவதாக வாக்குத் தத்தம் தந்தான். அன்றிரவே தன தன்புடையாளை, பதிசொற் றவறாத பாவையை, சேனாபதியிடம் சேர்த்துவிட்டு, புகழை இழந்து, இகழை அடைந்து, கோதையைக் கொடுத்துக் குலத்தைக் கெடுத்த கோமான், அரண்மனையை அடைந்து அயர்ந்த துயிலில் அமர்ந்து விட்டான்.

மறுநாட் காலையில், இராமகுப்தனின் இளைய சகோதரனான குமார சந்திரகுப்தனுக்கு இவ் விஷயம் தெரியவந்தது. நம்பாமல் அண்ணனையடைந்து உண்மையை யறிந்தான். அறிந்தவுடன் அண்ணனை அண்ணனென் றெண்ணாமல் எறிந்து எசினான். வாயால் சுட்டான். “பட்ட மஹிஷியை அபகரித்த பகைவனைப் பலியிட்டுப் பகைமை தீர்த்து, பின்பு ப்ராதாவாயும் பார்த்திபப் பதராயும் இருக்கும் உன்னையும் போரில் வென்று பிதுர் லோக மனுப்புகிறேன்” என்று சபதம் செய்து, தன் விடுதிக்கு விரைந் தேகினான்.

குமார சந்திரகுப்தனோ, தன் தமையன் போலல்லாது, பலத்தில் பீமன் போலும், போரில் பார்த்திபன் போலும், கொடையில் கர்ணன் போலும்,

பெண்வெறி கொண்டோன் புண்ணுற் றழிவான்.



அடக்கி யாளும் ஆண்மையில் அமரேசன் போலும் விளங்கினான். சகர்களின் சேனாபதியைச் சமரில் ஜெயிக்க முடியாதென்று சந்திரகுப்தனுக்குப் புலப்பட்டது. சகர்களின் சேனாபதி பெண் பேய் பிடித்தோனாதலால், பெண்ணுருவங் கொண்டே காரியத்தைச் சாதிப்பது சுலபமெனத் தோன்றிற்று. ஆகையால் ஆடவர்களை அழகால் அபகரிக்கும் அணங்குபோல் ஆடையணிந்து, ஆபத்துக் காலத்தும் அருண்டு அகலாத ஆப்த அமர் வீரர்களுடன் சகர்களுடைய சிபிரத்தை யடைந்தான். சேனாபதியின் முன்பு சிருங்காரச் சுவையுள்ள செய்யுட்களைச் சிறப்பாகப் பாடினான். சேனாபதிக்கு மோகம் மேலிட்டது. இப் பெண்ணையும் அபகரித்து அந்தப்புரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற அவாவும் உதித்தது. நாடாதுவந்த நாரீமணியை நயத்தால் வசப்படுத்தலாம் என்ற நினைவும், அவனது துர் எண்ணத்துக்குத் தூண்டுகோலாகவும், குன்றாத காமத்துக்குக் கள்போலும் தோன்றிற்று. கானம் முடிந்தபின், கன்னிகையைக் காமக் கண்ணால் பார்த்து, காமுகர்களுக்கே ஸகஜமான சம்க்ஞையால் அவ்வணங்கைத் தனதில்லத்திற்கு வரும்படி அன்போ டழைத்தான். இச் சமயத்தையே சாதகம்போல் எதிர்பார்த்திருந்த சந்திரகுப்தனுக்குப் பெருகிய பேரின்ப வெள்ளத்தை விவரிக்கவும் முடியுமோ! “அரசன் அன்று கொல்லும்; தெய்வம் நின்று கொல்லும்” என்ற சான்றோர் கூற்றும் பொய்யாமோ?

மடந்தைபோல் மாறுவேடம் பூண்ட சந்திரகுப்தனும் நன்கலங்கரித்துக் கொண்டு நள்ளிரவில் சேனாபதியின் அந்தப்புரத்தை யடைந்தான். சற்று நேரம் சென்றபின், அவனுடைய போர் வீரர்களும் சந்தர்ப்பம் நேரிடின் சகாயம் செய்ய அவ்விடத்தை யடைந்தார்கள்.

சந்திரகுப்தன் சயனக் கிரஹத்தை யடைந்தவுடன், சேனாபதியானவன் சிருங்காரச் சொற்களுடன் அவனை வரவேற்றான். ஆனால் இளஞ்சிங்கம் போன்ற சந்திரகுப்தனோ, சினங்கொண்டு சீறி, கார்மேகம் போல் கர்ஜித்து, “பெண் பேய் பிடித்த பித்தா! மௌரியர்களை மதியாத மூடா! காமத்தைக் கடைப் பிடித்துக் கடைத் தேர்ந்தார்களு முண்டோ? பட்ட மஹிஷியை அபகரித்த பதரே! பழிக்குப் பழி வாங்கிக் கொள்” என்று கூறியவண்ணம், கூரிய கட்கத்தைக் கோசத்தினின்று உருவி, திடுக் கடைந்த சேனாபதியின்மேல் பாய்ந்தான். நிராயுதபாணியான சேனாபதியும் சீக்கிரம் நமனுல கடைந்தான். காலதாமதமின்றிக் குமார சந்திரகுப்தனும் துருவதேவியைத் தூக்கிக் கொண்டு சிபிரத்தின் வாயிலை யடைந்து, ஆயுதபாணிகளாய் ஆயத்தமாய் நிற்கும் வீரர்களால் சூழப்பட்டுத் தனது தேசத்தை யடைந்தான்.

ஜெயம்பெற்று, குலத்தின் களங்கத்தைக் களைந்து, மங்கி மாசடைந்த மௌரியர்களின் மாண்பைப் பொங்கிப் புகழுடையுமாறு புத்துயிர்ப்பித்த சந்திரகுப்தனை ஜனங்கள் அடங்கா ஆர்வத்துடனும், மிகுந்த மகிழ்ச்சியுடனும், குன்றாக் கோலாகலத்துடனும் வரவேற்றார்கள். “வேந்தே! வருக” என்றார் சிலர்; “வீர வெள்ளமே! வாழ்க” என்றார் மற்றுஞ் சிலர்; “பிரஜைகளின் பாக்யமே! பெருகுக” என்றார் பின்னுஞ் சிலர்; “பகைவர்க்குப் பகைவனே நின் புகழ் கமழ்க” என்றார் இன்னுஞ் சிலர். இவ்வாறு பல்லோர் பல்வேறு விதமாய்ப் போற்றினர், வாழ்த்தினர், ஆசிகூறினர்.

இடமுள காதல் கடனிலாச் செல்வம்.

சந்திரகுப்தன் வெற்றி பெற்று வருகிறான் என்பதைக் கேட்டவுடன் இராமகுப்தன் இடிவிழுந்த மரம்போலும் உயிரற்ற பிணம் போலும் ஆனான். புறப்படுமுன் புகன்ற பிரதிக்ஞையைப் பங்கமின்றிப் பாதுகாக்கப் போர் புரிவான் என்றுணர்ந்த இராமகுப்தன், பல நாட்களாகப் பொக்கிஷத்தில் பெருகி வந்த பணக் குவியலைப் போர் வீரர்களைச் சேர்க்க விரைவாகச் செலவிட்டான். ஆனால், பணப் பேய் பிடித்த பேடிகளும், உயுத்தப் பயிற்சியற்ற உயிர்ச் சவங்களும், தேசிய வுணர்ச்சியில்லாத் தவச் செல்வங்களுமே அவனை யடைந்தனர். இவ்வாறு, திரண்ட தானையைத் திரட்டிக்கொண்டு தானாகவே தம்பியைத் தாக்கச் சென்றான். பணத்திற்காகப் போர் புரிபவர்களாலும், ஆழ்ந்த அன்பும், உண்மையான உணர்ச்சியும், பின்படையாத பற்றுதலும் இல்லாத பிரஜைகளென்ற பதர்களாலும் வெற்றியடைந்து உய்ந்தாரும் உண்டோ? ஆகையால் இரணகளத்தில் இராமகுப்தனின் சேனை முறியடிக்கப்பட்டது. இராமகுப்தனும் இறந்தான். இறந்த வேந்தனுக்காக இரங்குவார் எவருமில்லை. சந்தோஷத்தையே அடைந்தனர்.

திருந்தினார் போற்றும் திருவள்ளுவர் திருவாக்கின்படி

"கூழுங் குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு."

சந்தோஷப் பெருக்கில் சந்திரகுப்தனைச் சிம்மாதனத்தில் அமரச் செய்து ஜனங்கள் மகுடாபிஷேகம் செய்தார்கள். இராச்சியத்திலும் அமைதி ஏற்பட்டது. தனிமையான, உவமையற்ற, ஓர் உயர்வும் உண்டாயிற்று. சந்திரகுப்தனும் இணையற்றபடி அரசுபுரிந்து வந்தான்.

இப்பொழுது, துருவதேவியின் நிலைமையைப்பற்றிச் சற்று விசாரிப்போம். சிறையிலிருந்து மீட்கப்பட்டுத் தன் அரண்மனைக்கு வந்தவுடன், தனது தலைவனையும் அவனது சகோதரனையும் சீர்தூக்கிப் பார்த்தாள். பலிபோல் பத்னியைப் பதறாது கொடுத்த பர்த்தாவிடம் பதிவிரதைக்கும் ப்ரீதி பிறக்குமோ? பிறவாதென்றே புகலலாம். ஆகையால் இராம குப்தனிடம் வெறுப்பும் அசட்டையும் ஆவேசமும் ஏற்பட்டன. சந்திரகுப்தனிடம் அன்பு சுரந்தது. அம் மனோபாவமானது காதலாக மாறிற்று. இராமகுப்தன் இறந்தபின் காதல் கட்டற்றுக் கடிமணத்தையும் கொணர்ந்தது. துருவதேவியைச் சந்திரகுப்தன் மணந்து மநுநீதி வழுவாது செங்கோல் செலுத்தி வந்தான். கவிஞர் கூறியவாறு:—

"கற்புடை மாதர் கொங்கை கவரிமான் மயிரின் கற்றை
வெற்புறு வேங்கை யின்றேல் வீரன்கை வெய்யகூர்வேல்
அற்பர்தம் பொருள்க டாமு மவரவ ரிறந்த பின்னே
பற்பலர் கொள்வா ரிந்தப் பாரினி லுண்மை தானே."

இதுவே நாடகத்தின் வரலாறாகும்.

"தேவீ சந்திரகுப்தம்" என்னும் நாடகத்தை, "முத்திரா ராக்ஷஸ"த்தின் தொடர்ச்சியென்றே கூறலாம். ஏனெனில், முதலாவது சந்திரகுப்த

பெற்றோ ரெப்படி யப்படிப் பிள்ளை.



னைப்பற்றி "முத்திரா ராக்ஷஸம்" கூறுகிறது. "தேவீ சந்திரகுப்த"மோ அவனுக்குப்பின் அரசுபுரிந்த அவனது தனயர்களைப்பற்றி விவரிக்கின்றது. ஆகையால், விசாகதத்தர் மௌர்ய வம்சத்தைச் சார்ந்த மூன்று மன்னர்களைப்பற்றித் தொடர்ச்சியாக இரண்டு சரித்திர நாடகங்களை இயற்றியுள்ளார் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இதுகாறும் சரித்திர நூலாசிரியர்களும், நிபுணர்களும் முதலாவது சந்திரகுப்தனுக்குப் பிறகு இரண்டாவது சந்திரகுப்தனே அரசாண்டான் என்று சாற்றியிருக்கின்றனர். இந்நாடகம் இவர்களது கூற்றை அடியோடு மாற்றி, சந்திரகுப்தன் என்று பெயர்பூண்ட இரண்டு மன்னர்களுக்கு நடுவே மற்றொரு மௌர்ய மன்னன் ஆட்சிபுரிந்தான் என்றும், அவன் பெயர் இராமகுப்தன் என்றும் சந்தேகமின்றிக் கூறுகிறது.

இந்நாடகத்தில் மற்றோர் உயர்ந்த உயர்வும் உலாவுகின்றது. "முத்திரா ராக்ஷஸ"த்தில் சிருங்காரச் சுவை சிறிதேனுமில்லை. இந்நாடகத்திலோ, வீர ரஸத்துடனும், கனிந்த நடையுடனும், ச்ருங்காரச் சுவையும் காணப்படுவதால், சர்க்கரைப் பந்தலில் தேன்மாரிபோல் கற்றோர் மனதைக் களிப்புறச் செய்து, காப்பியத்தின் குறையாச் செல்வமோ, கற்பனா சக்தியின் களஞ்சியமோ, கல்வியின் குவியலோ என்று வியக்கும் வண்ணம் வசீகரிக்கின்றது.

சரித்திர நாடகங்களுள், ஏன், எவ்வித நாடகங்களுக்குள்ளும், "முத்திரா ராக்ஷஸம்," "தேவீ சந்திரகுப்தம்," "அபிஸாரிகா வஞ்சிதகம்" என்ற மூன்று நாடகங்கள் சிறந்தனவென யாவரும் விவாதமின்றி ஒப்பவே வேண்டும். விசாகதத்தரும், அழியாப் புகழுடனும், புகலவொணாப் பொலிவுடனும் பொருந்திய இந்நாடக ரத்னங்களை இயற்றி, புகழ் என்ற புனித வுடம்பால் இப்பொழுதும் இப்புவியில் இணையற்று இருந்து, சான்றோரியற்றிய இச்செய்யுளையும் நமது நினைவில் நிலைபெறச் செய்கிறார் என்பதில் ஐயமுண்டோ!

"மலரவன் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா; புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு."

"யாகாவாராயினும் நாகாக்க; காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" ஒருவன் எதைக் காக்காவிடினும், நாவைக் காக்கக் கடவன்; கடவானேல் சொற் குற்றத்தி லகப்பட்டு வருந்துவான்.—"திருக்குறள் நீதி."

சந்தாதாரர்களுக்கு:—சந்தா நெம்பர் தெரியாதவர்கள் மாத மாதம் வரும் சஞ்சிகையின்மேலுள்ள விலாசத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நம்பரைப் பார்த்துக் குறித்து வைத்துக்கொள்ளக் கோருகிறோம்.

குவலய மெல்லாம் குலமொன் றாமே.

# வானக் காட்சி

(N. குழந்தைவேலன், B. A., சேலம்.)

இரவில் அளவிட முடியாத நட்சத்திரங்கள் வானத்திலே வைர மணிகள் இழைக்கப்பட்டாற்போலத் தோன்றுவதைக் காண்கிறோம். இக் காட்சியையே ஆன்றோர், "கை புனைந்தியற்றாக் கவின் பெறு வனப்பு" எனக் கூறிப்போந்தனர். நட்சத்திரங்களில் சூரிய சந்திர மண்டிலங்களைவிட எத்தனையோ மடங்கு பெரியனவாயுள்ள உலகங்கள் கணக்கற்றவைகளா யிருக்கின்றன. இவ்வுண்மையை நன்கு ஊன்றி நோக்குவோர்க்கு எல்லாம் வல்ல இறைவனது பேராற்றல் புலப்படாதிராது.

"அந்தரத் தகிலகோடி தாழாமல்நிலை நிற்கவில்லையோ" என்னும் தாயுமான அடிகளின் திருவாக்கு நினைவிற் பதிக்கற்பாலது.

நட்சத்திரங்கள் சூரிய சந்திரமண்டிலங்களைவிட நெடுந்தூரங்களில் உலவுதலால் நம் கண்களுக்கு முத்துகளைப் போன்று மிகச் சிறியனவாய்த் தோன்றுகின்றன. மற்றுஞ் சில மனத்திற்கு மெட்டாத நெடுந்தூரங்களில் இருப்பதால் அவை நம் ஊனக்கண்களுக்குப் புலப்படுவதில்லை. மிகவுயர்ந்த பூதக் கண்ணாடி (Powerful telescope)களில் மட்டும் தெரியக்கூடியவைகளான நட்சத்திரங்கள் பூமியிலிருந்து எவ்வளவு தொலைவில் இருக்கக்கூடும்? ஒரு நொடிப் பொழுதில் ஒருநூற்று எண்பத்தாறாயிரம் மைல் கடுகிச் செல்லக் கூடிய வெளிச்சம்கூட அம் மண்டிலங்களிலிருந்து நமக்கு வந்து சேரப் பதினான்கு கோடி வருடங்களாகு மென்றால் அவை எவ்வளவு தூரத்திலிருக்கின்றன என்பதை உய்த்துணர்ந்து கொள்ளலாம்.

சூரியன் இப்பூமியைப்போல் பத்தாயிரமடங்கு பெரியதும் மூன்று இலட்சமடங்கு கனமுள்ளதுமாகும். இப்பூவுலகத்தைப் போன்ற பத்தாயிரம் உலகங்களை ஒருங்கு சேர்த்துத் திரட்டினால் அங்ஙனம் திரட்டப்பட்ட பிண்டம் சூரியனது அளவினை யொப்பதாகும். இருப்பினும் இவ்வளவு பெரிய சூரியனை ஏனைய நட்சத்திரங்களோடு ஒப்பிட்டுப்பார்த்தால் சூரியன் கடற்கரையின் ஓர் மணலுக்கு ஒப்பாகிறது. சூரியனை ஒரு மணலாகக் கொள்வோமாயின் பூமியோ மணலின் பத்தாயிரத்திலொரு பங்கு இருக்கலாம். நட்சத்திரங்கள் ஒளியிலும் நிறத்திலும், பருமனிலும் ஒன்றுக்கொன்று மாறுபடுகின்றன. எல்லாவற்றிலும் மிக்க ஒளியுடைய நட்சத்திரம் சூரியனைப்போல் மூன்று இலட்சம் மடங்கு அதிக வெளிச்சம் கொடுக்கிறது. யாமறிந்தவற்றில் மிகச் சிறிய நட்சத்திரம் ஏறக்குறைய பூமியவ்வளவு பெரிதாக இருக்கின்றது. எல்லாவற்றிலும் மிகப் பெரிய நட்சத்திரம் இரண்டரை இலட்சம் சூரியர்களைத் தன்னுள் அடக்கிக் கொள்ளக்கூடிய அவ்வளவு பருத்ததாக இருக்கிறது.

---

செயலை நோக்கிச் சிக்கனஞ் செய்க.



வான வெளியானது வெற்று இடமாக இல்லாமல் கற்களும் தூசுகளும் நிறைந்து கிடக்கின்றது. அதுவுமன்றி இக்கற்கள் எல்லாத் திக்குகளிலும் அதி விரைவாக நகர்ந்துகொண் டிருக்கின்றன. இவை பெரிய கோள்களின் அருகாமையில் வருமாயின் தாம் போகும் வழிகளிலிருந்து இழுக்கப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் சற்றேறக்குறைய நூறு டன் எடையுள்ள கற்கள் இம்மாதிரியாய்ப் பூமிக்கு எதிர்ப்படுகின்றன. இவற்றில் பெரியவைகளுக்கு 'விண் வீழ் கொள்ளி' அல்லது 'ஆகாயக்கல்' (Meteorite) என்று பெயர். சிறிய கற்களோ வெனில் மணிக்கு எழுபத்திரண்டாயிரம் மைல் வேகத்தில் வானத்தை ஊடுருவிச் செல்கின்றது. இவற்றின் வேகத்தைக் காற்றுத் தடுப்பதால் இவை அதிகச் சூடடைந்து அனற் பிழம்புகளாய் மாறுகின்றன. இவ்வாறு கற்கள் ஒளியுடன் எரிந்துகொண்டு கீழே விழுதலை இராக்காலங்களில் பல முறைகளில் கண்டிருக்கலாம். இவற்றையே பாயும் நட்சத்திரங்கள் (Shooting Stars) எனக் கூறுவர். உண்மை யறியாதவர்கள் நட்சத்திரமே விழுகின்றதெனத் தவறுகக் கொள்வார்கள். இம் மண்ணுலகத்தின்மேல் ஒரு நக்ஷத்திரம் விழுந்தாலும் இவ்வுலகு அதன் உயிர்களுடன் என்ன நிலைமையடையு மென்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு" குறள்.

ஓர் பொருள் எந்த இயல் பினதாய்த் தோன்றினாலும் உலகத்தார் கற்பித்துக் கொண்டு வழங்கும் கற்பனைகளைக் கழித்து உண்மையைக் காண்பதே மெய்யுணர் வாகும்.

அடுத்தாற்போல் வால் நட்சத்திரங்களின் தன்மைகளைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். வால் நட்சத்திரம் தோன்றினால் ஏதோ பெரிய இடுக்கண் நேரிடும் என்று நம்புவதை இக்காலத்தில் அறவே கைவிட வேண்டும். வால் நட்சத்திரங்கள் என்பவை சூரிய மண்டிலத்தைச் சுற்றிவரும் கற்கூட்டங்களேயாம். வேகம் அதிகரிக்க அதிகரிக்க அவை ஒன்றோடொன்று மோதிக் கொண்டு அனலுருவாகின்றன. இவ்வாறு மாறிய அனற்பிழம்புகள் சூரியனால் இழுக்கப்பட்டு நீண்ட வால்களுடையனவாயிருக்கின்றன. பல வால் நட்சத்திரங்கள் காலமுறை வழுவாது திரும்பி வருகின்றன. இவை சில வருடங்கள் வரை மறைந்திருந்து நம் கண்களுக்கு மீண்டும் தோன்றிப் பின்னர் மறைகின்றன. நமது உலகத்தின் பக்கமாய் வரும்போது இவற்றை உற்று நோக்கி விவரங்கள் தெரிந்து கொள்வதற்கு இடமுண்டாவதால் வானநூற் புலவர்கள் அச்சமயத்தை மிக்க ஆவலுடன் எதிர்பார்த்திருப்பார்கள். எனவே வால் நட்சத்திரம் நமக்குக் கல்வி கற்பிக்க வருகிறதே யன்றி நம்மை அழித்துவிட வருவதன்று.

மிகப் பெரிய பூதக்கண்ணாடிக்கும் எட்டாத இடங்களில் சுழன்று செல்லும் எண்ணிறந்த உலகங்களில் உயிர் வாழ்தல் இயலுமோ வெனப்பார்ப்போம். மனிதன் இத்தூலவுடம்புடன் பூமியைத் தவிர வேறெங்கும் உயிர் வாழ்வதரிது. இவ்வுடம்பு மண்ணுலகின் தட்ப வெப்ப நிலைக்குத் தக்கவாறு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்நிலைமையிற் சிறிது மாறுபட்டாலும் நாம்

---

தந்தை யொழுக்கந் தனையருக் கெய்தும்.

உட்கொள்ளும் காற்றிற் கலந்துள்ள வாயுக்கள் நிலை திரிந்தாலும் நம் தூலவுடம்பிற்கு அபாயம் ஏற்படும். ஆகலின் வானத்திலுள்ள வேறு உலகங்கள் பருவுடம்போடு கூடிய உயிர்கள் வாழ்தற்கு ஏலாதனவா யிருக்கின்றன. ஆயினும் அவ்வுலகங்களின் இயல்புகளுக்கு ஒத்த சூக்கும உடம்புகளோடு கூடிய உயிர்கள் ஆங்காங்கு வாழக்கூடுமெனவே தோன்றுகிறது. இக்காலத்து வானநூற்புலவர் பலர் நுண்ணிய கருவிகளி னுதவியால் நெடுந்தூரங்களிற் சுழல்கின்ற பல்வேறு உலகங்களையும் ஆராய்ந்து அவற்றின் தன்மைகளை விளக்கி வருகின்றனர்.

வானத்தில் சுற்றித்திரியும் சூரிய மண்டிலம் சந்திர மண்டிலம் நட்சத்திர மண்டிலம் முதலியவற்றை ஒழுங்குபெறச் செலுத்துவதற்கு அறிவுடைய ஒரு பெரிய தலைவன் இருக்கவேண்டு மென்பது சொல்லாமலே விளங்கும். நம்மால் உலகத்தை ஒருகணமேனும் நடத்த முடியாது. இதனால் தானே,

"அவனன்றி யோரணுவு மசையாது"

எனப் பெரியோர் கூறியிருக்கின்றனர். நமது காட்சிக்கு அப்பாற்பட்டனவா யுள்ள எண்ணில்லாத அண்டகோடிகள் கடவுளுடைய திருமுன்பாக ஆடிக் கொண்டிருக்கின்றன. இவ்வண்டங்க ளெல்லாம் ஒன்றனையொன்று ஈர்க்கும் சிறந்த வலிமை (Gravitational force) யால் அந்தரத்தே நிலவுகின்றன. இவ்வண்டங்க ளெல்லாம் கூடிய பேருலகமானது நம்மால் அளவிடப்படாததாய் இறைவனது பெருமையை; நமக்கு விளக்கிக் காட்டுகின்றது.

---

சொந்த முடையது சுத்தமுடையது சோதியான கதரே; அந்தமுடையது அவனியின்மேலே இந்தக் கதருக் கிணையில்லை என்று இச் சங்கராந்திப் பண்டிகையில் உடுத்த வேண்டுகின்றோம்.

## சந்தா நேயர்களுக்கு

நமது "ஆனந்தபோதினி" மாத சஞ்சிகை ஒவ்வொரு தமிழ் மாத முதல் தேதியிலும் எக்காரணத்தை முன்னிட்டும் நிறுத்தப்படாமல் தபாலில் சேர்க்கப் பட்டு வந்தும் சிலர் சஞ்சிகை கிடைக்கவில்லை என்று எமக்கு அடிக்கடி தெரிவிக்கின்றனர். இந்த நண்பர்கள் அந்த அந்த ஊர் போஸ்டு மாஸ்டருக்கு விஷயந் தெரிவித்தால் சஞ்சிகைகள் ஒழுங்காகக் கிடைத்து வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ப-ர்.






## வேதாந்த சூடாமணி வசனம்

(பண்டிதர். பூ. ஸ்ரீநிவாசன்.)

### திருசிய மாயாசக்தியின் தன்மை

"இந்துவினை யநாதியடைந் தைமுழுது மறையாம லிந்துதன்னு
லந்திறனை யொளிர்வித்துங் கொள்களங்க மெனவென்னையா னறியேனென்னு
முந்துலக விவகாரந் தனிலுயிரை யடைந்ததனை மூடாதென்று
மந்தவுயி ராலறியப் பட்டுமனற் றம்பிக்கு மந்திரம்போல்"

"விளங்குறுமான் மாவுருவ மல்லாம லான்மாவின் வேறாய்த் தோன்று
துளங்கொள்வி யோமாதிகா ரியங்கடமைத் தோன்றுவா றொடுக்கி நின்றுந்
துளங்கலக டிதகடநா சாமர்த்தி யாகியுமே தோன்றுகின்ற
வளங்கடரு காரணமா யதுவாகுந் திருசியமா மாயாசத்தி"

சந்திரனிடத்து களங்கமானது அநாதியாக வுள்ளது. அது சந்திரனை முழுதும் மறைப்பதில்லை; ஏகதேசமாக மறைக்கிறது. அது அச்சந்திரனாலேயே தன் அழகிய தன்மையைப் பிரகாசிப்பிக்கச் செய்து கொள்ளுகிறது. அது போல, மாயையானது ஆத்மாவை யநாதியாக வடைந்துள்ளது, அவ்வாறிருக்கின்ற தென்பது என்னை யானறியே னென்னும் உலக விவகாரத்தாலறியப்படுகின்றது. (என்னை யான் அறியேன் என்பது அஞ்ஞானம். அதுவே மாயை). அது ஆத்மாவை முற்றும் மறைப்பதில்லை; ஏகதேசமாக மறைக்கிறது. அவ்வாத்மாவாலேயே அறியப்படுகின்றது. அன்றியும் மந்திரத்தால் தம்பிக்கப்படுகின்ற நெருப்பின் தொழிலாகிய சுடுகை அந்த நெருப்பின் சொரூப மன்றாயும் அதனின் வேறு மன்றாயு மிருத்தல்போல, பிரத்தியகாத்ம சொரூப மன்றாயும் அவ்வாத்மாவினும் வேறாகத் தோன்றாது முள்ளது. அக்கினியின் சுடுகை அதன் காரியமாகிய தகித்தல் முதலியவற்றால் அறியப்படுதல்போல, மாயையும் அதன் காரியமாகிய ஆகாயம் முதலியவற்றைத் தோன்றச் செய்தல் மீண்டும் அவற்றைத் தனக்குள் மறைத்தல் முதலியவற்றால் அறியப்படும்.

இவ்வாறு நிகழாததை நிகழச் செய்வதாகிய அகடிதகடன சாமர்த்திய முடையதும் சகல அனர்த்தங்களுக்கும் காரணமா யிருப்பதும் எதுவோ அதுவே திருசியவடிவ மாயாசத்தியாம்.

(திருக்கு=அறிவு. திருசியம்=அறியப்படுவது. எனவே, திருக்குவிற்கு விஷயமாவது திருசியமாம்.)

## மாயையின் லட்சணம்

"அனையதொரு மாயையிலக் கணமசத்துச் சடந்துக்க மநித்தங் கண்டம்"

அத்தன்மைத்தாகிய மாயையின் இலக்கணம் அசத்து—சடம். துக்கம்—அநித்தம்—கண்டம் என்பனவாம். இவற்றுள்,

1. அசத்து:—"முயற்கோடு முதலசத்து"

எக்காலத்து மில்லாதவைகளாகிய முயற்கொம்பு முதலியன அசத்து வடிவமாம்.

2. ஜடம்:—"சடவுருக்கல் லெழுவாய்"

கல் முதலியன ஜடவடிவமாம்.

3. துக்கம்:—"புத்தி—தனையடையுங் கோரமொடு மூடவிருத்திகள் துக்கம்"

புத்தியைப் பொருந்தி யிருக்கின்ற கோரவிருத்தியும் மூடவிருத்தியும் துக்கமாம். (இராசத குணத்தால் ராக (ஆசை) மயமா யுள்ளது கோர விருத்தி; தாமதகுணத்தால் அஞ்ஞானமயமா யுள்ளது மூடவிருத்தி.)

4. அநித்தம்:—"தபுமெய்யாதி முனமுறைசெய்ய நித்தம்"

தோன்றி அழிவனவாகவுள்ள சரீர முதலியன அநித்தமாம்.

5. கண்டம்:—"கால பரிச்சேத முதலவாகும்"

கால பரிச்சேதம்—தேச பரிச்சேதம்—வஸ்து பரிச்சேதம் என்னுமிவை கண்டனமாம்.

(கால பரிச்சேதம்—தேச பரிச்சேதம்—வஸ்து பரிச்சேதம் என்னு மிம் மூன்றும் முன்னரே விளக்கப்பட்டுள்ளன. எனினும், வாசகர்களின் ஞாபகார்த்தமாக ஈண்டுச் சுருங்கக் கூறுவாம்.

"உரைத்தவைதா மியாவையெனி னொருகாலத் துண்டின்னொருகாலத்
[தெனுங்கால பரிச்சேத முடனே
தெரிந்தவொரு தேயத்துண் டொருதேயத் திலையென றேயபரிச் சேதமு
[மொன்றாமாகா தென்னுங்
கருத்தில் வருவத்துபரிச் சேதமுமா மென்னக் கருதிடுக"
(வேதாந்த சூடாமணி.)

1. ஒரு காலத்திலிருந்து மற்றொருகாலத்திலில்லாதிருப்பது காலபரிச்சேதம் (காலத்தால் முடிவுடையது. பரிச்சேதம்=முடிவு.)

2. ஒரு தேசத்தி(இடத்தி)லிருந்து மற்றொரு தேசத்திலில்லாதிருப்பது தேசபரிச் சேதம். (இடத்தால் முடிவுடையது.)

3. ஒருவஸ்து மற்றொரு வஸ்து வாகாமை வஸ்து பரிச்சேதமாம். (வஸ்துவால் முடிவுடையது.)

என்றறிக.)

## மாயையின் நவப்பிரகாரம்

"பின்னமோ டசத்துச்சா வயமுமெதிர் மறையுமவை பிரிந்ததம்மின்
மன்னியவு மொழிந்த நிர்வாச் சியமாகு நவவிதமம் மாயையெய்தும்"

---

வீரனைப் பெற்றான் மெய்த்தவமுற்றான்.



மேலும், அந்த மாயையானது பின்னம் அசத்து சாவயவம் என்றும், இவற்றிற்கு எதிர் மறையாய அபின்னம் சத்து நிரவயவம் என்றும், மேற்கூறிய பின்னம் அபின்னம் முதலியவற்றின் சேர்க்கையாகிய பின்னபின்னம் சதசத்து சாவயவ நிரவயவம் என்றும் ஒன்பது பிரகாரத்தையுமுடைய தன்றாம். அதனால் இத்தன்மைய தெனக்கூற முடியாததாம். அதனால் அநிர்வாச்சியமாம்.

## நவப்பிரகார விளக்கம்

மாயையானது,

1. சத்து (இருப்பது) அன்று, ஏனெனில், பிரஹ்மஞானத்தால் பொய் யென்று நிச்சயிக்கப்படுதலால்.

2. அசத்து (இல்லாதது) அன்று. உலகத்திற்குக் காரணமா யிருத்தலாலும் 'நான் அஞ்ஞானி' என்னும் அனுபவ மிருத்தலாலும்.

3. சதசத்து மன்று, ஒன்றற்கொன்று விரோதத்தன்மையுடைய சத்திற்கும் அசத்திற்கும் கூட்டுறவு சம்பவியா தாகலின்.

4. சாவயவம் (அவயவ முடையது) அன்று. அவயவமுடையதாயின் திரவியமா யிருத்தல்வேண்டும். மாயை திரவிய மன்றாகலின் சாவயவ மன்று.

5. நிரவயவம் (அவயவ மில்லாதது) அன்று. உலகாகாரமாகப் பரிணமித்தலின் நிரவயவமு மன்று.

6. சாவயவ நிரவயவமு மன்று. ஒன்றற்கொன்று விரோதத் தன்மையுடைய சாவயவத்திற்கும் நிரவயவத்திற்கும் கூட்டுறவு சம்பவியாமையின் சாவயவ நிரவயவ மன்று.

7. பின்னம் (வேறு பட்டது) அன்று. பிரஹ்மத்திற்கு வேறாக இல்லாமையின் பின்ன மன்று.

8. அபின்னம் (வேறு படாதது) அன்று. பிரஹ்மம் சித்து மாயையோ ஜடம் இவ்விரண்டிற்கும் அபேதம் கூடாமையின் அபின்ன மன்று.

9. பின்ன பின்னமு மன்று. ஒன்றற்கொன்று விரோதமான பின்னத்திற்கும் அபின்னத்திற்கும் கூட்டுறவு சம்பவியாமையின் பின்னபின்னமு மன்று.

## மாயையின் மூவகைத் தோற்றம்

"உன்னலரும் சுருதி சம்பந்தமுத்தி சம்பந்த முலகபந்த
மென்னவரு ஞானங்கள் முறையேயம் மாயைபடு மியல்பு கூறின்"
"விண்ணின்மல ரெனத்துச்ச மேயெனவு மிப்பிவரு வெள்ளிபோல
எண்ணுமநிர் வாச்சியமாமெனவு முயிர்போனித்த மெனவு நிற்கும்"

சுருதி சம்பந்த ஞானம்—யுக்தி சம்பந்த ஞானம்—உலக சம்பந்த ஞானம் என்னும் மூவகை ஞானத்தால் மாயைக் குண்டாகும் இயல்பினைக் கூறுமிடத்து, முறையே ஆகாயத்தாமரைபோலத் துச்சமெனவும், இளிஞ்சில் வெள்ளிபோல அநிர்வாச்சியமெனவும், ஆத்மாபோல நித்தியமெனவும் கூறுமாறு நிற்கும். எங்ஙனமெனின்,

மாயையானது சுருதி சம்பந்தஞான முடையோர்க்கு ஆகாசத்தாமரை மலரைப்போல அசத்தாகக் காணப்படும். யுத்தி சம்பந்தஞான முடை

---

வீரமும் உணவுஞ் சிறுட னூட்டு.

யோர்க்கு கிளிஞ்சிலில் தோன்றும் வெள்ளியைப்போல அநிர்வாச்சியமாகக் காணப்படும் இவ்விரண்டு ஞானமுமில்லாமல் உலக சம்பந்த ஞான முடை யோர்க்கு ஆத்மாவைப்போல நித்தியமாகக் காணப்படும்.

## மாயாநாம பஞ்சகம்

மாயையின் ஐவகைப் பெயர்கள்:—

"உண்ணிலவு தமமாயை மோகமுட னவித்தை பொய்ம்மையுருவி யென்றே
நண்ணுமிவை மாயாபஞ் சகமாகுமென வறிஞர் நவில்வ ரன்றே."

தமம்—மாயை—மோகம்—அவித்தை—பொய்ம்மையுருவி (அநிருதம்). என்பவை மாயையின் ஐந்து பெயர்களாம்.

1. தமம்—"சீவ சேதனமறைத்துத் தமம்." சிதாபாசனாகிய ஜீவசேதனத்தை மறைத்தலால் தமம்' என்றும்,

2. மாயை—"அயலாகிய வுலகத்திற்கெல்லா—மேவு காரணமாகி மாயை" உலக காரணமாயிருத்தலின் மாயை என்றும்,

3. மோகம், "விபரிதஞானம் விளைத்து மோகம்" உலகம் சத்தியம் என்பன போன்ற விபரீதஞானத்தை யுண்டாக்கலால் மோகம் எனவும்,

4. அவித்தை—"ஓவ வுணர்வழித் தவத்தை." தத்துவ ஞானத்தா லழிவதா யிருத்தலின் அவித்தை எனவும்.

5. பொய்ம்மை யுருவி (அநிருதம்)–சத்வடிவ பிரஹ்மத்திற்கு வேறா யிருத்தலால் பொய்மையுருவி எனவும்,

பெயர்கள் பெற்றதென்க.

## மாயையின் இருவகைத் தருமங்கள்

"வீவிலா மாயையதற் கிருதருமம் சங்கோச விகாச மென்றும்"

மாயை சங்கோசம் விகாசம் என்னும் இருவகைத் தருமங்களுடையதாம். (சங்கோசம்=குவிதல்; விகாசம்=விரிதல்).

"விரிந்துபட மோவியங்கள் பலதிகழ்த்திக் குவிந்தொடுக்கும் விதமேபோல
அரந்தைதரு மாயையுந்தன் விகாசதருமத்தினு லகிலங்காட்டிப்
பரந்தவைகள் சங்கோச தருமத்தா லடக்குமெனப் பகர்வர்"

சித்திரம் வரையப் பெற்றுள்ள ஆடையானது தனது விரிவால் பலவகைச் சித்திரங்களை விளங்கக்காட்டி, குவிவால் அவ்வுருவங்களைத் தனக்குள் மறைத்துக் கொள்ளுதல்போல, மாயையும் தனது விகாச (விரியும்) தருமத்தால் உலகம் முழுவதையும் காட்டி, நாமரூபங்களாக விரிந்துள்ள அவையனைத்தையும் தனது சங்கோச (குவியும்) தருமத்தால் மறைத்துக் கொள்ளும்.

## மாயையின் இரு குணங்கள்

"மாயைக் கிருந்தகுண மிரண்டுள இல் சுதந்தரமும் சுதந்தரமு மென்ன
[வன்றே"

மாயைக்குள்ள குணங்கள் இரண்டு. அவை சுதந்தரமின்மை சுதந்தரமுடைமை என்பனவாம்.





1. சுதந்தரமின்மை—"பொய்யாகிச் சத்துருவப் பொருளின் வேறாகி யொரு பொருளாய்த் தோற்றல்—செய்யாமையாலுளதில் சுதந்தரமும்."

மாயையானது மித்தியாவடிவமாய் சத்ரூபப் பிரஹ்மத்தினும் வேறாய்த் தானொரு பொருளாய்த் தோற்றுதலில்லாததா யிருத்தலின் சுதந்தரமின்மையதாம்.

2. சுதந்தரம்—"சான் றாயவொரு சேதனன்பா—லுய்யாத சீவாதி யாக்குதலால் சுதந்தரமு முளது"

சாட்சியாகவுள்ள ஒப்பற்ற சேதனத்தினிடத்து ஜீவேசுவர ஜகத்தை யுண்டாக்குதலால் சுதந்தரமு முடையதாம்.

(அதனால் 'அதன் தன்மை இது' எனக் கூறுகின்றார்.)

"மாயை—மெய்யான தலதென்றல் விசும்பலர்போ லில்லையென விளம்ப லன்றே"

ஆதலால், மாயை சத்தென்றும் ஆகாயத்தாமரைப்போல அசத்தென்றும் கூறத் தகாததாம். (ஆதலால், சதசத் விலட்சணம் எனக் கூறத்தக்கதாம். அதாவது அவ்விரண்டிற்கும் வேறானதாம். எனவே, அநிர்வசனீயமெனப் படுவதாம்.)

## மாயையின் மூவகை விருத்திகள்

"புலனில்கனுக் கரியாதி போற்றோன்றி விசாரிக்கிற் பொன்றும் பொய்யா
நிலவுதல்செய் சுத்தசத் துவவடிவ மாயையொடு நிகழ்த்துகின்ற
மலினசத் துவவடிவ வவித்தைதமப் பிரதான வடிவமாகு
நலமில்பிர கிருதியென விருத்திமூன் றுடையது முன்னவின்ற மாயை"

கனவில் தோன்றும் யானை முதலியவற்றைப்போலத் தோன்றி விசாரணை காலத்தில் இல்லாதொழியும் தன்மையினையுடைய மாயையானது சுத்த சத்துவகுணரூப மாயை–மலின சத்துவகுண அவித்தை—தாமதப் பிரதானரூபப் பிரகிருதி என்னும் மூன்று விருத்திகளை யுடையதாம்.

("அநாதி சுத்தப்பிரஹ்மத்தில் அநாதி கற்பிதமாகிய பிரகிருதி உண்டு. அந்தப் பிரகிருதிக்குப் பிரமத்தோடு அநாதி கற்பிததாதாத்மிய (கற்பிதபேதத்தோடு வாஸ்தவ அபேதமாகிய) சம்பந்த முண்டு. அந்தப்பிரகிருதி மாயை அவித்தை தமப்பிரதானப்பிரகிருதி எனப் பிரிவை யடைகின்றது. அவற்றுள்,

சுத்த சத்துவகுணத்தோடு கூடியது மாயை. மலினசத்துவ குணத்தோடு கூடியது அவித்தை. தமோகுணத்தின் முக்கியத் தன்மையோடு கூடியது தமப்பிரதானப் பிரகிருதி.

(க்ஷத்திரிய சூத்திரர்களாகிய மந்திரிகளால் அமிழ்த்தப்படாத பிராஹ்மணனாகிய இராஜாவைப்போல இரஜோதமோ குணங்களால் அமிழ்த்தப்படாது தான் அவற்றை அமிழ்த்தியிருப்பதாகிய சத்துவகுணம் சுத்தசத்துவ குணமாம். இரஜோதமோ குணங்களை அமிழ்த்தாமல் சூத்திரர்களாகிய இரண்டு இராஜ குமாரர்களால் அமிழ்த்தப்படும் பிராஹ்மணனாகிய ஒரு மந்திரியைப் போல, இரஜோதமோ குணங்களால் தான் அமிழ்த்தப்பட் டிருப்பதாகிய சத்துவகுணம் மலினசத்துவகுணமாம்" என்று ஸ்ரீ விசாரசந்திரோதயம் கூறுவதுங் காண்க.)

# பரோபகாரம்.

(எம். சுப்பிரமணியம், பி. ஏ.)

பிறர்க்கு உதவி செய்யும் பணி 'பரோபகாரம்' எனப்படும். பிறர் படும் துன்பத்தைக் கண்டு பொறாது, அதைத் தனதாகப் பாவித்து, அனலிடு மெழுகுபோல் இயற்கையாகவே இளகியுருகும் கனிந்த மனமே பரோபகார மென்னும் பணிக்குக் காரணபூதமாகின்றது. அவ்வாறு கனிந்த மனம் கரையிலாக் கருணையைக் கொணரும்; கருணை அளவிலா அன்பை அளிக்கும்; அன்பு, போற்றிப் பாராட்டற்குரிய பரோபகார எண்ணத்தைப் பயக்கும்; பரோபகார எண்ணம், பிறர் நலிவைக் கண்டு சகியாத இன்சொல்லை ஈனும்; அவ்வின்சொல் பரோபகாரமாகிய பக்குவச் செயலைச் செய்விக்கும்; அச் செயல், "சிந்தையு மொழியும் செல்லா நிலைமைத்தாகிய அந்தமி லின்பத் தழிவில்" வீடளிக்கும். பரோபகாரத்தின் பெருமைதான் என்னே!

இங்ஙனம், இளகிய மனமே பரோபகாரத்திற்கு அடிப்படையாவதால், இம்மனோ பாவத்தைத் தினையளவும் படைத்திராத கன்னெஞ்சர்பால் இக்குணம் அணுவளவும் அமையாதென்பது வெளிப்படை.

இனி, பரோபகாரம் செய்யச் சாதகமான சமயம் யாதென நோக்குவோம். மனோவியாகுலத்தாலோ தேக உபாதையாலோ பிறர் இன்னலெய்துங்கால் பரோபகாரச் செயலுக்கு இடமேற்படுகின்றது. அதுகாலை, "பரோபகாரார்த்தாய மிதம் சரீரம்" என்னும் பொன்மொழியைக் கருத்துட் கொண்டு, அவ்வின்னலைக் களையும் பொருட்டு நம்மாலியன்றதைச் செய்யும் தொழிலில் முற்பட நாம் பெரிதும் கடப்பாடுடையோம். இவ்வாறு சக்திக் கேற்றவாறு செய்யும் விஷயத்தில், 'இத்தகைய உபகாரம் உயர்ந்தது, இத்தகையது இழிந்தது' என்னும் வேற்றுமை இல்லாதொழியும் என்பதைத் திண்ணமாய்க் கூறலாம். மனம், வாக்கு, காயம் ஆகியவற்றால் தனித்தனியே செய்யும் உபகாரங்கள், சக்திக்கேற்றவாறு செய்யப்பட்டால், தமக்குள் ஒன்றற்கொன்று உயர்வால் வேற்றுமையின்றிச் சமமான பெருமையையே படைத்தவையாகும். பொருளைக் கருவியாகக் கொண்டு செய்யும் உபகாரமும் இத்தன்மைத்தே. உதாரணமாகத் தன் சுற்றத்தாரனைவரையும், தன் செல்வ மனைத்தையும் விதிவசத்தால் இழந்து பசிப்பிணியாலும் அதன் காரணமாக பலவிதத் தேக உபாதைகளாலும் இன்னலுறும் ஏகாங்கியான ஒருவனது நிலைமையை, ஊமையும் நொண்டியுமான ஒருவன் கண்டு "அந்தோ பரிதாபம்! இவனுக்கு ஆறுதல் அளிக்கும் இன்மொழி கூறி இவன் இன்னலை இயன்றமட்டும் இன்மையாகச் செய்வதற்கும், இவனுக்கு நம் காயத்தாற் கடுகளவேனும் உதவி புரிவ

பெற்றோர் பரிசு பிள்ளையின் புகழே.



தற்கும் நமக்கு நம் வினைப்பயனால் சக்தியில்லாது போயிற்றே" என்று ஆழ்ந்த மனத்தால் நினைக்கும் நிலையின்கண் வெளிப்படும் பரோபகாரமும், பிறவிக் குருடனொருவன் அந்நிலையைக் காதால் கேள்விப்பட்டு, அத்தௌர்ப்பாக்யனிடம் நகர்ந்து சென்று, "அந்தோ! அன்பா! உன் நிலையைக் கேட்டு நான் மிகவும் இரங்குகின்றேன்; ஆயின், நான் உன் நிலையைக் கண்ணால் காணின் இன்னும் எத்துணைப் பரிதாபங் கொள்வேனோ என்று கருதியே ஆண்டவன் என்னைக் கண்ணில்லாதவனாய்க் கற்பித்துவிட்டான் போலும்! உன் நிலைமையைக் கண்ணாலும் கண்டு சகிக்க வேண்டுமோ? போதும்! நான் குருடனாய்ப் பிறந்ததே ஏற்புடைத்து, எல்லாம் ஈசன் செயல் என்றும் வினைப்பயன் என்றும் எண்ணியிருக்கவேண்டுமே யல்லாது நம்மால் என்ன செய்யமுடியும்? அன்பா! மனம் தேறியிரு. நான் உனக்குக் காயத்தால் ஏதும் உபகாரஞ் செய்ய இயலாதபடி இறைவன் செய்துவிட்டதைப் பற்றியே வருந்துகின்றேன்" என்னும் இத்தகைய இன்மொழி இயம்பி இரங்கும் இயல்பின் கண் நிறைந்து நிற்கும் பரோபகாரமும், பகவத் கிருபையால் யாதொரு அங்கஹீனமு மற்ற ஏழையொருவன், துன்புறும் அவனிடம் சென்று, மனமுவந்த இன்மொழி கூறி அவனைத் தேற்றித் தன் சிற்றுணவில் அவனுக்கும் சிறிது தந்து அவன் பசிப்பிணியையும் மனோவேதனையையும் தன்னால் இயன்றவரையில் போக்குமுகத்தால் வெளியாகும் பரோபகாரமும், அவன் அருளால் அஷ்டைச்வர்யங்களும் அடையப் பெற்று அதற்கேற்பக் கனிந்த மனமும் உடையான் செல்வ வந்தனொருவன் அத்துன்பக்கடற்றோணியிடம் போந்து, பலவாற்றால் இன்மொழி கூறி அவனைத் தேற்றித் தனதில்லங் கொண்டு சென்று அன்போடு ஆயுளளவும் ஆதரித்து அணங்ககற்றும் அன்புப்பெருக்கால் தோன்றும் பரோபகாரமும்—ஆகிய இப் பல்வேறு விதமான பரோபகாரச் செயல்களும், தமக்குள் நிலையாலும் அளவாலும் ஒன்றற்கொன்று வேறுபட்டனவே யன்றித் தாத்பர்யத்தால்—உண்மைப் பொருளால்—உயர்ந்த தன்மையால்—எவ்வாற்றானும் வேறுபட்டனவே யல்ல என்பதைத் தெளிவாகக் கூறலாம்.

இன்னும், "*Hate sin; but love the sinner*" என்னும் பழமொழிக்கிணங்க, நாம் பாவத்தை வெறுத்தல் அவசியம்; ஆனால், முற்பிறப்பில் தீவினை செய்தவொருவன் அதன் பயனாய் இப்பிறப்பில் பல்வேறு விதத்தால் பாபாத்மாவாகவோ, குஷ்ட முதலிய கொடிய தொத்து வியாதிகளால் வருந்துபவனாகவோ காணப்படினும், நாம் அவனை வெறுக்காது அவன் நிலைக்கு இரங்கி, நற்கருமங்கள் செய்ய அவனுக்குப் போதிப்பது மன்றி, எவ்விதத்திலும் அவன் துயரைக் களைவதற்கான முயற்சியில் முற்படவேண்டுவதும் அவசியம்.

மேலும், பரோபகாரத்தை மக்களிடையேதான் பூண்டொழுகவேண்டுமென்னும் நியதியல்ல. ஒரு தந்தையின் நியாயமான நோக்கு முறையால் தனயர்களனைவரும் எவ்வாறு சமமோ, அவ்வாறே, எல்லாம் வல்ல இறைவன் கண்ணோக்கால் சமநிலை படைத்த ஓரறிவு ஆதியாக ஆறறிவு ஈறாக ஏற்பட்ட எல்லாச் சீவராசிகளிடத்தும், அவசியம் நேரிடுங் காலத்தில், இக்காரியத்தைக் கைக்கொள்ளுதல் கடன். வண்டியில் பூட்டப்பட்டு ஓடுங்கால் இடறி விழுந்து, காலிலோ, தேகத்தின் மற்றைய உறுப்புக்களிலோ காயம்பட்டுத் தவிக்கும் நாற்கால் பிராணியின் விஷயத்திலும், பசியால் கதறித் தவிக்கும் கன்று அல்லது

நல்லறத் துணைவன் எல்லாருக்கும் உறவோன்.

பசு விஷயத்திலும், தன் தாயைக் காணாது தவிக்கும் இளங்கன்று விஷயத்திலும், அவ்வவற்றுக்கும் அவ்வச் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப உதவி செய்வதும் பெருமை பொருந்திய பரோபகாரமே யாகும். இத்தகைய பரோபகாரமும் எந்நிலையானும் எத்துணையும் தாழ்ந்ததல்ல. சுருங்கக் கூறின், பிறர் இன்னலுறுங்கால், சக்திக்கேற்ப, மனம் பொருந்திச் செய்யும் எத்தகைய உதவியும், அளவால் சிறிதாயினும், பொருளால் பெரிது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. எனவே, பரோபகாரத்தைப் பாராட்டி யொழுகுதல் யாவர்க்கும் இயன்ற தொன்றே யாகும். திருந்தினர் தொழுதேத்தும் திருவுடைத் திருமூலனார் திருவாக்கின்படி

"யாவர்க்கு மாமிறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாமுண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே"

பரோபகாரஞ் செய்ய முற்படுவோர், தம் பெருமைப் பணியால் தாம் எய்தும் இன்பத்துக்கும் மன நெகிழ்ச்சிக்கும் அளவுண்டோ! "நாம் பிறர்க்குச் சிறிதளவேனும் உபகாரஞ் செய்ய ஈசன் பிரமேயம் படைத்தருளினரோ" என்னும் உயர்ந்த எண்ணம் அன்னோரை உற்சாகப்படுத்துகின்றது.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு"

என்னும் மொழியை கருத்துட் கொள்கின்றனர். தற்காலத்திய "சாரணர் இயக்கம்" என்னும் ஸ்தாபனத்தின் கருத்தும் இதுவேயாம். பரோபகாரம் இம்மையில் இன்பமும் மனவமைதியும், மறுமையில் புகழ்வீடும் பயத்தலால், புவியின்கண் இதனினும் இனிய பொருள் உளதோ!

சிலர், பிரதிபலனை எதிர்பார்த்துப் பரோபகாரஞ் செய்யத் தலைப்படுவர். வேறு சிலர் இம்மைப் பேரும் புகழும் கருதி, முழுமனதுடன் கலவாத பரோபகாரஞ் செய்வர். அவை உண்மை யுபகாரத்தின்பாற் படா.

செல்வமகளும் அதற்கேற்பச் சிறப்புடைச் செம்மை மனமும் சேர்ந்து பொருந்தியுள்ள பெரியோர் — புண்யவந்தர் — மிகுவராயின், பரோபகாரமாகிய சிறந்த தருமம் மிகும் என்று கூறுவது மிகையாது. ஆயினும், உலக நிலையை உற்று நோக்குங்கால், இத்தகையாளர்களின் தொகை அருகியே தோன்றுகிறது. செல்வச் சீமான்கள் சிலர் செல்வத்தால் செருக்குற்று, பரோபகாரம் போன்ற உயர்ந்த பொருட்களின் உண்மைப் பெருமையைப் பாராது, இப்பணியை மேற்கொள்ளுதல் தமக்கு இழிவெனக் கருதி வீணாகக் காலங் கழிக்கின்றனர். கன்மனதுடைய இன்னோரின் மதியீனம்தான் என்னே! பிறர் துயர் கண்டு கரையாத இத்தகையோரை, "அசையும் கற்கள்" எனச் செப்புதல் சாலவும் சிறக்கும்.

இன்னுஞ் சிலர் துன்பக் கடலில் தவிப்போரைக் கண்டவுடன் நகைமுகங்காட்டி—தேறுதல் மொழி கூறுகின்றனரா? அல்ல,—ஏளனமாக நகைக்

ஈயாச் செல்வம் நோயா யழியும்.



கின்றனர். அதில் ஓர் உவகை. இத்தகையோர், இப் பிறவியிலேயே நீள் நரக மெய்துவர் என்பது அனுபவத்திலேதான் தெரியவேண்டும்.

விசித்திரமான விலாசமுடைய வேறொரு வகுப்பாரும் உளர். இவர்கள், துன்பத்தால் துயருழக்கும் தௌர்பாக்கியர்களைக் கண்ணால் காண நேரிடவேண்டுவதுதான் தாமதம்—உடனே, சினநகை செய்து, நாகம்போல் சீறி, மேகம்போல் முழங்கி, புலிபோல் பாய்ந்து அவர்களுக்கு இன்னல் விளைப்பார்கள். தம் இலக்கிற்பட்டவர் குருடர், முடவர் என்றும் பாரார்; பின்னடையாது பிடித்துத் தள்ளிப் போராண்மையோடு நிற்பர். அந்தோ! இதற்கு இலக்காவோர் கதி என்னே! என்னே!! இடையறா இன்னலேயாம் இம்மையிலும் மறுமையிலும்!!!

இன்னோர் ஏழைகட்குப் பொருளால் உபகாரம் செய்யத் தம் சக்தி அல்லது மனம் இடங்கொடாவிடினும், காயத்தால் புரியத் தம் காயம் வளையாவிடினும்,

"அகனமர்ந் தீதலி னன்றே; முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின்"

"சிறுமையு ணீங்கிய வின்சொல் மறுமையு
மிம்மையு மின்பந் தரும்"

"துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும்; யார்மாட்டு
மின்புறூஉ மின்சொ லவர்க்கு"

என்பதுபோன்ற பொன்னனைய பொய்யா மொழிகளைப் போற்றவுமா பின்னடைய வேண்டும்? பேசிடின் பவளவாய் முத்துச் சிந்திவிடுமா? இத்தகையோர் ஊமைச் சன்மமே எடுப்பர்.

இவ்வாறு மனத்தானும் வாக்கானும் காயத்தானும் உதவி செய்யாவிடினும்,

"நரி வலப்புறமிருந்து இடப்புறம் போனால் நற்சகுனமா; அல்லது இடப்புறமிருந்து வலப்புறம் போனால் நற்சகுனமா?" என்று பிறந்த வினாவுக்கு, "எந்தப்புறமிருந்து போனாலும் போகட்டும்; மேலே விழுந்து பிடுங்காமலிருந்தால் போதும்" என்றெழுந்த விடையேபோல் இன்னோர், கண்பெற்ற தௌர்ப்பாக்யத்தின் காரணமாக, துன்புறுவோர் நிலையை அகஸ்மாத்தாய்க் காணநேரிடினும், நன்மையும் செய்யாமல் தீமையும் செய்யாமல் வாளா விலகிவிட்டாலும் போதுமே!

இன்னோர், இது விஷயத்தில்,

"எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானா
மாணா செய் யாமை தலை"

என்னும் திருவாக்கையாயினும் தலைமேற்கொண்டு விலகலாகாதா!

மேற்கூறிய மூன்றுதிறத்தாரும் மறு பிறப்பில் ஒருகால் மானிடராய்த்

வேற்றுமை யின்றி இயற்றுதல் ஈகை.

தோன்றிடினும், வறுமை, கூன், குருடு, முடம், நொண்டி, ஊமைத்தன்மை முதலிய பாக்யங்களையே பெறுவர் என்பதில் ஐயமில்லை.

பிறர் எய்தும் இன்னலைக் காணவோ கேள்விப்படவோ நேருங்கால், இயற்கையில் மனமிளகி, பயனை எதிர்பாராது, தம்மாலியன்ற சிறிதளவேனும், மனம் வாக்கு காயம் அல்லது பொருள் ஆகியவற்றால் உதவி செய்வோர் உத்தமப் பரோபகாரிகளாவர்; பயனை எதிர்பார்த்துச் செய்வோர் மத்திமராவர்; ஏற்ற சாதனங்களிருந்தும், இளகிய மனமும் பரோபகாரச் சிந்தனையுமற்று, செல்வச் செருக்கால், வாளாவிருப்போர் அதமராவர், எள்ள நகை நகைத்துப் பல்லைக் காட்டுவோர் அதமாதமராவர்; இயம்பவொண்ணாத இன்னல் இழைப்போர் விலங்கினத்தினும் கடையரோ யாவர்.

இதுகாறும் கூறியவாற்றால், பரோபகாரச் சிந்தனையானது, மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவரிடமும் அமையவேண்டுவது அத்யாவசியமென்பதும், அது சிறந்த மனோற்சாகத்தைத் தரத்தக்கதென்பதும், அதுவே வீட்டுக்கு வழிகாட்டி யென்பதும், அஃதில்லாதவர் கல்லோடொப்ப நோக்கத்தக்கவரென்பதும், இவற்றைச் சார்ந்த பிறவும் நன்கு தெளியப்பட்டன. பிறர் துயரங்கண்டு மனமுருகாதோர், தாம் துன்பமுற நேருங்கால் பிறரிடமாகத் தினையளவேனும் உபகாரம் எதிர்பார்க்க முடியாதாகையாலும், அகிலத்தை அடக்கியாளும் ஆண்டவன் அருளொளிக்கு அணுவளவேனும் அருகராக முடியாதாகையாலும், பெருமையொடு போற்றற்பாலதாகிய இப்பெருஞ் செல்வத்தை மானிடராய்ப் பிறந்துள்ள நாமெல்லோரும் போற்றிப் பாராட்டி இம்மையில் இணையிலா இன்பமும், மறுமையில் முடிவிலா நன்னிலையும் எய்தி மகிழ்வோமாக. எல்லாம்வல்ல இறைவன் இது விஷயத்தில் நமக்கு நல்லறிவும் நன்மனமும் நல்கிக் கருணை பாலிப்பானாக.

"அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை; யிருள் சேர்ந்த
இன்னா வுலகம் புகல்."


## உங்களைத் தேடிவந்தால்

தமிழ் மக்களுக்கு ஆனந்தங் கொடுப்பதையே தன் முதற் பெருங் கடமையாகக் கொண்டுள்ள "ஆனந்தபோதினி" உங்களைத் தேடிவந்தால் ஏதோ வழி தவறித் தெரியாமல் வந்துவிட்டதென்று நினைத்துவிடாதீர்கள். உங்கள் வாழ்க்கை நலத்தில் சிரத்தைகொண்டே உங்களைத் தேடி வருகிறது என்று நினையுங்கள். உங்கள் உதவி எல்லாம் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒரே ரூபாய்தான்.


"தாயும் தந்தையும்" நாம் முதலாவதாகக் காணும் தெய்வங்களாம்.

# தேவி இந்துமதி

(ஸ்ரீமான். எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்.)

பதின் மூன்றும் நூற்றாண்டின் இறுதியிலே இராஜபுதனத்திலுள்ள மத்திய பதியைப் பரிபாலித்து வந்த பார்த்திபன் பெயர் மகாராணா இலட்சுமணசிம்மன். அவனது பன்னிரண்டு மைந்தரில் அரசிம்மன் என்பான் இளவரசா யிருந்தனன். அவ் விளங்கோவினுக்கு வேட்டை யாடுவதில் அதிக விருப்பம் உண்டு. ஆதலின் அக் குமரன் தனது பாலிய வயதில் வாரந்தோறும் வேட்டையாடக் கானகம் போவான். அவ்வேளை அவனது துணைவரும் தோழரும் உடன்போவது வழக்கம்; வேட்டை நேரத்திலே முள்ளம் பன்றியைக் கண்டுவிடின், இராஜபுத்திரர் பரமானந்தங் கொள்வர். அப் பன்றியினை வேட்டை யாடுதல் மிகக் கடினம். அம் மிருகம் மகா மூர்க்கம் பொருந்தியது. ஆதலின் அதனை மடக்கி மாய்ப்பதில் அக்குலக் குமரர் தலைகால் தெரியாமல் முனைந்து நிற்பர்.

அரசிம்மனும் துணைவரும் வேட்டையாடச் சென்ற சமயம் மிகவும் பழுத்துக் கொழுத்த முள்ளம் பன்றி யொன்று தென்பட்டது. உடனே அவ் வாலிபர் அனைவரும் அதனை ஆர்வமுடன் துரத்திச் சென்றனர். ஆனால் அப் பன்றியோ மாரீச மானைப்போல் அவர்களை ஏமாற்றி அங்கும் இங்கும் ஓடி அல்லல் இழைத்தது. ஆனதுபற்றி அவ் விளைஞர் பெரிதும் களைத்துப் போயினர். என்றாலும் அன்னவர் தாம் கொண்ட கருத்தைக் கைவிட மனமின்றி, மீண்டும் அதனைத் துரத்திச் செல்லப் பின் வாங்கவில்லை. முடிவிலே அப் பன்றி ஆங்கிருந்த அழகிய சோளக் கொல்லை யொன்றில் புகுந்து பதுங்கிக் கொண்டது. ஊராரின் தோட்டத்திலே உத்தரவின்றி உள்ளே புக அரசிம்மனும் அவன் துணைவரும் துணிவு கொள்ளவில்லை. ஆதலின் அக் கொல்லைக்கு வெளியே மனவாட்டத்துடன் அவர்கள் காத்து நிற்கலானார்கள்.

அத் தோட்டமோ மிக்க செழுமை கொண்டது. ஒவ்வோர் சோளத் தண்டும் ஓர் ஆள் உயரத்திற்கு மேலும் ஓங்கி வளர்ந்திருந்தது. முன்னாளிலே வள்ளியம்மை தினைப்புனத்தி லிருந்து ஆலோலம் பாடிப் பட்சி ஜாலங்களை ஓட்டி நின்றதுபோல், பதினாலு வயது மங்கை யொருத்தி அக் கொல்லையிலே பரண் மீதிருந்து கொண்டு, கையிலே கவணும் கல்லுந் தாங்கிக் குருவிகளை

"தாயினு மரிய தெய்வமில்லை" என்பது பெரியோர் வாக்கு. சிலர் மறந்து சேஷ்டை செய்கிறார்கள்.

ஓட்டி நின்றனள். முள்ளம் பன்றி யொன்று அப் புனத்தில் வந்து புகுந்ததையும், அதனைத் துரத்தி வந்த வாலிபர் வேசாறிப்போய் வெளியே நிற்பதையும் அப் பெண்ணரசி கூர்ந்து உணர்ந்து கொண்டனள். அவ்வளவுதான் தாமதம். அவள் பன்னிரண்டு அடி நீண்டிருந்த சோளத் தண் டொன்றைப் பிடுங்கி, அதனை அம்புபோல் கூர்மைப் படுத்தி, அவ் வராகத்தைக் குறி பார்த்து வீசினள். உடனே அப்பன்றி அடி தாளாமல் அலறி வீழ்ந்தது தரையின்மீது. மங்கை அஃதுணர்ந்து, பன்றியை இழுத்துச் சென்று, இளைஞரின் முன்னே வீசி எறிந்து, "வாலிபர்காள்! நீங்கள் வெருட்டிவந்த விலங்கு இதுதானே?" என்று குறுநகையுடன் கூறிப் போயினள்.

தம் குல மங்கையரின் வீரச் செயல்களை அன்னோர் அறிவாராயினும், அந் நங்கையின் வீரச்செயலும் வார்த்தையும் அவர்களை மயங்கச் செய்துவிட்டன. பின்னர் அவ் விளைஞர் பன்றியைத் தூக்கிச் சென்று, ஓர் ஆற்றங்கரையை அடைந்து, அதனை ஆங்கே சமைத்துப் புசித்தனர். புசிக்குங் காலையில், அவ் வீரமாதின் மாலை பெறுவோனே பாக்கியவான் என அவர்களுக்குள் பேச்சு நிகழ்ந்தது. அப்போது உண்டை வில்லொன்று வேகமாக வந்து தாக்கவே, அரசிளங்கோவின் உயரிய பரிமா பொத்தென்று கீழே விழுந்து மாண்டது. உடனே உண்டைவில் வந்த திசையை வியப்புடன் உற்று நோக்குகையில், அப்பெண்ணரசியின் பரணி லிருந்தே வந்திருக்க வேண்டும் என அவ் விளைஞர் உணர்ந்து கொண்டனர். தான் வீசிய உண்டை வில்லால் இராஜபுத்திரனது அசுவம் காலைப் பரப்பிக் கொண்டு கீழே வீழ்ந்ததைக் கண்ட அக் காரிகை விரைந்து வந்து, "சோதரர்காள்! விளையாட்டாக எய்த உண்டையில் உங்கள் பாய்மாவின் ஆவியைக் கவர்ந்து விட்டது. இதற்கு மிகவும் வருந்துகின்றேன்" என்று கூறிப் போயினள்.

அப்பால் மாலைப் பொழுதிலே அம் மங்கையர்க்கரசி வீடு திரும்ப, வாலிபரும் இளவரசும் சித்தூர் நோக்கிப் புறப்பட்டனர். தலையில் தயிர்க் குடமும் கையில் இரண்டு எருமையும் தாங்கி, அத்தையல் முன்னே செல்லலானாள். அது கண்டதும், "இவளோ பெண்பால்; நாமோ ஆண் மக்கள். இப்பாவை நல்லாள் நம் அனைவரையும் தனது தோள் வலியால் பரிபவங் கண்டனள். இருமுறை நம்மை அவமானமுஞ் செய்து விட்டாள். நாமும் விளையாட்டாக இவளுக்குப் புத்தி புகட்ட வேண்டும்" என்று அவ் விளைஞர் பேசிக் கொண்டே போயினர். உடனே அவ் வாலிபரில் ஒருவன், "நண்பர்காள்! அம் மாதுக்குப் புத்தி புகட்டுதல் ஒரு பொருட் டன்று. அம் மங்கையின் பால் பானை கீழே விழும் வண்ணம் கணப் பொழுதில் யான் செய்து விடுவேன். ஏட்டிக்குப் போட்டியான அச் செயல் கண்டு நீவிர் நெஞ்சங் களித்து

---

ஈயம், வெள்ளி, செம்பு, தங்கம் இவைகளுக்கு எவ்வளவு வித்தியாசமுண்டோ அப்படியே மக்களிடத்திலும் அதிக வித்தியாசமுண்டு.



ஆறுதல் அடைந்து அரண்மனை செல்லலாம்" என்றனன். ஏனையோர், "அது ஆகாத காரியம்," என்றனர். சூளுரைத்த சிறுவனோ தனது பரியைத் தட்டி விட்டு, அப் பெண்ணைக் கீழே தள்ளுவான்போல் வெகு வேகமாகப் போயினன். பரிமா பாய்ந்து செல்லும் விசையால், அப் பெண்பால் பர பரப்படைந்து, பால் பானையைக் கீழே போட்டு விடுவாள் என்று பலரும் கருதியிருந்தனர். அவ்வாறே பாய்மாவும் மயிரிழை தூரத்தில் அம் மங்கையை நெருங்கிய சமயம் அவள் சற்றே ஒதுங்கிக் கொடுத்து, எருமையின் தலைக் கயிற்றை நீட்டிக் குதிரையின் காலில் மாட்டி வலித்தனள். அவ் வளவில் அசுவம் குப்புறச் சாயவே, சீறிவந்த வாலிபனும் மண்ணைக் கவ்வினன்.

மைந்தர் அனைவரும் அதுகண்டு மூன்றாவது முறையும் அப் பெண்பாலிடம் வெட்கிப் போயினர். அரசிம்மன் தனது மாளிகை சேர்ந்ததும், உண்டியிலும், உறக்கத்திலும் கருத்துச் செலுத்தாமல், "அவ் வீரமாது யாவர் மகள்? அவளை எங்ஙனம் மணந்து மகிழ்வது?" என்றே இரவு முழுவதும் சிந்தனை கொண்டு கிடந்தனன். பொழுது புலர்ந்ததும் புலம் விசாரிக்கவே, அவள் ஓர் ஏழை இராஜபுத்திரனது இனிய மகள் எனப் புலப்பட்டது. அக்கணமே அரசிம்மன் தன் துணைவருடன் அவ் வேழையின் வீடு சேர்ந்தனன். வறியவனோ அவ் விளைஞரை வரவேற்று ஆசீர்வதித்து, வந்த கருமம் யாதெனை வினவினன். விரும்பி வந்த காரியம் இன்னதென ஒருவன் உணர்த்தவே, ஏழை, அரசிம்மனது முகப் பொலிவை உய்த்து நோக்கி, "அப்பனே! நீ அரசிளஞ் சிங்கமோ?" என்று கேட்டனன். ஆம் என்று உரைத்தனர் அருகே யிருந்த அன்பர். மங்கையின் மனக்கோளை மதித் தறிந்து மறுதினம் பதில் அனுப்புவதாகச் செப்பினன் அவ்வறியவன். அரசிம்மனும் துணைவரும் முக வாட்டத்துடன் வீடு சென்றனர். மங்கை மனம் ஒப்புவளோ அல்லது மறுப்பளோ என்ற ஐயுறவு அவர்களை அன்றிர வெல்லாம் பிடித் தாட்டியது.

அரசிம்மன் அவ்விரவிலே மூர்ச்சை யிரவினும் பன் மடங்கு சிந்தாகுலங் கொண்டு கிடந்தனன். அஃதறிந்த அமைச்சன் அடுத்தநாள் காலையில் அவ் வேழையை வருவித்து மணம் பேசினான். ஏழையும் இந்துமதியும் சம்மதிக்கவே, நல் முகூர்த்தம் ஒன்றில் அரசிம்மனுக்கும் இந்துமதிக்கும் மணவினை நடந்தேறிற்று. நாளடைவில் அவ் விருவருக்கும் ஓர் ஆண் மகவு பிறக்க, அதற்கு அமரசிம்மன் என நாமம் சூட்டினர். அமரசிம்மன் அரியணை ஏறு முன்னர் மத்தியபதியின் பெரும்பாகம் அல்லாவுதீன் கையில் சிக்குண்டு சீரழிந்து கிடந்தது. அதனை அமரசிம்மன் மீட்டு, அறுபத்து நான்கு ஆண்டு காறும் ஆண்மையுடன் மத்தியபதியில் அரசு செலுத்தினன். அவன் காலத்தில் அயலக வேந்தர் அனைவரும் அமரசிம்மனையே குலத் தலைவனெனக் கொண்டு வாழ்ந்து வந்தனர். அம் மத்தியபதியை ஆண்டிருந்த அரசரிலே மிகச் சிறந்தவர்களில் அமரசிம்மன் ஒருவன். அவனது வீரம் விளங்காத இடம் இல்லை. தாயைப்போல் பிள்ளை, நூலைப்போல் சேலை என்னும் பழமொழி பொய்க்குமோ?

"ஆமை புகுந்த வீடு பாழாம்" என்பது பழமொழி. சீராமை மிகவும் சாதுவான ஜந்து அது புகுந்த வீடு பாழாகக் காரண மிராது—"பொறாமை புகுந்த வீடு பாழாம்" என்பது பொருந்தும்.

---

எத்தனை யேனும் நகை இனிதே.

# மனோ சக்தி.

(ஜகதீச குமார சர்மா)

## அத்தியாயம் 2.

### வாழ்க்கை வலை எனுங் கொள்கை

**பா**லிற் பிரையென பிரகிருதி சாஸ்திரத்தில் பரவிக் காண்கின்ற முக்கியமான கொள்கைகளில் ஒன்று டார்வின் சாஸ்திரியார் வெளியிட்ட வாழ்க்கை வலை என்பதேயாம். வாழ்க்கை வலை என்பதினால் அந்தச் சாஸ்திரியார் கொண்ட கருத்தாவது, ஒவ்வொரு பிராணியின் ஜீவிய வளையமும் மற்றப் பிராணிகளின் ஜீவிய வளையங்களை ஊடறுக்கின்றன என்பதேயாம். இவ்வுலகில் எதுவும் தன்மட்டிலேயே வாழ்ந்து மரிப்பதில்லை. பல வேறான ஜீவராசிகளின் ஜீவிய நூல்கள் வலைபோல பின்னப்பட்டுள்ளன. பல இடங்களில் அந்நூல்கள் சிக்குப்பட்டுக் கட்டுண்டு கிடக்கின்றன. பின்னோர் அதிகாரத்தில் நாம் பார்க்கப் போகின்றபடி, தேனீக்களும் மலர்களும் கையும் உறையும் போலவும் மலரும் நார் மணமும் போலவும் தொடர்புடையனவாகக் காணலாம்.

மிஸல் எனும் பெயருடைய குருவி யினமொன்றுளது. அவ் வினத்தைச் சார்ந்த குருவிகள் தமக்கு உணவாகிய பழங்களைத் தரும் ஒருவகையான புல்லுருவியை ஆப்பிள் மரக் கிளைகளிலும் ஓக் மரக் கிளைகளிலும் பயிர் செய்கின்றன. அப் புல்லுருவிக்கு "மிஸல் டோ" எனப் பெயர். எறும்புகளில் ஓரினத்தைச் சார்ந்தவை தமக்கு உணவாகிய ஒருவகையான புல் மணியை விதைத்துப் பயிர் செய்கின்றன. மின்னோ என்றொரு வகையான சுத்த ஜல மீன் சுத்த ஜலத்தில் விருத்தியாகிற மஸ்ஸல் என்னும் ஒருவகைப் பிராணியைக் காப்பாற்றுதற் பொருட்டு ஜலத்தில் அபிவிருத்தி யடையும் கொசுகின் புழுக்களையும் கூட்டுப் புழுக்களையும் நாசம் செய்கின்றன. மின்னோ தன்னலமாய் அதனைச் செய்த போதிலும், அதனால் மஸ்ஸலுக்கும் மூன்றாம்படியாக மனிதனுக்கும் நன்மை புரிகின்றது. கடற்கரை யோரமாகவும் கடலின் மீதும் பறந்து திரிந்து மீன்களையே இரையாகக் கொள்ளும் ஒருவகைப் பறவைகள் உள. அவற்றின் பாதங்கள் வாத்து அன்னம் இவற்றின் பாதங்களைப்போல் அமைந்திருக்கும். அதனை உதரப் பறவை என்று கூறலாம். ஆங்கில பாஷையில் அதனை கல் என்று கூறுவர். உதரப் பறவைகளின் இனத்தில் திருட்டு உதரப் பறவை என்றொரு வகையுண்டு. அதே இனத்தில், அசரை மீனை வேட்டையாடும் உதரப் பறவைகள் என்றொரு வகை உண்டு. அவற்றை அசரை மீன் கொத்திப் பறவை என்று கூறுவோம். திருட்டு உதரப் பறவை அசரை மீன் கொத்திப் பறவைகள் பிடிக்கும் அசரை மீன்களை அடித்துப் பறித்துத் தின்று விடும். அசரை மீன் கொத்திகள் பிடித்துத் தின்கின்ற அசரை மீன்கள் ஓடுடைய சங்கு முதலிய மீன்களைத் தின்னும்



ஓட்டு மீன்கள் கடலில் மலிந்த அணுப் பூச்சிகளையும் கடற் பாசிகளையும் உண்டு வாழும். உலகில் எவ்விடத்தும், ஒரு உயிர் தன் னுணவிற்கு மற்றொரு உயிரைச் சார்ந்து பிழைக்கின்றதெனக் காண்போம். இவ்வாறு எல்லா வுயிர்களும் ஒன்றோ டொன்று சங்கிலிபோல தொடுக்கப்பட் டிருக்கின்றன. காட்லிவராயில் என்று ஒருவகையான மீ னெண்ணெய் ஆங்கில மருத்துவக் கடைகளில் விற்பனையாகி வருகின்றது. இந்த எண்ணெய் 'காட்' என்னும் மீனி லிருந்து எடுக்கப்படுகின்றது. காட் மீனின் ஈரலி லிருந்து அதனை வடிக்கின்றனர். அந்த எண்ணெய் க்ஷய ரோகத்திற்கும் இருமலுக்கும் சுவாசாசய இரத்தாசய சம்பந்தமான பல நோய்களுக்கும் மிகவும் சிறந்த மருந்தென ஆங்கில வைத்தியர்கள் கருதி வருகின்றனர். காட் எனும் மீன் ஒரு பவுன் நிறையுள்ள மாமிசத்தைத் தன்னுடலில் சேகரித்துக்கொள்ள பத்துப் பவுன் நிறையுள்ள சங்குப் பூச்சிகளைத் தின்ன வேண்டும். ஒரு பவுன் நிறையுள்ள சங்குப் பூச்சி மாமிசம் உண்டாக மெத்தென்ற மாமிசக் கட்டியான அப் பூச்சிகள் பத்து பவுன் நிறையுள்ள கடற் புழுக்களைப் புசிக்கவேண்டும். ஒரு பவுன் நிறையுள்ள புழுக்களின் இறைச்சி யகப்பட அப் புழுக்கள் கடற் குழம்பை யாக்குகின்ற அணுத் தன்மையான பூச்சிகளையும், சிற்றறைகளா லாகிய கட்புலனுக் ககப்படாத பூச்சிகளையும் ஜீவாணுக்களையும் பத்துப் பவுன் நிறையளவு உண்ண வேண்டும். அவ்வா றாயின் பசியினால் வருந்துகின்ற மனிதன் ஒரு பவுன் நிறையுள்ள காட் மீனிறைச்சியை உண்ணும் பொழுது அவன் கடலின் ஆழத்திலுள்ள ஜீவாணுக்களை ஆயிரம் பவுன் நிறையளவு உண்கின்றான். அவன் உண்கின்ற ஒரு பவுன் காட் மீனிறைச்சி 1000 பவுன் கடல் ஜீவாணுக்களின் மாறுபட்ட முடிவே யன்றிப் பிறிதன்று. நாம் விலங்கினங்க ளுடைய பல்வகையான உணவுப் பொருள்களைக் குறித்துப் பேசும் பொழுது, இவ்வுலகி லுள்ள உயிர் வகைகளின் பலவகையான கதியினைப் பல வுதாரணங்களின் வாயிலாய்க் காணலாகும்.

இப்பொழுது நாம் ஜீவியத் தொடர்பை விளக்கிக் கொள்ள இன்னுமொரு விசேஷித்த உதாரணம் கவனித்தாற் போதுமானது. நாம் இதனை த்ருசம்பந்தம் அல்லது முத்தொடர்பு என்போம்.

### முத்தொடர்பின் கதை

அகத்தி அவரை காராமணி முதலிய செடிகளில் பூக்கள் அமைப்பில் ஒரே மாதிரி யாதல் பற்றி இவை மூன்றும் ஒரு குடும்பத்தினவாம். இ குடும்பத்தின் பெயர் "லெகுமினோஸே" லெகுமினோஸேக் குடும்பம் மூன் வகுப்பாகப் பிரிவுபடும். அம்மூன்று வகுப்பினையும் முறையே "பெபில் யோனேஸியீ" என்றும், "ஸிஸால்பினியீ" என்றும், "மிமோஸியீ" என்று கூறுவர். இவற்றில் "பெபிலியோனேஸியீ" என்னும் குடும்பத்தில் அகத் தி லு கிலுப்பைக் காய்ச் செடி, சணல்நார்ச் செடி, வெந்தயம், அவி காவாடை, சடை, குந்துமணி, கலியாண முருங்கை, பயறு, உளுந்த காராமணி, புங்கன், அவரை, துவரை, தமட்டன் முதலிய பல தருக்க அடங்கியவை யாகும். இக் குடும்பத்தைச் சார்ந்த ஆங்கில மரம் ஒன்றுள அதன் பெயர் லாபர்னம். லாபர்னத்தின் இனத்தைச் சார்ந்த டாக்கிகாலிய என்னும் பெயருடைய மரங்கள் பிரிட்டிஷ் கயானாவில் இருக்கின்றன. டாக் காலியா எனும் தருக்கள் இருவகையாக வளர்கின்றன. ஒன்று குறு செடியாகவும், மற்றொன்று வன்மரமாகவும் செழிக்கின்றன. அத் தருக்களி

இலைக் காம்புகள் நடுவு பருத் தூதியும் இரு கடைகள் சிறுத்தும் காணப்படுகின்றன. இலைக்காம்புகளி னுட்புறம் முதலில் இரசம் மிகுந்த சோற்றியினால் நிறைந்திருக்கும். ஆனால், வெகு விரைவில் அவற்றினுள் இருக்கும் சோற்றி உலர்ந்து போகின்றது. அப்பொழுது உள் பாகம் நெகிழ்ந்து தூவித் தன்மைத்தானதும் அம்பர் வண்ணமுடையதுமான உதியாக மாறிவிடுகின்றது. அந்த உதியில் சில உயிர்வகைகளுக்கு மிகவும் போஷிப்பான ஒருவகைப் பொருள் இருக்கின்றது. இந்த வசீகரமான இலைக் காம்பறையினுள் ஒரு இராணி எறும்பு நுழைய வழி யமைக்கின்றது. அது தன் அலகுகளால் இலைக் காம்பைத் துளைத்து உள்ளே நுழைந்து கொண்டு தான் உண்டுபண்ணிய வாசலை அடைத்து விடுகின்றது. அந்த இராணி எறும்பு இலைக் காம்பினுள் முட்டைகள் இட்டுப் பொரித்து, அம்பர் வண்ணமான உதியை ஊட்டித் தனக்குத் தேவையான பல வேலைக்கார எறும்புகளை வளர்க்கின்றது. வேலைக்கார எறும்புகள் வெகு விரைவில் இராணி எறும்பு அடைத்த வாசலைத் திறந்து கொண்டு இலைக் காம்பி னுள்ளும் வெளியும் சஞ்சரிக்க வாரம்பிக்கின்றன. முத்தொடர்பின் கதையில் இதுதான் முதல் அதிகாரம்.

வெகு விரைவில் நாளம்போன்ற இலைக் காம்பினுள் வேறொரு பிராணி குடி புகுகின்றது. இதுதான் எறும்பின் பசுக்கள் எனக் கருதப்படுகின்ற ஒருவகையான தீன்மூட்டுப் பூச்சி. எறும்புகளே இந்தத் தீன்மூட்டுப் பூச்சிகளைப் பிடித்துக்கொண்டு வருகின்றனவோ, அன்றி அவை தாமாகவே இலைக் காம்பினுள் குடி புகுகின்றனவோ என்ற வினாக்களுக்கு விடை தெரியவில்லை. எவ்வாறாயினும், அவையும் அந்த இலைக் காம்பினுள் குடிபுகுந்து அங்கு செழிப்பாகவுள்ள அம்பர் வண்ணமான உதியி லிருந்து கிடைக்கும் போஷக பதார்த்தத்தை உண்டு வாழ்கின்றன. ஒவ்வொரு இலைக் காம்பிலுள்ள உணவுப் பொருள் தீன் மூட்டுப் பூச்சிகளின் தேவைக்கு மிஞ்சியதாய் இருக்கின்றது. மிகுதியான உணவுப் பொருளை உண்டு எறும்புகளும் அதனுள்ளேயே வாழ்கின்றன. ஒரு இலைக் காம்பில் எல்லா எறும்புகளுக்கும் தீன்மூட்டுப் பூச்சிகளுக்கும் குடியிருக்க இடம் போதாவிட்டால், அவற்றிற் சில வேறு இலைக் காம்புகளில் குடி புகுகின்றன. ஒரே மரத்தில் பல இராணி எறும்புகள் எத்தகைய பகையுமின்றி சமாதானமாய் வாழ்கின்றன. தம்மினத்தைச் சாராத வேறு பிராணிகள் தங்கள் வாழ்விடத்தை யணுகினால், உடனே வேலைக்கார எறும்புகள், தம் வாழ்க்கையைச் சிதைக்க வருவது எது எனச் சீற்றத்தோடு வெளிப்பட்டுப் புதிதாய் வந்த வேறு பிராணிகளைத் தாக்கிக் கொன்றுவிடும். முத்தொடர்பின் கதையில் இதுதான் இரண்டாவது அத்தியாயம். இந்த அதிகாரத்தில் நாம் மூன்று கக்ஷிகளைப் பார்க்கிறோம். முதலாவது, டாக்கிகாலியா மரம்; இரண்டாவது, எறும்புகள்; மூன்றாவது தீன்மூட்டுப் பூச்சிகள். மரத்திற்கும் எறும்புகளுக்கும் தொடர்பை உண்டு பண்ணுவது தீன்மூட்டுப் பூச்சிகளேயாம். தீன்மூட்டுப் பூச்சிகளின் உதவியின்றி அம்பர் வண்ணமான உதியில் நிறைந்திருக்கும் சாரத்தைப் பிழிந்து உண்ண எறும்புகளா லியலாது. ஆதலால் தீன்மூட்டுப் பூச்சிகளே மரத்திற்கும் எறும்பிற்கும் உள்ள சம்பந்தத்தை உண்டு பண்ணுகின்றன. இனி இக் கதையின் மூன்றாவது அத்தியாயத்தை நோக்குவோம்.

(தொடரும்)

---

முயற்சித் திறத்தால் முடியாத தில்லை.

# திருநீலகண்ட நாயனார் மனைவியார்.

(ஸ்ரீமதி. அசலாம்பிகை அம்மையார்.)

தில்லையம் பதியாகிய சிதம்பரத்திலே வேட்கோவர் (மண்பாண்டம் வனைவோர்) குலத்திலே ஒரு நல்லார் இருந்தார். அவர் தேவர்களையும் பிறரையும் உயிர் கவரத்தோன்றிய ஆலகால விடத்தினை உண்டு கண்டத்தில் அடக்கிக் காத்தருளிய காரணத்தினால் திருநீல கண்டர் எனும் சிறப்புப் பெயர் வாய்ந்த பரசிவக் கடவுளினிடத்து அழுந்திய பத்தியுடையவராய்ச் சதா காலமும் திருநீலகண்டம் திருநீலகண்டம் எனும் திருப் பெயரினையே அன்பு மீதூர வழுத்தி வழுத்தி ஆரா அமுதுண்டவர் போல் அமைதியுறுவர். அன்றியும் தன தன்பின் பெருக்கினால் தன் குலத் தொழிலாகிய மட்கலம் வனைதலினும் ஈசனார் அடியார்கட்கு பிட்சாபாத்திரமாகிய அமுதேற்கும் திருவோடு வனைந்து இலவசமாக உதவிவருவார். 'எத்தொழில் செயினும், எந்நிலையுறினும் மனம் உண்டேல் வழி யுண்டு' என்பதற்கு இலக்கியமாகத் தம் மாவியன்ற சிவனடியார்கட்குத் திருவோடு அளிக்கும் திருத்தொண்டில் முட்டின்றி ஈடுபட்டு முக்கரண சுத்தியுடன் வழங்கியும் முகமனுரை கூறியும் வழிபட்டு இன்புற்றுவப்பார். அவர்தம் வாழ்க்கைத் துணைவியாராகிய தையலாரும் அச்செம்மொழியில் பெரும் பற்றுள்ளவராய்க் கணவனார் மன நிலைக்கேற்ப எல்லாம்வல்ல இறைவனார்பால ஆழ்ந்த பக்தியுடையவரா யொழுகினார். ஆதலின இவ்விருவர்களின் இல்லற மாண்பு சிவபக்தி என்னும் சிதையாத் தொடர்பினால் கட்டுண்டிருந்த தென்பது மிகையாகாது. ஆடவனுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்படவேண்டிய தொடர்பு கேவலமாகிய சிற்றின்பத்தினையே ஆதாரமாகக் கொண்டதல்ல வென்பதை உலகிற்கு விளக்கிக்காட்ட வேண்டிய அருள் நியதியும் நல்லூழும் ஒன்றுபட்டமையால் நமது மெய்யுணர்வுடைய நாயனார் ஓர் நாள் முன்னிரவில் நகருட் சென்று தன இல்லம் மீளும்போது இடையில் எதிர் பாராவண்ணம் இளமையின் ஆற்றல் மேம்பட்டு ஓரிடத்தில் இன்பத் துறையில் எளியராகிப் பின் இல்லம் நண்ணினார். இதனைக் குறிப்பினால் உணர்ந்த மனைவியார் கணவனார் பிழையை எண்ணிச் சின மிக உடையராகித் தமது வெறுப்பினை வெளிபிட்டார். மனைவியாரின் பிணக்கினை நயமொழிகளால் அகற்றி அவரை ஆற்றுவிக்க விரும்பிய கணவனார் இன்மொழி கூறி மனைவியார் அருகில் எய்தினர். அது கண்ட நாயகி தம் மன நிலையை வெளியிடத் துணிந்து நாயனார் தம்மைப்

---

ஊமைகளுக்கு நூலும், குருடர்களுக்குத் தீபமும், யாது பயனுஞ் செய்யாததுபோல அன்புடையவனுக்கு இடம், பொருள், ஏவலிருந்தும் அவனதனால் யாதுபயனுமடையான்.

பரிசியா தகலும்படி "திருநீலகண்டத்தின் மீது ஆணையாக எம்மைத் தொடாதீர்" என வன்மம் கூறித் தடுத்தனர். தம் உள்ளத்தினைக் கவர்ந்து இடையறாது இடம் பெற்றிருக்கும் திருநாமம் எதுவோ அதனையே சான்று கூறி என்னைத் தொடாதீர் என்றும் கூறாமல், எம்மைத் தொடாதீர் எனப் பன்மையாகவும் கூறியதனால் இனி எனது வாழ்நாளில் உரிய மனைவிபால் உடனுறை யின்பத்தினை ஒழிப்பது மட்டும் மன்றி உலகில் உள்ள எந்தப் பிற மாதரையும் மனதினாலும் தீண்டுவதில்லை என உள்ளத் துறுதிகூர்ந்து தம தெண்ணத்தை மறந்து தெளிவுகொண்டு விலகினர். இந்நிகழ்ச்சி கணவன் மனைவியாகிய இருவர்களின் தனிமையில் நேர்ந்த தொன்றென்பது வெளியுலகிற்கு வெள்ளிடையே எனினும் இவ்விருவர்களின் இடை நிகழ்ச்சிக்கும் தோன்றாத் துணையாகச் சான்று நின்றது எம்பெருமான் திருவருள் ஒன்றுள தென்பதை அவ்விருவரே யுணர்ந்தனர். ஆதல்பற்றி பேரின்பத்தினைத் தமக்களிக்கவல்ல இறைவன் திருப் பெயர் முன்னிலையில் தமக்குள் 'எழுந்த உறுதியைப் புறம் காட்டாது அகத்தடக்கி புன்னிலைக் காம இச்சையைக் களைந்து இல்லறக் கடமைகளை முறைப்படி யாற்றி உடனுறை யின்பம் தவிர்த்து, திருநீலகண்டத்தின் பால் இருவரும் கொண்ட ஒரு முகமாகிய பேரன்பில் முதிர்ந்த எண்ணம் உடையவர்களாய் குலத் தொழிலிலும் அடியார் திருப்பணியிலும் முட்டின்றி முயன்று வருவாராயினர்.

இவ்விருவர்களின் மன வுறுதியையும், தெய்வப் பற்றினையும், மன அமைதியையும், சத்திய மாண்பினையும், ஒன்று பட்ட உள்ள நிலையினையும் உலகினர்க்கு விளக்கமுற எடுத்துக்காட்ட இறைவன் திருவுளம் பற்றினர்.

இளமைப் பருவம் கடந்து முதுமை யெய்தியும் தம் உறுதி பிறழாத இப்பெரியார் பால் ஓர் நாள் இவர்தம் உள்ளங்கவர்ந்த ஒருதனிப் பெருமான் ஒரு விருத்த வேடங்கொண்டடைந்து அன்பனே நீ அடியார்கட்குத் திருவோடளிக்கும் திருப்பணியை அன்புடன் ஆற்றிவருவதாகக் கேட்டு மகிழ்ந்து உன்பால் வந்தோம். பலருக்கும் திருவோடளிக்கும் நீ என்பால் உள்ள ஒரு திருவோட்டினைப் பத்திரமாக வைத்துக் காத்து நான் வேண்டும்போது கொடுக்கும் ஓர் உதவியை உன்பால் வேண்டுகின்றேன். நான் கொடுக்கும் திருவோடு எக்காரணம் பற்றியும் கைசோரக் கூடாது. மூவுலகமும் ஒருவர் இதற்கு ஈடுகட்டுவதானாலும் அதை ஏற்கமாட்டோம். இதன் பெருமை அளவிட முடியாது. அதுபற்றியே பிறர்பால் வைத்துப் போற்றும்படி நம்பி அளிக்கத் துணியாது நும்பால் வந்தனம். இவ்வோட்டை அடைக்கலப் பொருளாக ஏற்றுச் சேமித்து வைத்து வேண்டிவந்து கேட்கும்போது அளிக்கமாட்டுவீரோ? என்று வினவினர். நாயனாரும் விருத்த வேடம் கொண்டுவந்த அடியாரைத் தலையால் வணங்கி அவ்வாறே செய்வேன் என உடன்பட்டு அவர் அளித்த ஒப்பு உவமையில்லாத திருவோட்டினைத் தாழ்ந்து வாங்கித் தம் இல்லத்தில் அமைத்து மிகப் பதனமான ஓரிடத்தில் அமைத்துச் சேமம் செய்திருந்தனர். திருவோடளித்த பெரியாரும் விடைபெற்றகன்றனர்.

இவ்வாறு சென்ற அருள்வேடத்தினர் பல ஆண்டுகள் கடந்த பின் மீண்டும் நமது திருநீலகண்ட நாயனார் பால் நண்ணி 'ஐய, நாம் முன்பு அடைக்கலமாகத் தந்துள்ள திருவோட்டினை நாடிவந்தோம் தருவீராக' எனக் கேட்





டனர். கள்ளமறியா உள்ளத்தினராகிய நாயனாரும் உடனே எழுந்து சென்று அத்திருவோட்டினை எடுத்துவந்து அடியார்பால் அளிக்க எண்ணிப் பதனம் பண்ணிவைத்த இடத்தில் நோக்க அஃதில்லாதது கண்டு அதிசயித்தவராய் தம் மனையில் எங்கெங்கு தேடியுங் காணாமல் திடுக்கிட்டு அது கரந்த காரணம் உணராமல் பெரியாரிடத்துச் சென்று யாது புகலுவதென்று கலங்கி நின்றனர். புறத்தேயிருந்த புனித வேடத்தினர் உட்சென்ற நாயனாரைக் காலந்தாழ்த்தலைப் பொறாதவர்போல் பன்முறை அழைத்தனர்.

அதுகேட்ட நாயனார் புறம்போந்து திருவோடு வைத்த இடத்திற் காணாமல் கரந்துள்ள மாயத்தினை உணர முடியாமையை எடுத்துரைத்து வணங்கி அதற்கீடாக யாது கேட்பினும் உதவுவேன் ஏற்றருளல் வேண்டுமெனத் தாழ்ந்தனர்.

அடியார் வடிவு கொண்டெய்திய அண்ணல் மிகக் கோபம் கொண்டவர் போல் நடித்து 'நீ தருமம் புரிபவனாக நடித்துவந்தது எனது விலைமதிக்க முடியாத திருவோட்டினை அபகரிப்பதற்குத் தானோ? அந்தோ! இவ்வஞ்சகம் அறியாதன்றோ முன்பளித்தேன்! வைத்த காலத்திலேயே அதற்கு மூன்றுலகமும் ஈடாகா என்றுரைத்தேன். அத்தகைய ஒப்புவமையில்லாத அடைக்கலப் பொருளை அபகரித்துக் கொண்டு அஞ்சாமல் முன்வந்து வைத்த இடத்தில் இல்லை யென்றும் வேறு வேண்டுவதை அளிப்பேன் எனவும் புகன்றனை. இவ்வநீதியை தில்லைவாழந்தணர் கூடிய நீதிமன்றத்தில் எடுத்துக் கூறுவேன்' எனக் கடுஞ்சொற் கூறி நாயனாரை உடன்வர அழைத்தனர். தூயவராகிய நாயனாரும் மனத்தினாலும் உணரவொண்ணா மாயம் இஃதென மதித்துத் தம் கடமையைக் கருதி அடியாருடன்சென்று அந்தணர் நீதிமன்றம் அடைந்தனர். அங்குள்ள அவையோர் முன்பு பெரியார் தமது அடைக்கலப் பொருளை வேட்கோவர் கவர்ந்தார் என முறையிட்டனர். அவர்களும் அவ்வழக்கில் இருவரின் வாய்மொழியுங் கேட்டு, திருநீலகண்ட நாயனாரை நோக்கி 'இவ்வடியார் நும்மிடம் அளித்ததாகச் சொல்லும் அடைக்கலப் பொருளை உண்டென நீரும் உரைக்கின்றீர். அது தேடியும் காணப்படவில்லை என்றும் கூறுகிறீர். ஆனால் அவர் கேட்கும் ஈடு வேறு எதுவாயினும் அளிப்பதாக இசைகின்றீரன்றோ' என வினவ ஆம் என விடை பகர்ந்தனர்.

அவையோர் அடியாரை நோக்கி 'ஐயரே, தமது திருவோடு வாங்கியது உண்மை. அது வைத்த விடத்தில் காணமுடியாமை பற்றி நீர் கேட்பதை அளிக்க அவர் தடைகூறவில்லை. அதற்கேற்ப நீர் உமது விருப்பத்தினை வெளியிட்டு ஈடுபெற வேண்டுவதே அறம்' என முடிவு கூறினர்.

அது கேட்ட அடியார் அங்ஙனமாயின் இவ்வேட்கோவர் நான் விரும்பும் தடாகத்தில் தம் காதல் மைந்தனொடும் மூழ்கி எனது திருவோட்டினைத் தாம் மனப்பூர்வமாக அபகரிக்கவில்லை என உறுதியளிக்க வேண்டும் என்று குறித்தனர். வழக்காராய்ந்த அந்தணர்களும் நீர் அவ்வாறே செய்தரும் என, வேட்கோவர் வணங்கி, வேதியர்களே, நான் அவ்வாறே உண்மை யுரைக்கத் தட்டில்லை. எனினும் அன்னார் விரும்புவதுபோல் எனக்கு உடன் கொண்டுவர மைந்தர்கள் இல்லையே யாது செய்வதெனக் கேட்க வந்த அடி

யார் அங்ஙனமாயின் இவர் தமது இல்லக் கிழத்தியையேனும் அழைத்து வந்து என் விருப்பப்படி உறுதிகூற வேண்டும் என்றனர். நாயனாரும் அதற்கிசைந்து தமதில்லம் சென்று மனைவியாரையும் உடன்கொண்டு போந்து அடியார் குறித்தபடி தில்லை அம்பலத்திற்கு மேற்புறத்தில் உள்ள தடாகத்தில் சென்று சூள் உரைக்க வேண்டி மூழ்க எத்தனிக்கையில், அடியார் வேடந் தாங்கிய எம்பெருமான் இவர் உரிய மனைவியாரைக் கைப்பற்றி மூழ்கியே சூள் உரைத்தல் வேண்டுமென வற்புறுத்தினர். அதுகேட்ட நாயனார் தாம் தமது மனைவியாரை—தங்களுக்குள் நெடுநாட்களுக்கு முன் ஏற்பட்ட ஓர் வெளியிட முடியாத உடன்படிக்கையை முன்னிட்டுத் தீண்ட முடியாதென்றும், தனித் தனி மூழ்கி உண்மை கூறுவதாகவும் தெரிவித்தனர். மான்வேடத்தர் இவர் கூற்றினைப் பிறர் எவரேனும் ஏற்க முடியுமோ? தம் கள்ளத்தை மெய்ப்பிக்கத் துணியாது இவ்வாறு கூறுகின்றனர். அளித்த திருவோட்டினையும் கொடாது, நீதிமன்றத்தினர் கூறிய தீர்ப்பின்படி மனைவி கையைப் பிடித்துத் தமது உண்மையை விளக்க நான் வேண்டியபடி உறுதி கூறவும் இசையாது ஏமாற்ற முயல்கின்றனர். இவ்வண்ணம் வஞ்சிப்பாரும் உண்டோ என முறையிட்டுக் கூக்குரலிட்டனர்.

நீதிமன்றத்தினரும் அவர் முறைப்பாடு உரியதேயென மதித்து வேட்கோவரை நோக்கி நீர் கொண்ட மனைவியைத் தீண்டமுடியாதெனக் கூறுதல் நீதியாகுமோ? என வினவ நாயனார் வேறு விதியின்றிப் பலரும் அறியத் தமக்கும் தமது மனைவிக்கும் நேர்ந்த சம்பவத்தினை எடுத்துக் கூறி அமரர் குலமுய்ய ஆலமுண்டருளிய திருநீலகண்டத்தின்மீது ஆணையிட்டுத் தீண்டுவதில்லையெனத் தம்முள் ஏற்பட்டுள்ள வாய்மையினின்றும் பிறழாது இதுகாறும் அயலறியாது பேணிவந்தமையும், இன்றும் அதற்கொப்பவே தாம் நடக்க முடியுமல்லது ஆணை கடக்க முடியாதெனவும் புகல நடுநிற்போர்களின் அநுமதிகொண்டு தண்டமொன்றின் இருகோடியையும் இருவரும் பற்றித் தடாகத்துள் மூழ்கி எழுந்தனர். எழுந்த இருவரும் தமக்குள் ஆணை நிகழ்ந்த அக்காலத்துள்ள கட்டிளமைப் பருவத்துடன் கண்டோர் அதிசயிக்கத் தோன்றியதுடன் அடியாராய்க் கரையின்மீதிருந்தவர் மறைந்து மழவிடைமேல் மங்கையோர் பாகத்திலங்க, கணநாதர் புடைசூழ, அன்பர் குழாம் என்புநெக்குருக எழுந்தருளி, காட்சியளித்து திருநீலகண்ட நாயனாரை நோக்கி "அன்ப, உனது உண்மைப் பத்திக்கு மெச்சி அதனை உலகுக்குணர்த்தி ஆட்கொண்டோம். தெய்வமாதிற் கிணையாகிய உத்தமியோடும் இவ்விளமைப் பருவத்தினோடும், எமது சிவலோக மெய்திப் பேரின்பத்தில் என்றும் திளைப்பீராக வென்று அருளி யுடன்கொண்டு ஆகாய வீதியில் மறைந்தருளினார். இது திருத்தொண்டத் தொகையின் சரித வரலாறு. அக்காரணம் பற்றி அத்தடாகத்திற்கு இளமையாக்கினார் தடாகமென்றும் இதன் அறிகுறியாகத் தாபனம் செய்யப்பட்ட அருட்குறிக்கு இளமையாக்கிய ஈசர் என்றும் திருநாமங்கள் இன்றும் வழங்கி வருகின்றன.

இவ்வதிசயத்தை உடனிருந்து கண்ட நீதிமன்றத்து வேதியரும், பிறரும் திகைப்பும் வியப்பும் உடையவர்களாய் மிகச் சாமானியராகத் தாம் கருதநின்ற திருநீலகண்ட நாயனாரின் நினைப்பதற்கும் அரிய பத்தியின் விசேடத்

உலக வாழ்வு நிலையற்றதென்று தெரிந்திருப்பதினாலே நிலைத்த முத்தி இன்பத்தைப் பெறுவதற் கேதுவாகிய அறத்தை விரைந்து செய்யவேண்டும்.



தினையும் அவர் மனைவியாரின் உறுதியையும் தெளிந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து புகழ்வாராயினர்.

இனி இச்சரித வரலாற்றினால் நாம் அறியக் கிடக்கும் பொருள்களைச் சிறிது ஆராய்வோம்.

முதலாவது தெய்வபக்தி மேலோங்கி வளர்வதற்கு அவரவர் மரபிற்குரிய எத்தொழிலும் தடையன்றென்பது.

இரண்டாவது பரோபகாரம் புரியும் எண்ணமுடையோர் எந்நிலையிலும் அதனைச் செய்தல் கூடும் என்பது.

மூன்றாவது மிருகவுணர்ச்சியால் எழும் காமம் அறிவுடைய மனிதரால் அடக்கி யாளக்கூடியதே என்பது.

நான்காவது இல்லறமென்பது ஆண் பெண் இருவர்களின் அன்பையும் ஒத்த உணர்வையும் சார்ந்து நிற்பதொன்றே யன்றி புன்மைக்காம இச்சையைத் தீர்த்துக் கொள்ளும் நோக்கத்தினையே அடிப்படையாகக் கொண்டதன்றென்பது.

ஐந்தாவது பெண்பாலார் ஒருவிடயத்தினையும் அயலறியாது அந்தரங்கமாக வைக்கக்கூடியவர்கள் அன்றெனும் உரை போலியே யன்றி உண்மையன்றென்பது

ஆறாவது பெண்பாலார் ஆண்பாலாரின் மனதை நிலைகலங்கச் செய்யும் இயல்புள்ளவர் எனப் பொருள் படும்படி இடைக்காலத்தினர் சிலர் தொடுத்து வைத்த கட்டுரைகள் யாவும் பொய்யுரைகளே யென்பதை இச்சரிதம் வலியுறுத்துவதென்பது

ஏழாவது "காமம் அகற்றிய தூயனடி சிவ, காம சுந்தரி நேயனடி" என அருட்பிரகாச வள்ளலார் அருளிச் செய்த பேருரை ஈண்டு ஆழ்ந்து சிந்திக்கத் தக்க உதாரணமென்பது.

எட்டாவது அக்காலத்தில் குறையுள்ளோர்கள் வழக்குரைக்க இலவச நீதி மன்றங்கள் நிலவியிருந்தமை குறிப்பிடத்தக்கதென்பது.

ஒன்பதாவது மனைவியைத் துறந்து காட்டுக் கோடுவதனால்தான் மனம் தூய்மைபெறு மென்பது தவறென்பது.

பத்தாவது எவ்வறமும் இல்வாழும் இரு தலைவர்களின் ஒருமையினால் முட்டின்றி முடிவு பெறுமன்றி ஒருவரை யொருவர் நிவர்த்திப்பதனால் இயலாதென்பது.

இத்தகைய பல குறிப்புகளும் இதனால் நாம் எளிது தேறக்கிடக்கின்றவைகளாம். பட்டினத்தடிகளாகிய முற்றத் துறந்த முனிவர் பெருமானும் இது பற்றியே "மாது சொன்ன—சூளால் இளமை துறக்க வல்லேன் அல்லேன்" என ஆற்றாவியப்புடன் சிறப்பித்தனர். பழம் புண்ணியத்தினால் அமைந்த இயற்கை யறிவிற்குக் கல்வி துணை செய்து அவ்வறிவை அலங்கரிப்பதாகும். அதுபற்றி ஆன்றோர் முறைப்படி அறஞ்செய்தல் நமது தலைக் கடமையாகும் என்பது தெளிவு. அறம் செய்யும் அளவிற்குப் பயன் குறியாமற் செய்தலே அறிவுடைமை யாகும்.

"ஈசன் எங்குமிருக்கிறான்" இதற்குச் சான்று பிரகலாதாழ்வார் சரித்திரமாகும்.




## " போகிறது! போகிறது!! போய்விட்டது!!!"

ஒருவன் ஆவேசத்தோடு ஒரு தெருவில் நின்று தன் கைகளை யாட்டிக் கொண்டு கூறுகிறான்:—"போய்விட்டது! போய்விட்டது!! போய்விட்டது!!!"

ஒரு கூட்டம் திரண்டுவிட்டது.



போய்விட்டது! போய்விட்டது!! போய்விட்டது!!!" என்று மறுபடியும் திரும்பத் திரும்பக் கத்தினன்.

ஒருவர் :—என்ன ஐயா போய்விட்டது? "உங்கள் பணம் ஏதேனும் காணமல் போய்விட்டதா?"

"இல்லை! பெண்டாட்டி போய்விட்டது" என்றான் இன்னொருவன் வேடிக்கையாக.

"இல்லை! இல்லை!! இல்லை!!!" ஆனல் அது போய்விட்டது.

ஐம்பது அறுபது பேர் என்ன என்ன என்று கேட்டும் பதில் வரவில்லை. கடைசியில் ஒருவன் அழுத்தமாய்ச் சத்தம் போட்டு "என்ன போய்விட்டது ஐயா" என்று கேட்டான்.

உடனே அந்த ஆவேசம் பிடித்த பேர்வழி சாந்தம் அடைந்து புன்முறுவலோடு கூறுகிறான் "நேற்றைய தினம் போய்விட்டது. இன்றைய தினம் போகிறது. நீங்கள் நாளைக்குச் சாகக்கூடும், உடனே காலத்தை வீணுக்காமல் எங்கள் இன்ஷியூரன்ஸ் கம்பெனியில் உங்கள் உயிரை இன்ஷியூர் செய்து கொள்ளுங்கள். தக்க லாபம். தாமதம் வேண்டாம்"

எல்லாருக்கும் கோபம் பொங்கிவிட்டது. உடனே எல்லோரும் கழுத்தைப் பிடித்துத் தள்ளி அப்புறப்படுத்தினர்கள்.

***

வாத்தியார்:—"மாணுக்கர்கள் சாதாரணமாய்ச சொல்லும் இரண்டு வார்த்தைகளைச் சொல் பார்க்கலாம்"

ஒரு மாணவன்:—"எனக்குத் தெரியாது"

வாத்தியார்:—"பலே பேஷ்! சரியாகவே சொல்லிவிட்டாயே"

---

"அவசரப்பட்டு யாரையும் அவமதித்துவிடாதே"



## "ஞாபகம் இல்லை"

பெரிய மறதிபடைத்த ஆசிரியர் ஒருவர் ஒரு ரயில்வே சிற்றுண்டிச் சாலையில் ஆகாரம் அருந்திய பிறகு வேலைக்காரன் கொண்டுவந்து கொடுத்த 'பில்'லுக்குப் பணங் கொடுத்துவிட்டுத் தமது கவனத்தை ஒரு புத்தகத்தில் ஆழ்த்திவிட்டார்.



உடனே அந்த வேலைக்காரன் மறுபடியும் அவரை அணுகி நடுங்கிக் கொண்டே இருமினன். ஆசிரியர் தலையெடுத்துப் பார்க்கவில்லை.

வேலைக்காரன்:—"சார் தயவு செய்து மன்னிக்க வேணும். தாங்கள் "பில்"லுக்குப் பணங் கொடுத்தபோது வேலைக்காரனுக்கு இனும் ஒன்றும் வைக்கவில்லையே?"

ஆசிரியர்:-(பார்க்காமலே மெல்லிய குரலில்) வைக்கவில்லையா? ஆனல் அது சாப்பிட்டதாக எனக்கு ஞாபகம் இல்லை."

***

## "எரிகிற தீயில் நெய் விடுதல்"

ஒரு வீட்டின் சமையல் அறைக் கதவு தடபுடலாகத் தட்டப்பட்டது. அந்த வீட்டுக்குரியவள் தட்டியது தன்பக்கத்து வீட்டுக்காரி என்று தெரிந்து கொண்டு அவளை அன்போடு வரவேற்கக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள். பக்கத்து வீட்டுக்காரி அசாத்தியமான கோபத்தோடு நிற்பதைக் கண்டாள்.

பக்கத்து வீட்டுக்காரி:—(ஒரு செங்கல்லை கையில் வைத்துக்கொண்டு) "இதோ உன் மகன் செய்த வேலையைப் பார். இந்தச் செங்கல்லை எறிந்து என் வீட்டு ஜன்னல் கண்ணாடியை உடைத்து விட்டான்."



வீட்டுக்காரி:—(சந்தோஷ ஒளி முகத்தில் ததும்ப) அம்மா! உண்மையில் இது வெகு சந்தோஷமான சமாச்சாரம்! நீங்கள் இந்தச் செங்கல்லை எனக்குக் கொடுக்க வேண்டும். நான் என் மகனுக்கு இப்பொழுது பிரியமாயிருக்கிற விளையாட்டுச் சாமான்களை யெல்லாம் ஒவ்வொன்றாகச் சேகரித்துக் கொண்டு வருகிறேன். தாங்கள் இந்தச் செங்கல்லைக் கொடுத்தால் இதையும் அவைகளோடு சேர்த்து விடுவேன். அவன் வளர்ந்து வாலிபனாகும் காலத்தில் இவைகளை எடுத்துப் பார்த்தானானால் எவ்வளவு சந்தோஷப்படுவான் தெரியுமா?

---

சமுத்திரமானது குளிர்ந்த சந்திரன் வருகை கண்டு பொங்குமல்லாது சூரியனால் பொங்காததுபோல, உயர்ந்தவர்கள் இன்சொல்லினால் அல்லாமல் வன்சொல்லினால் மகிழார்கள்.

"பரீக்ஷை"

ஒரு வழிப்போக்கன் நெடுநேரமாய்ப் பிரயாணம் செய்து கொண்டிருந்தான். வழியில் ஒருகிழவனாரைச் சந்தித்தான். அவன் அவரை அழைத்துக் கேட்கிறான்.



"ஐயா அடுத்த கிராமத்திற்கு இன்னும் எவ்வளவு நேரத்தில் போய்ச் சேரலாம்?"

கிழவனார் தமது வேலையிலேயே கவனமாயிருந்தார், ஒன்றும் பேசவும் இல்லை—பார்க்கவும் இல்லை. வழிப்போக்கன் போகத் தொடங்கிவிட்டான்.

அவன் அதிக தூரம் போகவில்லை. அதற்குள் "ஐயா! இங்கே திரும்பி வாருங்கள்" என்று ஒருசப்தம் கேட்டது, வழிப்போக்கன் திரும்பி வந்தான். அப்பொழுது கிழவனார் சொல்லுகிறார்.

"நீங்கள் அடுத்த கிராமத்திற்குப்போய்ச் சேர இருபது நிமிஷங்கள் பிடிக்கும்"

வழிப்போக்கன்:—"இதை நான் கேட்டபோதே நீங்கள் ஏன் சொல்லியிருக்கக் கூடாது?"

கிழவனார்:—"நீங்கள் எப்படி நடக்கக்கூடும் என்று எனக்கு எப்படித் தெரியும்?"

***

"அத்தர்"

பிள்ளையாண்டானுக்கு அத்தர் என்றால் என்ன என்று தெரியாது. ஆனால் பேர் மாத்திரம் கேட்டிருக்கிறான். அத்தர் வியாபாரி வரும்போதெல்லாம் "எனக்கு அத்தர் வாங்கிக்கொடு-கொடு" என்று தாயாரைப் பிடுங்கித் தின்றுகொண்டிருந்தான். அவளும் ஒரு நாள் அத்தர் வியாபாரியாகிய ஒரு சாஹிபை அழைத்துக் கையில் ஒரு பெரிய கொட்டாங்கச்சியைப் பிடித்து நீட்டிக்கொண்டு கேட்கிறாள்:




'ஐயா! பையன் அத்தர் வாங்கு, அத்தர் வாங்கு என்று என் பிராணனை அரிக்கிறான். ஒரு தம்பிடிக்கு இது நிறையும்படி அத்தர் போட்டுக் கொடுங்கள் பார்க்கலாம்."

---

இரண்டு கண்களும் ஒரு பொருளை நோக்கும்போது தம்முள் ஒத்து மாறுபடாது நோக்குந் தன்மைபோல, அன்புடைய மனைவியும் கணவனும் மனமொத்துச் செய்யுந் தருமமே மேன்மையுடையது.



"நானே செய்தேன்"

ஒரு கிராமப் பள்ளிக்கூடத்திற்குப் பரீக்ஷாதிகாரி விஜயம் செய்திருந்தார். அந்தப் பள்ளிக்கூட வாத்தியார் சிடுமூஞ்சித்தனமும் முரட்டுச் சுபாவமும் படைத்தவர்.



பரீக்ஷாதிகாரி இரக்கச் சித்தம் உடையவர். அவர் முகம் வெளுத்துப் போயிருந்த ஒரு சிறுவனைத் தம்மிடம் வருமாறு அழைத்தார். அன்று காலையில் வாங்கிய மிதமிஞ்சிய அடிகளால் அச்சிறுவன் விலவிலத்துப் போயிருந்தான்.

பரீக்ஷாதிகாரி:—"தம்பீ நம்முடைய—இந்த விசாலமான உலகத்தை யார் செய்தது? சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் எல்லாம் எவ்வளவு அற்புதமாய் அமைக்கப் பெற்றிருக்கின்றன! எங்கே—இவைகளை யெல்லாம் யார் செய்தது என்று சொல் பார்க்கலாம்?"

பையன் விம்மி விம்மி அழத்தொடங்கிக் கூறுகிறான்.

"நானே செய்தேன் சார். இனிமேல் எப்பொழுதும் நான் செய்ய மாட்டேன் சார்."

***

"ஜுர நிவர்த்தி."



ஒரு குடியானவன் தனது அரிவாள் வெய்யிலில் கிடந்து நன்கு காய்ந்து சூடேறிவிட்டபடியால்-அதைக் குளிரும்படி செய்யக் குளத்தில் தோய்த்து எடுத்தான். பக்கத்தில் இதைப் பார்த்துக்கொண்டிருந்த புத்திசாலி ஒருவன் சூடேறிய பதார்த்தங்களைக் குளிரும்படி செய்வதற்கு இதுதான் உபாயம் என்று தீர்மானித்துக் கொண்டான். ஒரு நாள் தனது வயது முதிர்ந்த தாயாருக்கு ஜுரம் கண்டிருந்தது. பாவம் அவன் மிகவும் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தான். இதைக் கண்ட அவன் மனம் சகிக்காமல் இரண்டு தோள்களிலும் கயிற்றை இறுகக் கட்டி ஒரு கிணற்றுக்குள் விட்டு எடுத்தான். ஜுரம் குளிர்ந்து—தாயார் விறைத்துக் கட்டையாகிவிட்டாள். வி. ரா.

---

வஞ்சகம் பேசுவது பிசகு; அங்ஙனம் நினைப்பதும் தவறு; அப்படி நினைத்துப் பேசிச் செய்கிறவர்களோடு சேர்ந்தாலென்ன? "சகுனியோடு கூடிய துரியோதனாதிகளே" இதற்குச் சான்றாம்.




# கிருஷ்ணஸிங் அல்லது துப்பறியும் சீடன்.

(318-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரணி-குப்புசாமி முதலியார்.

இவை யாவும் சொற்ப நேரத்தில் நடந்துவிட்டன. ஆனந்தஸிங் இப்போது இவன் யாரையோ கொல்லப்போகிறான் என்று தெரிந்து கொண்டான். யாரைக் கொல்லப்போகிறானென்று சிந்தித்தான்; சரியாய் விளங்கவில்லை. உடனே கிட்டுவின் மேல் பாய்ந்து செல்ல முயன்றான். ஆனால் அதற்குள் கிட்டு அறைக்குத் திரும்பிவந்து முனியனை நோக்கி என்னமோ கேட்டான்.

முனியன் தன் ஜேபியில் கையிட்டுப் பார்த்து ஒரு சிறு புட்டியை வெளியிலெடுத்தான்.

அதைக் கண்டதே ஆனந்தஸிங் "ஆ! மயக்க மருந்து. நமக்கு அவகாச மிருக்கிறது" என்று தனக்குத் தானே கூறிக்கொண்டான்.

ஆனந்தஸிங் உடனே ஒரு சாளரத்தில் ஏறி அதன் எழுதகத்தைப் பிடித்துக் குரங்குபோல் தொத்தியேறி மேல்மாடியிலிருந்த சாளரத்தில் நின்று அதன் கதவிலுள்ள இலைகளில் ஒன்றை நீக்கிப்பார்த்தான். உள்ளே இருள் மூடிக்கொண்டு நிர்ச்சந்தடியா யிருந்தது. பக்கத்தறை யதற்குப் பக்கத்தறை யாவும் பார்த்தான். ஒன்றும் சந்தடியே காணோம்.

வீட்டைச் சுற்றிக்கொண்டு பின் பக்கம் சென்று அங்கு மாடிமேலிருந்த சாளரங்களை யொவ்வொன்றாய்ப் பார்த்துக்கொண்டே சென்றான். கடைசி அறைவரையில் ஒன்றையும் காணோம். கடைசி சாளரத்தில் ஒரு இலையை நீக்கியதே பளிச்சென்று தீபவொளி அவன் கண்களில் வீசியதும், தான் தேடி வந்த ஆளை யங்குக்கண்டான். இதுகாறும் க்ஷேமமாகவே யிருக்கிறாளென் றறிந்தவரையில் சற்றுச் சந்தோஷ மடைந்தான். அச்சமயம் கற்பகம் அங்கிருந்த ஒரு பீரோவைப் பலங்கொண்டு நெக்கி மூடியிருக்கும் கதவிற்கு முட்டு கொடுக்க முயன்றுகொண்டிருக்கிறாள்.

ஆனந்தஸிங் வுடனே சங்கதி இன்னதெனத் தெரிந்துகொண்டு ஒரு நொடியில் தன்னிடமிருந்த ஒரு கத்தியால் சாளரத்தின் உள் தாழ்ப்பாளைத் திறந்து துரிதமாய் சாளரக் கதவைத் திறந்து, "கற்பகம் கர்பகம்" என்று கூப்பிட்டான்.

---

"நுண்ணிய கருமமும் எண்ணித் துணி" சிறு காரியமும் எண்ணிச் செய்யவேண்டும். அநுமார் வாலில் பந்தங் கொளுத்திய ராவணன் நடந்து கொண்ட விதமாக நடந்துவிடாதே.



அச்சமயம் கதவு மும்முரமாய்த் தட்டப்பட்ட சத்தத்தால் அவன் கூறியது கற்பகத்தின் செவிகளில் கேட்கவில்லை. கடைசியில் கதவு திறந்து கொள்ளவும், பீரோ அப்புறம் தள்ளப்பட்டதும் கிட்டு மிக்க ஆவேசத்தோடு கையில் ஓங்கிப்பிடித்த கத்தியோடு அந்த நிராதரவான கன்னிகையின்மேல் பாய்ந்தான். குள்ளனும் அவன் கூடவிருந்தான்.

ஆனந்தஸிங் இருகரங்களிலும் இரண்டு துப்பாக்கிகளைப் பிடித்து நீட்டிக் கொண்டு சிங்க கர்ச்சனைபோல் "நில்லுங்கள். அசைய வேண்டாம். ஒரு அங்குலம் நகர்ந்தால் உடனே பிணங்களாவீர்கள்" என்று கூவினான்.

கள்ளர் இருவரும் திடுக்கிட்டு திகிற்பட்டு அப்படியே நின்றுவிட்டார்கள். ஆனந்தஸிங் "கற்பகம் இங்கே ஓடிவந்துவிடு!" என்றான். உடனே அவள் ஒரு சந்தோஷக் கூச்சலோடு ஒரே பாய்ச்சலில் பாய்ந்து வந்து சாளரக் கம்பிகளுக்கிடையில் கரங்களை விட்டு அவனைப் பற்றிக்கொண்டாள்.

ஆனந்த:—"இருவரும் பூமியில் உடனே படுங்கள்; இன்றேல் சுட்டுவிட்டேன்" என்றான்.

குள்ளன் உடனே படுத்துக்கொண்டான். அப்போதுதான் அன்று முனியன் ஆனந்தஸிங் சொன்னபடி யெப்படிக் கீழ்ப்படிந்து நடந்தான் என்று குள்ளன் மனதிற்பட்டது. குரலால் அவனே யிவன் என்று தெரிந்து கொண்டான்.

கிட்டுவும் படுத்துக்கொண்டான். ஆனால் சற்று நிதானத்தோடு செய்தான். ஏனெனில் அவன் யோசனை யுடையவன். ஆகையால் இந்த இக்கட்டிலிருந்து எப்படி தப்புவதென்று தனக்குள் ஆலோசனை செய்துகொண்டிருந்தான்.

ஆனந்:—"நீங்களிருவரும் கவிழ்ந்து படுத்துக்கொண்டு கைகளைப் பின் பக்கம் வைத்துக்கொள்ளுங்கள்" என்றான்.

ஆனந்தஸிங் கற்பகத்தை நோக்கி, "இந்தா! இந்த விலங்குகளை யவர்கள் இருவர் கரங்களுக்கும் பின்பக்கமே போடு. செய்வாயா?" என்றான்.

கற்பகம்:—"ஆகா! செய்வேன்" என்றாள்.

ஆனந்தஸிங்:—"பத்திரம் நீ என் நேர்முகமாய் நிற்காதே. அவர்கள் சற்று அசைந்தால் சுட்டுவிடுவேன்" என்றான்.

கற்பகம் அவன் கூறியவாறே சென்று ஒரு பக்கமாய் நின்று கிட்டுவின் கரங்களில் விலங்கை மாட்டப் போனாள். அச்சமயம் ஆனந்தஸிங் ஏதோ கூச்சலிட்டதைக்கேட்டுத் திரும்பினாள். ஆனந்தஸிங் முகத்தைக் காணோம். அவன் கரங்கள் மட்டும் சாளரத்தின் இரும்புக்கம்பிகளைப் பிடித்துக்கொண்டிருந்தன.

ஆனந்தஸிங் கற்பகம் தான் சொன்னபடியே கள்ளர்க்கு விலங்கிட முயல்வதைக்கண்டு சந்தோஷமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தான். அச்சமயம் திடீலென்று தன் கால்கள் தட்டப்பட்டனபோல் அல்லது இழுக்கப்பட்டன போல் தோன்றியது. அவன் உடனே சாளரக் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு மறுபடி யேலேற முயன்றான்.

---

"பொய்மையைத் தள்ளி மெய்யைத் தழுவு" அரிச்சந்திரன் தன் தாரம் மைந்தன் முதலியவர்களை யிழந்தும் பொய் பேசினானில்லை அதினால் அவன் பெயர் இன்றும் மங்கா திருக்கின்றது.

அச்சமயம் யாரோ அவன் தலைமே லடித்ததுபோ லிருந்தது. சற்று நேரம் தியங்கி விட்டான்; அவன் கரங்கள் நழுகிவிட்டன; உடனே பூமியில் வீழ்ந்தான்.

அதே நிமிடம் கற்பகம் "அய்யோ உதவி உதவி. அவர்களை விடவேண்டாம்" என்று கூவுவது அவன் செவிகளில் வீழ்ந்தது. அவன் தடுமாறி எழுந்திருப்பதற்குள் மறுபடி தலைமேலடி விழுந்தது. ஆயினும் அவன் துணிகரத்தோடு துள்ளி யெழுந்து அடித்தவன் யாரென்று சுற்று முற்றும் பார்த்தான். ஒருவனையும் காணோம்.

உடனே ஆனந்தஸிங் சட்டென்று மறுபடியேறி கற்பகம் இருக்கும் சாளரத்தில் பார்த்தான். அங்கு யாருமில்லை. இருள் சூழ்ந்திருந்தது. அவன் அங்கிருந்தே "கற்பகம் கற்பகம்!" என்று கூவினான்.

தூரத்தில் யாரோ கேலியாய் நகைக்கும் சத்தம் கேட்டது. ஆனந்தஸிங் உடனே கீழிறங்கித் தெருவாசற்படி யருகில் சென்றான். எங்கும் ஒரு சந்தடியு மில்லை. திடீலென்று வீடுமுழுமையும் இருள் மூடிக்கொண்டு நிர்ச்சந்தடியாய் சுடுகாடுபோல் ஆய்விட்டது.

"அவர்கள் என்ன செய்தார்கள். ஒருவேளை கற்பகத்தைக் கொன்றுவிட்டு ஓடிவிட்டார்களோ?" என்று சிந்தித்துப் பற்களை நெறநெறவென்று கடித்து, "இவர்கள் மட்டும் அவளைக்கொன்றிருக்கட்டும், கேட்போர் நெஞ்சம் துடிக்கும்படி வஞ்சம் தீர்த்துக்கொள்ளாவிட்டால் நான் கிருஷ்ணஸிங் புத்திரனல்ல" என்று சபதம் செய்துகொண்டான்.

சற்று சிந்தித்துப் பிறகு வீடுமுழுமையும் சோதனை செய்வதே சரியென்று தீர்மானித்துக்கொண்டான். அப்படிப்பட்ட கொடிய கொலையாளிகள் இருக்கும் வீட்டிற்குள் தனியாய்ச் செல்வது எவ்வளவு அபாயகரமானதென்று அவன் நன்று யறிவான். மேலும் தான் முன்பின் பார்க்காததும் அனேகம் கள்ளவழிகளையும் மறைவிடங்களையும் உடைத்தா யிருக்கக்கூடிய வீட்டில் தனியே பிரவேசித்தால் மிக்க சுலபமாய்ப் பிராணனுக்கே ஆபத்து நேரிடக்கூடுமென்றும் அவன் நன்கறிவான்.

ஆயினும் பேசாமல் வெளியிலிருந்து காத்துக்கொண்டிருக்க அவன் மனம் பிடிக்கவில்லை. ஆதலால் உடனே எழுதகத்தைப் பிடித்தேறி முதல் தோன்றிய சாளரத்தைத் திறந்தான். ஆனால் ஜாக்கிரதையோடு யாராவது சுட்டால் குண்டு தன்மேல் படாதபடி சாளரத்தின் ஒரு பக்கத்திலேயே நின்றான்.

ஆனந்தஸிங் தன் இராந்தலை யெடுத்து ஏற்றி தீபவொளியை அறைக்குள் காட்டிப் பார்த்தான். அறையில் ஒருவருமில்லை. உடனே சந்தடி செய்யாமல் அறைக்குள் குதித்துப் பார்த்தான். அறையின் கதவு மூடப்பட்டிருந்தது. ஆனால் பூட்டப்பட்டில்லை.

அத்தகைய சந்தர்ப்பத்தில் அந்தப் பெரிய வீட்டில் எந்த விடத்திலும் சென்று சோதனை செய்வதென்றால் எவ்வளவோ துணிகரமும் தைரியமும் உடைத்தாயிருக்கவேண்டும். ஆனந்தஸிங் துணிகரத்தோடு அந்த அறையின் கதவைத் திறந்து தன் இராந்தலை யணைத்துவிட்டு சோதிக்க வெளியில் புறப்பட்டான். ஆனால் ஒவ்வொரு நிமிடமும் கற்பகத்தின் சவம் தன் காலில் தட்டுப்படுமோ அல்லது யாராவது திடீலென்று தன்னைப் பின்பக்கமிருந்து





கத்தியால் குத்துவார்களோ அல்லது துப்பாக்கியாற் சுட்டுவிடுவார்களோ வென்று எதிர் பார்த்துக்கொண்டு மிக்க ஜாக்கிரதையோடேயே சென்றான்.

ஒவ்வொரு அறையையும் சந்து பொந்துகளையும் சுவரைக் கையால் தடவிக்கொண்டே பார்த்துக்கொண்டு சென்றான். எங்கும் மனுஷர் வாசனையே யில்லை. பிறகு கம்பிகளையுடைய சாளரம் இருக்கும் அறைக்குள் மிக்க ஜாக்கிரதையோடு சென்றான். அங்கு கற்பகமாவது, அவள் சவமாவது ஒன்றுமில்லை. கள்ளர்கள் ஓடிவிட்டார்களென்றும் கறபகம் கொல்லப்படவில்லை யென்றும் அவன் மனதிற்பட்டது. அவர்கள் ஓடிவிட்ட வரையில் இச்சமயம் நம் கைக்கு எட்டாத தூரம் போய்விட் டிருப்பார்கள். கற்பகம் கொல்லப்படாத வரையில் அவளை யெப்படியாவது மீட்டுவிடலாம் என்று அவனுக்குள் தைரிய முண்டாயிற்று. எதற்கும் இங்கு காத்துப் பார்ப்போம் என்று கள்ளர்கூடிப்பேசிய அறைக்குள் சென்று ஒரு ஆசனத்தில் உட்கார்ந்தான்.

## 18-வது அத்தியாயம

ஆனந்தஸிங் உட்கார்ந்த சற்று நேரத்திற்குள் வீட்டின் எதிரிலிருக்கும் பாதை வழியாய் ஒரு ஆள் வருவதுபோல் சத்தம் கேட்டது. இரண்டொரு நிமிடங்களில் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. ஆனால் அப்படித் தட்டுவதில் முன்னே ஒன்றின்பின் ஒன்றாய்த் துரிதமாய் இரண்டுதரம் தட்டிப் பின்பு ஒரு நிமிடம் கழித்து ஒருதரம் தட்டும் சத்தம் கேட்டது.

ஆனந்தஸிங் "ஓகோ இது முன்னாடி ஏற்படுத்திக்கொண்ட சமிக்கை. இவன் பிச்சனாகவே யிருக்கவேண்டும்" என்று கருதினான்.

உண்மையில் அவன் பிச்சனே. முதல் தட்டியதற்கு விடை யில்லாமற் போகவே அவன் கோபமடைந்து மறுபடி முரட்டுத்தனமாய் காலால் கதவை அச் சமிக்கைப்படியே கெட்டியாய் உதைத்தான். அதற்கும் பதில் இல்லை.

ஆனந்தஸிங்:—ஒன்று வீட்டில் ஒருவருமில்லை. அல்லது, இவர்கள் உள்ளே யிருந்துகொண்டே பயத்தால் கதவைத் திறக்காம லிருக்க வேண்டும் என்று சிந்தித்துக் கொண்டான்.

பிச்சன் மிக்க கோபமடைந்து, ஆத்திரத்தோடு, "ஏன் உங்களுக்குக் காது கேட்கவில்லையா? நான்தான் பிச்சன். வேறு யாருமில்லை. உடனே கதவைத் திறவுங்கள். இன்றேல் கதவை யுடைத்து விடுவேன்" என்று கூவினான். சத்தமே யில்லை. அதற்குள் அவன் உதைத்த உதைகளால் கதவு திறந்து கொண்டது.

அவன் உள்ளே இரண்டடி எடுத்து வைத்ததும், எங்கும் இருள்மூடிக் கொண்டு நிர்ச்சந்தடியா யிருப்பதைக் கண்டதே, வாயில் வந்தபடி சபித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியில் புறப்பட்டான். ஆனந்தஸிங் அவனைப் பின்தொடர்ந்து சென்றான்.

பிச்சன் இரண்டு மூன்று வீதிகளைக் கடந்து, அங்கிருந்த இரயில் ஸ்டேஷனுக்குச் சென்று நாற்பத்திரண்டாவது ஸ்டேஷனுக்கு டிக்கட் வாங்கிக் கொண்டு வண்டியில் ஏறினான்.

ஆனந்தஸிங் அவனைப் பின்பற்றிச் சென்று கொண்டே, தன் உடைகளைத் திருப்பி யணிந்து வேறு மாறுவேட மணிந்துகொண்டு அதே இரயி

வில் தானும் ஏறிக்கொண்டு சென்றான். இரயிலை விட்டிறங்கியதே தான் நினைத்தபடியே பிச்சன் 43-வது வீதியில் திரும்பினான். ஆனந்தலிங் தன்னிடமிருந்த கடற்பஞ்சில் மயக்க மருந்தை யூற்றி ஆயத்தமாய் வைத்துக் கொண்டான்.

பிச்சனுக்குக் கள்ளர் சென்றிருக்கும் வீடு நன்றாய்த் தெரியுமாதலால் தங்கு தடையின்றி நேராய் அவ் வீட்டிற்குச் சென்று படிகளில் ஏறினான். அவன் பாதி படிகள் ஏறுவதற்குள் ஆனந்தலிங்,

"பிச்சா! பிச்சா! சீக்கிரம் திரும்பி வா! சீக்கிரம்' என்றான்.

பிச்சன்:—"ஏன் நான் திரும்பி வரவேண்டும்? முதலாவது நீ யார்?" என்று மெதுவாய்க் கூறிக்கொண்டே இரண்டு மூன்று படிகள் திரும்பி வந்தான்.

ஆனந்தலிங் முனியன் குரல்போல் அபிநயித்துக்கொண்டு,

"சீக்கிரம் வா! நான் யாரா யாவது இருக்கட்டும். நீ சங்கதியை யறிய வேண்டும். குள்ளன் எல்லா சங்கதியையும் வெளியிட்டு விட்டான். போலீஸார் அந்த விடத்தில் நம்மேல் பாய்ந்து வந்து விட்டார்கள். நாங்கள் இரகசிய வழியாய்த் தப்பி வந்து விட்டோம். போலீஸார் இவ் வீட்டின்மேல் கண் வைத்துக்கொண்டிருந்தார்கள்போல் தெரிகிறது. கிட்டுவையும் மங்கம்மாளையும் பிடித்துக் கொண்டார்கள்" என்றான்.

பிச்சன் வீட்டைவிட்டு வந்து ஆனந்தலிங்கோடு வீதியில் நடந்து கொண்டே "நீ யெப்படி தப்பித்துக்கொண்டு வந்து விட்டாய்?" என்றான்.

ஆனந்தலிங் வீதியின் முன்னும் பின்னும் பார்த்துக் கொண்டே,

"நானா? ஏன் நான் ......" என்றதும் தான் ஆயத்தமாய் வைத்திருந்த கடற்பஞ்சை கையில் எடுத்துக்கொண்டு ஒரு கரத்தால் பிச்சன் கழுத்தைப் பிடித்துக் கொண்டு இன்னொரு கரத்தால் அப் பஞ்சை அவன் மூக்கிலும் வாயிலும் வைத்து அழுத்தினான்.

பிச்சன் இரண்டொரு நிமிடங்களில் மரம்போல் விழுந்து விட்டான். ஆனந்தலிங் அவனைத் தூக்கிப் பாதை யோரத்தில் கிடத்தி "நீ கூப்பிடப் படுகிற வரையில் இங்கேயே கிட" என்று கூறி வழியில் போகும் ஜனங்கள் பார்க்கும்படியான விடத்தில் விட்டுச் சென்றான்.

ஆனந்தலிங் கருதியபடியே சற்று நேரத்திற்குள் அவ்வீதியில் காவலிருக்கும் போலீஸ்காரன் அவ்வழியே வந்தான். பூராய்க் குடித்துச் சவம் போற் கிடக்கும் பிச்சன் தேகத்தைப் போலீஸ்காரன் கண்டதும், பிறகு நடந்த நடவடிக்கைகளையும் ஆனந்தலிங் தூரத்தி லிருந்தபடி பார்த்துக் கொண்டே யிருந்தான்.

போலீஸ்காரன் "டே! எழுந்திரு எழுந்திரு!" என்று பலதரம் கூவியும் பிச்சன் வாய்திறக்கா திருக்கவே, வழியில் செல்லும் ஒருவனைத் துணை கொண்டு போலீஸ்காரன் பிச்சனைத் தூக்கிக்கொண்டு போய்விட்டான்.

---

சிறு துரும்புகளை மாத்திரம் சுழற்காற்று ஆட்டிவைக்குமல்லால் கற்பாறை இரும்புகளை சுழற்ற இயலாததுபோல, உலக மாயை மூடரை மாத்திரம் ஆட்டுவிக்குமல்லால் நொந்துபட்டு நோவெடுத்த உலகானுபவம் தெரிந்தவர்களை ஆட்டிவைக்காது.




**கைதிகளுக்கு சுகாதார போதனை:-** இங்கிலாந்து தேசத்தின் பெரிய சிறைகளில் பிற்காலத்தில் மிகவும் பயன்படத்தக்க முறையில் நல்ல உபாயத்தை அனுஷ்டித்து வருகின்றனர். பொதுஜன சுகாதார சங்கத்தார் சிறை அதிகாரிகளின் அனுமதிபெற்று சிறையிலுள்ள கைதிகளுக்குச் சுகாதார சம்பந்தமான விஷயங்களைப் போதிக்கின்றனர். அப்போதைக் கப்போது போட்டிப் பரீட்சைகளும் வைத்து தேறியவர்களுக்குப் பணத்தைச் சன்மானம் செய்து வருகின்றனர். இதனால் கைதிகள் சுகாதார விஷயங்களை அறிவதோடு பெருந்தொகையையும் பெறுவதால் அவர்களுடைய பிற்கால வாழ்க்கைக்கும் சௌகரியமாக இருக்கின்றது. பிரபல வைத்திய நிபுணர்கள் உபதேசிக்கும் வேலையில் ஈடுபட் டிருக்கின்றனர். கைதிகள் பாடங்களைக் கேட்பதில் அதிக உற்சாகமுடன் இருந்து வருகின்றனர்.

***

**சதா வளரும் சுபாவமுடைய மாது:-** மனிதர்களுக்கு 21 வயது ஆகிவிட்டால் அவர்களுடைய எலும்புகள் நீளமாகாமல் நின்று விடுகிறதென்றும் ஆதலின் 21 வயதில் எவ்வளவு உயரமாக இருப்பார்களோ அப்படியே ஆயுள் முழுதும் இருப்பார்களென்றும் வைத்தியர் கூறுகின்றனர். ஆனால் சமீபத்தில் ஒரு மாது 30 வயதாகியும் இன்னமும் உயரமாக வளர்ந்து கொண்டே இருப்பதாகத் தெரிகிறது. அம்மாது ஆறு வாரம் காயலாவாய் இருந்து பிறகு சொஸ்த மடைந்த போது பார்த்ததில் முன்பு இருந்ததைவிட ஒன்றரை அங்குலம் உயரமானதாகத் தெரிந்தது. சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர் பார்த்தபோது மற்றும் அரை அங்குலம் உயரம் தெரிந்தது. இவ்வாறு வளர்வதைக் கண்டு வைத்திய சாஸ்திரிகளும் ஆச்சர்யப்படுகின்றனர்.

***

**பழங் கணக்குப் பார்த்த பசித்தவன்:**—பசித்தவன் பழங் கணக்குப் பார்த்ததுபோல என்னும் பழமொழி உண்டு. அது ஒருவர் விஷயத்தில் உண்மையாகவே முடிந்தது. சமீபத்தில் பிரிட்டிஷ் கொலம்பியாவைச் சேர்ந்த குனோவர்டேல் என்னும் ஊரில் ஸ்ரீ. எஸ். கன்னிங்ஹாம் என்பவர் பசித்தபோது பழங் கணக்குப் பார்த்ததில் தனக்குத் தெரியாமல் தன் பெற்றோர்கள் ஒரு சுரங்கக் கம்பெனியில் 1800 பவுன் பெறுமான பங்குகளை வாங்கியிருப்பதை அறிந்து கொண்டார். பிறகு அவ் வுரிமையைப் பெற்று இன்பம் அனுபவிக்கலானார்.

***

**65 வருஷ கால காதலர் விவாகம்:-** இங்கிலாந்தைச் சேர்ந்த வோக்கிங்குக்கு அருகிலுள்ள ஹார்செல் என்னுமிடத்தில் சுமார் 85 வயதுள்ள மிஸ். கிரேஸ் ராலண்ட்ஸ் என்னும் மாதுக்கும் சுமார் 87 வயதுள்ள ஸ்ரீ. சார்லஸ் பினான்க் போர்ட் என்பவருக்கும் சமீபத்தில் விவாகம் நடைபெற்றது. அவர்களிருவரும் சுமார் 65 வருஷங்களாகப் பரஸ்பரம் காதலித்து வந்தார்களாம்.

## " ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்.

பிரமோதூதஹு மார்கழிமீ—கலியுகாதி 5032, சாலிவாகனம் 1853,
பசலி 1340, கொல்லமாண்டு 1106, ஹிஜரி 1349,
இங்கிலீஷ் 1930ஹு டிசம்பர்மீ—1931ஹு ஜனவரிமீ

| மார்கழிமீ | டிசம்பர்மீ | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | செவ் | ஏகா 4-58 | சுவா 37-23 | சி 37-23 மா | சர்வ, மத்வ ஏகாதசி |
| 2 | 17 | புதன் | து 2-48 | விசா 37-10 | சித் 60 | பிரதோஷம், கதிரறுக்க |
| 3 | 18 | வியா | திர 1-15 | அனு 37-43 | சி 37-43 பி | மாச சிவராத்திரி |
| 4 | 19 | வெ | ச ● 0-43 | கே 39-10 | ம 39-10 அ | சர்வத்திர அமாவாசை, 10-க்குள் மழை |
| 5 | 20 | சனி | அமா 1-3 | மூல 41-45 | சித் 60 | |
| 6 | 21 | ஞா | பிர 2-40 | பூரா 44-5 | சித் 44-5 அ | |
| 7 | 22 | திங் | துதி 5-33 | உத் 50-15 | ம 50-15 அ | |
| 8 | 23 | செவ் | திரி 9-33 | திரு 56-23 | சித் 60 | |
| 9 | 24 | புத | சது 14-45 | அவி 60 | பிர 60 | |
| 10 | 25 | வியா | பஞ் 20-58 | அவி 3-25 | சி 3-25 மா | |
| 11 | 26 | வெ | சஷ் 27-40 | சத 11-0 | சித் 60 | |
| 12 | 27 | சனி | சப் 34-15 | பூர 18-45 | மா 18-45 சி | |
| 13 | 28 | ஞா | அஷ் 40-0 | உத் 25-53 | அமி 60 | |
| 14 | 29 | திங் | நவ 44-20 | ரே 31-48 | சித் 60 | |
| 15 | 30 | செவ் | தச 46-53 | அஸ் 36-0 | சித் 60 | வியாதியஸ்தர் குளிக்க |
| 16 | 31 | புத | ஏகா 47-20 | பர 38-13 | சி 38-13 அ | வைகுண்ட ஏகாதசி, சர்வ, மத்வ ஏகாதசி |
| 17 | 1 | வியா | து 45-50 | கி ✕ 37-58 | மா 60 | கிருத்திகை, கூர்ம துவாதசி |
| 18 | 2 | வெ | திர 42-5 | ரோ 36-35 | மா 36-35 சி | பிரதோஷம் [ய |
| 19 | 3 | சனி | சது 36-48 | மிரு 33-10 | சித் 60 | யாத்திரை பிரயாணம் செய் |
| 20 | 4 | ஞா | ○ 30-13 | திரு 28-20 | சித் 60 | பௌர்ணமி, ஆருத்திரா தரிசனம் [ந்தி |
| 21 | 5 | திங் | பிர 22-50 | புன 22-38 | அ 22-38 சி | புஷ்யபகுளம், பரசுராம ஜய |
| 22 | 6 | செவ் | துதி 15-0 | பூச 16-35 | சித் 60 | வியாதியஸ்தர் குளிக்க |
| 23 | 7 | புதன் | திரி 7-8 சது 59-33 | ஆயி 10-30 | சித் 60 | சங்கடஹர சதுர்த்தி, நவக்கிரகசாந்தி செய்ய |
| 24 | 8 | வியா | பஞ் 52-40 | மகம் 4-45 பூரம் 59-48 | அ 4-45 சித் | அவமாகம், சித்திரம் எழுத, மாடு வாங்க |
| 25 | 9 | வெ | சஷ் 46-50 | உத் 55-48 | சி 55-48 அ | விதை விதைக்க, கதிரறுக்க |
| 26 | 10 | சனி | சப் 42-8 | அஸ் 52-58 | மா 60 | கெற்போட்ட நிவர்த்தி நா- |
| 27 | 11 | ஞா | அஷ் 38-33 | சித் 51-20 | சித் 60 | அஷ்டகா ஸ்ராத்தா [33-33 |
| 28 | 12 | திங் | நவ 36-15 | சுவா 50-43 | அ 50-43 மா | திஸ்ரோஷ்டகா |
| 29 | 13 | செவ | தச 34-55 | விசா 51-15 | மா 51-15 சி | மகரரவி நா-50-13, போகி பண்டிகை |

